உ

நம்பர் 229 சிவமயம்.

# தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்,
## திருவள்ளுவர் நூல் நிலயம்,
## பாகனேரி.

இஃது

ஸ்ரீமான் [illegible] அவர்களால்

இனமளிக்கப்பெற்றது.

..................ஆண்டு ................திங்கள் ................நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.

AUTHOR :

C. R. NAMASIVAYA MUDALIAR

*...nior Tamil Pandit, S. P. G. High School, Vepery, Madras*

3433

# MODEL ESSAYS

## IN TAMIL

PUBLISHERS :

C. COOMARASAWMI NAIDU & SONS

*35, Chinnatambi Street, Madras, E.*

PRINTED AT
THE 'CAXTON PRESS'
MADRAS

# கட்டுரைத் தொகுதி

3433

சென்னை வேப்பேரி
எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபருமாகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

புதுப் பதிப்பு

சென்னை
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
[ரிஜிஸ்தர் செய்தது] 1911 [விலை 8 அணா

# PREFACE

The essays in the following pages are intended to serve as models. They have been mostly done as exercises in composition in my classes in the course of the year. It is a misapprehension to think that students are required to enter into an academical discussion of the subject they are asked to write on, or exhaust it in its many-sided aspects. If they collect their thoughts together on the subject, arrange them in a logical order, and express them clearly and distinctly, they are sure to give the fullest satisfaction to the examiner. Care has been taken, in the preparation of this book, to inculcate a logical method of arranging the facts and show how to present them with directness and force. The language employed is just that which a more-than-average student of the Sixth Form can be expected to write.

C. R. NAMA SIVAYA

## COURSES OF STUDY

The Vernacular composition should be in simple modern idiomatic prose. Full freedom will be allowed in regard to style.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மயில் | 1 |
| 2. | பஞ்சு | 3 |
| 3. | சுகத்தைக் காக்கும் முறை | 5 |
| 4. | நாம் நீராடுவதேன்? | 7 |
| 5. | பருவ காலங்கள் | 9 |
| 6. | இரும்பு | 11 |
| 7. | ஒட்டகம் | 13 |
| 8. | சர்க்கரை | 15 |
| 9. | பட்டு | 17 |
| 10. | காப்பிச்செடி | 19 |
| 11. | இந்திய ரப்பர் | 21 |
| 12. | முத்து | 23 |
| 13. | மாணாக்கர்கள் | 25 |
| 14. | நெருப்புக்கோழி | 27 |
| 15. | பொன் | 29 |
| 16. | வேளாண்மை | 31 |
| 17. | பயிரிடல் | 33 |
| 18. | சிங்கம் | 35 |
| 19. | சூரிய காந்தி | 37 |
| 20. | மழை | 39 |
| 21. | தபால் | 41 |
| 22. | யானை | 43 |
| 23. | தேயிலை | 45 |
| 24. | புகையிலை | 47 |
| 25. | கல்யாணை | 49 |

26. பேராசை பெருந்துயர் - - - - - 51
27. கிளிகள் - - - - - 53
28. பொய் பேசுதல் - - - - - 55
29. ஆந்தை - - - - - 58
30. கடவுள் ஒருவர் உண்டு - - - - 60
31. பொருமை - - - - - 62
32 உப்பு - - - - - - 64
33. வேர்கள் - - - - - 66
34. ஆறு - - - - - - 68
35. கடல் - - - - - 70
36. வர்த்தகம் - - - - - 72
37. தண்ணீர் - - - - - 74
38. நாணயம் - - - - - - 76
39. காடு, மலை - - - - - 78
40. பொங்கல் - - - - - 80
41. கால ஒழுங்கு - - - - - 82
42. தாவரங்களால் உண்டாகும் நன்மைகள் - - 84
43. தேகாப்பியாசம் - - - - 86
44. விடா முயற்சி - - - - - 88
45. உண்மை - - - - - 90
46. கிறிஸ்துமஸ் பண்டிகை - - - - 92
47. வர்த்தமான பத்திரிகை - - - - 94
48. கைத்தொழில் - - - - - 96
49. முஹறம் பண்டிகை - - - - 98
50. நல்லொழுக்கம் - - - - - 100

3433

# கட்டுரைத் தொகுதி

## 1. மயில்

மயில் கோழி யினத்திற் சேர்ந்த தோர் பட்சி. மயிலை ஒரு பெருங் கோழி யென்று கூறலாம். அது பசுமை, நீலம், பொன்மை முதலிய பல நிறங்களை அடைந்து, அழகாய்த் தோன்றுகின்றது. மயிலின் நிறத்திற்கு வான வில்லின் நிறத்தை உவமை கூறலாம். பெண் மயில் ஆண் மயிலைப்போல் அவ்வளவு அழகானது அன்று. மயில் சுமார் இரண்டரை அடி உயரமும், தோகை உட்பட ஐந்து அடி நீளமும் இருக்கும்.

2. மயிலுக்குத் தலை சிறியது. அதற்கு உச்சியில் கொண்டை யுண்டு. மயிலின் உடலுக்குத் தக்க இரக்கைகள் இன்மையால், அது நன்றாய்ப் பறக்கும் சக்தி யற்று இருக்கிறது. மயிலின் தோகை, மிகவும் நீண்டு, அழகிய கண்களைக்கொண்டு விளங்குகிறது. மயில், தன் தோகையை விரித்து ஆடும்போது, பார்ப்பவர் கண்ணுக்கு ஆநந்தம் விளைக்கும். மயில் நன்றாய்ப் பறக்குந் தன்மை யற்று இருந்தாலும், நீண்ட கால்கள் இருப்பதனால், விரைவாய் ஓடும்.

3. மயிலின் உருவம் பார்வைக்கு அழகியதாய்த் தோன்றினாலும், அதன் தொனி கேட்பதற்கு அருவருப்பாய் இருக்கும். மயில் காட்டகத்தில் கூட்டமாய் வசிக்கும் இயல்புடையது. மேகத்தைக் கண்டால் மயிலுக்கு விருப்பம் அதிகம். அதனால், அது, கார் காலத்தில் அடிக்கடி அகவும். ஆண் மயில், பெண் மயில் இடும் முட்டையைக் கண்டால், மிதித்து உடைத்து விடும். ஆகையால், பெண் மயில் ஆண் மயில் அறியாவண்ணம் முட்டையிட்டுப் பாதுகாக்கும்.

4. முற்காலத்தில் மயில், இந்தியாவிலும் ஜாவாவிலும் மாத்திரம் இருந்ததாகச் சொல்லுகின்றனர். பிறகு, அதனை இவ்விடங்களிலிருந்து பல்வேறு தேசத்தவர்கள் கொண்டு போயினர் என்பது சரித்திர மூலமாய்த் தெரிய வருகின்றது. இப்போது, மயில் உஷ்ண தேசங்களில் மிகுதியாகக் காணப்படுவதன்றி, மற்ற நாடுகளிலும் பரவியிருக்கின்றது.

5. மயில் கோழியைப் போலவே, பல வகையான தானியங்களையும், புழுப் பூச்சிகளையும், பூவரும்புகளையும் தின்னும். பாம்பைக் கண்டால் குத்திக் கொன்று விடும். ஆனால் அதைத் தின்பதில்லை.

6. சிலர் மயிலின் முட்டையையும் மாமிசத்தையும் தின்கின்றனர். மயில் இறகினால் விசிறி முதலிய பொருள்கள் செய்வதுமன்றி, சுதேச வைத்தியர்கள் அதை மருந்திற்கும் உபயோகிக்கின்றனர்.

## 2. பஞ்சு

பஞ்சு, பருத்தி யென்னும் ஒரு வகைச் செடியிலிருந்து உண்டாகிறது. பருத்திக் காய்க்குள் பஞ்சும் விதையும் நிறைந்திருக்கும். பருத்தி மூன்று வகைப்படும். அவற்றுள் ஒன்று நிலத்திற் படரும் தன்மையுடையது. மற்றொன்று செடியாக வளரும் இயற்கையுள்ளது. வேறொன்று மரமாக உயர்ந்து வளரும் இயல்புடையது. இந்த உயர்ந்த மரத்திற்கு இலவ மரம் என்று பெயர். இலவ மரத்தில் முள்ளிலவு என்னும் மற்றொரு வகை யுண்டு. முள்ளிலவின் காய் செக்கச்செவே லென்று மிக அழகா யிருக்கும். அது முற்றின வுடனே வெடித்துச் சிதறிப்போகும். இதன் காயைக் கண்ட கிளிகள், "நன்றாய்ப் பழுக்கட்டும், பிறகு அதை அருந்தலாம்" என்று எண்ணிக் காத்திருந்து, அது வெடித்துவிட்ட பிறகு, ஏமாந்து போகின்றன. இதனால் தான், "இலவு காத்த கிளியானேன்" என்னும் பழமொழியும் வழங்கி வருகின்றது.

2. இலவம் பஞ்சு மிகவும் மிருதுவா யிருப்பதால் அதைத் தலைக்கணைக்கும், மெத்தைக்குமே மிகுதியும் உபயோகிக்கிறார்கள். மூன்று வகைப் பஞ்சுகளிலும் தரையிற் படரும் வகையே அதிக உபயோகமானது. பருத்தி, கரிசல் காடுகளில் விசேஷமாய்ப் பயிராகிக், காய்கள் முற்றி வெடித்து உதிர்கின்றன. அக் காலத்தில் அங்குள்ள ஸ்த்ரீகளும் சிறுவர்களும் சிறுமிகளும் அதே தொழிலாகத் திரிந்து, உதிர்ந்த பருத்திக் காய்களைப் பொறுக்கிச் சேர்ப்பார்கள். பிறகு, காய்களின் உள்ளே யிருக்கும் பஞ்சையும் கொட்டையையும் வேறாகப் பிரித்து உலர்த்துவார்கள். உலர்த்திய விதைகளை

நன்றாய் ஊறவைத்து, இடித்துப், பசுக்களுக்கும் எருதுகளுக்கும் உணவாக வைப்பார்கள். இதைத் தின்னும் பசுக்கள் அதிகமாகப் பால் கொடுக்கின்றன.

3. திருநெல்வேலி ஜனங்கள், தாங்கள் சேகரிக்கும் பஞ்சைத் தூற்றுக்குடிக்கு அனுப்பிச், சிறிது சுத்தஞ் செய்து, மூட்டைகளாகக் கட்டி, யந்திரங்களில் வைத்து அழுத்தி, பொதிகளாக்கி, இதர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

4. வட அமரிக்காவில் பயிரிடப்படும் பருத்தியே மிகவும் சிறந்ததாக எண்ணப்படுகின்றது. வட அமெரிக்கர் பருத்தியை ஊக்கத்தோடு பாதுகாத்து, விருத்தி செய்கிறார்கள். அங்கில வியாபாரிகள் அமெரிக்காவின் பஞ்சுக்கே அதிக விலை கொடுத்து வாங்குவதால், நமது நாட்டுப் பஞ்சு மிகுதியும் சீன தேசத்துக்கு ஏற்றுமதி யாகிறது.

5. நமது தேசத்தவர்கள் பருத்தியைப் பயிரிடுவதிலும், அதைச் சுத்தஞ் செய்வதிலும் சற்று ஊக்கங் கொண்டு பிரயாசப் படுவார்களானால், நமது நாட்டுப் பஞ்சு முழுவதும் உள் நாட்டிலேயே விரைவில் விலையாகிவிடும். அதனால், மிகுந்த லாபங் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. அங்கிலேயர் நமது நாட்டுப் பஞ்சைச் சொற்ப விலைக்கு வாங்கி, அதைத் திரும்பவுஞ் சுத்தப்படுத்தி, நூலாக நூற்று, வஸ்திரங்கள் நெய்து, சொற்ப விலைக்கு விற்று, அதிக லாபம் அடைகிறார்கள். அவ்வித ஊக்கத்தை நமது நாட்டிலுள்ளவர்களும் கொள்வார்களானால், எவ்வளவு பிரயோஜனகரமாயிருக்கும்!

## 3. சுகத்தைக் காக்கும் முறை

நாம் இவ்வுலகில் உயிரோடு வாழுமளவும், நோய் இல்லாமல் இருக்க வேண்டுவது அவசியம். நோயில்லாமல் வாழ்வதைவிடச் சிறந்த செல்வம் வேறில்லை. அதனால், "நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்" என்னும் பழமொழியும் வழங்குகின்றது. அவ்வாறு, நாம், சரீர சுகத்தோடிருக்க ஏற்ற சாதனங்களாய் இருப்பவை நான்கு பொருள்கள். அவை—ஆகாயம், ஜலம், ஆகாரம், உடை என்பனவாம். இவை நான்கும் சுத்தமாயும், அந்தந்தக் காலத்திற்கு ஏற்றவையாயும் இருந்தால், நாம் எப்போதும் சுகத்தோடே வாழலாம்.

2. இவற்றுள் ஆகாயம் மற்ற மூன்றிலும் முக்கியமானது. ஏனெனில், ஆகாயம் இல்லாமல் ஒரு நிமிஷமும் இருக்க நம்மால் இயலாது. இதற்கு இரண்டாவதானது ஜலம். மூன்றாவதானது உணவு. உடை நான்காவதானதாம். பிராணவாயு ஒரு பங்கானால், அதனோடு நான்கு பங்கு இலவண வாயு கலந்திருக்கிறது. இவ்வாறு கலந்திருப்பதே சுத்த ஆகாயமாம். இப்படிப்பட்ட ஆகாயத்தை நாம் சுவாசிக்கும்பொழுது, நமக்கு தேகாரோக்கியமும், தேக பலமும் உண்டாகின்றன. இதுவன்றி, அழுகிய பதார்த்தங்கள் ஜலதாரைகள் முதலிய இடங்களிலிருந்து உண்டாகும் விஷவாயுக்களைச் சுவாசிப்பதனால், பலவித நோயும், பலவீனமும் உண்டாகின்றன.

3. இனி, தண்ணீரைப்பற்றி ஆராய்வோம். நாம் உட்கொள்ளும் ஜலம், மிகவும் சுத்தமுள்ளதாக இருக்க வேண்டும். மழைத் தண்ணீர் மிகச் சுத்தமானதே. ஆயினும், அது பூமியோடு சம்பந்தப்பட்டுப், பலவகை-

யிலும் கெட்டுப் போகின்றது. ஆற்றுநீர் சுத்தமான-தாகக் காணப்பட்டாலும், பல விடங்களில், பிணங்களை ஆற்றில் எறிவதனாலும், ஆற்றோரங்களில் பிணங்களை எரிப்பதனாலும் அது முற்றும் கெட்டுப்போகிறது.

4. ஏரி குளம் முதலிய நீர் நிலைகளி லுள்ள ஜலம், அதில் ஆடு மாடுகளைக் குளிப்பாட்டுவதனாலும், துணி துவைப்பதனாலும், பாத்திரங்களைக் கழுவுவதனாலும், மரம் நார் முதலியவற்றை ஊறவைப்பதனாலும் கெட்-டுப் போகின்றது. இப்படிப்பட்ட ஜலத்தை நாம் உட்-கொள்வதனால், நமக்குப் பல பிணிகள் உண்டாகின்றன.

5. ஆகாரத்தை அளவோடு கொள்ள வேண்டும். "மீதூண் விரும்பேல்" என்னும் வாக்கியப்படி அமித-மாக ஆகாரம் கொள்ளலாகாது. தக்க தேகாப்பியாச-மும், மனமுயற்சியுமுள்ள மனிதர்கள் ஒரு தினத்-திற்குத் தமது தேக நிறையில் இருபதில் ஒரு பங்கு போஜனம் உட்கொள்ள வேண்டுமாம். அதில் மூன்-றில் ஒரு பங்கு கன பதார்த்தமாகவும், மற்ற இரண்டு பங்கு ஜல பதார்த்த மாகவும் இருத்தல் வேண்டும்.

6. நாம் சாப்பிடும் போஜனம் ஜீரணமாகச் சரா-சரி மூன்று மணி நேரஞ் செல்லும். அதன் பின்பு, இரண்டுமணி நேரமாவது வயிறு இளைப்பாறவேண்டும். ஆகவே ஐந்துமணி நேரத்திற்கு ஒருதரம் போஜனஞ் செய்ய வேண்டும். அதாவது, காலை எட்டு மணிக்குக் காலைச் சாப்பாடும், ஒரு மணிக்கு மத்தியானச் சாப்பா-டும், இரவு எட்டுமணிக்கு இராச் சாப்பாடும் முடித்துக்-கொண்டு, பத்துமணிக்குப் படுக்கப் போவது உத்தமம்.

## 4. நாம் நீராடுவ தேன்?

நமது தேகத்திற்கு மேற் போர்வையா யுள்ள தோல் முழுதும் சிறிய துவாரங்கள் அடர்ந்திருக்கின்றன. அவை, பூதக் கண்ணாடியின் வழியாய்ப் பார்த்தா லொழிய கண்ணுக்குப் புலப்படா.

2. இந்தத் துவாரங்களின் மூலமாய் தேகத்தி லிருந்து வேர்வை நீர் எப்பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டே யிருக்கும். நமது தேகம் அதிக சூடாய் இருந்தால், வேர்வை மிகத் துரிதமாய் வெளிவரும். அப்போது, நமது உடலின் மேல் ஜலம் துளித்துளியாய் நிரம்பத் தங்கி யிருப்பதை நாம் வெளிப்படையாய்க் காணலாம்.

3. அந்த வியர்வை நீரில் பாதி ஜலமும், பாதி மெழுகு போன்ற ஒருவகை அழுக்கும் கலந்திருக்கும். அந்த ஜலம் காற்றினல் உலர்ந்துபோனல், அழுக்கு மாத்திரம் மேலே தங்கிவிடும். ஆதலால், நாம் ஒரு தொழிலுஞ் செய்யாமல், சும்மா இருந்தபோதிலும், நமது தேகமும் ஆடைகளும் மலினம் அடைகின்றன. அடிக்கடி வேர்வையைக் கழுவித் துடைத்து, ஆடை-களைக் களைந்து, சுத்தமான மற்றென்றைத் தரித்துக் கொள்ளா விட்டால், நம்மைச் சமீபிக்கிறவர்களுக்கு நம்மிடத்தில் அருவருப்பு உண்டாகும் அன்றி, நமக்-கே துர்கந்தம் வீசும்.

4. சவுக்கியத்திற் காகவே தினந்தோறும் அழுக்-குப் போகத் தேய்த்துக் குளிக்கவேண்டும். இல்லா விட்டால், அழுக்கு, தேகத்தி லுள்ள ரோமத் துவாரங்-களில் தங்கி, உள்ளே இருக்கும் கெட்ட அழுக்கு

வெளியே வரவொட்டாமல், அந்தச் சிறு துவாரங்களை அடைத்துவிடும். அழுக்கு, தேகத்தின்மேல் தங்கினால், நமக்கு அதிக அசௌக்கிய முண்டாகும். அதனாலேயே நாள்தோறும் உடம்பைத் தேய்த்து நீராடிச் சுத்தமாக வைத்துக்கொண் டிராதவர்கள், எப்போதும் குளிர் சுரம் முதலிய ரோகங்களினால் அடிபட்டு வருந்துகிறார்கள். தங்கள் தேகத்தைச் சுத்தமாக வைத்துக்கொண் டிருப்பவர்களுக்கு, இப்படிப்பட்ட நோய்கள் அதிகமாய்க் காண்பதில்லை.

5. சிலர், தினந்தோறும் காலையில் கைகால்களை அலம்பி, முகத்தைக் கழுவிக் கொள்வதினாலேயே தாங்கள் மிகச் சுத்தமாக இருப்பதாய் நினைத்துக் கொள்ளுகிறார்கள். வியர்வைநீர் சதா தேகமெங்கும் வெளிப்பட்டுக்கொண்டே யிருப்பதால், உடல் முழுவதையும் தேய்த்துக் கழுவி நீராடாதவர்கள் ஒருபோதும் சுத்தமடைய மாட்டார்கள்.

6. வேர்வையி லிருக்கும் மாசு முழுவதும் நாம் உடுத்துக் கொள்ளும் வஸ்திரத்தில் படுகின்றது. அந்த அழுக்கு தேகத்தின்மேல் எவ்வளவு தங்குகின்றதோ, அவ்வளவும் தேகத்திற்குக் கெடுதியே உண்டாகும். உடலை நன்றாய்த் தேய்த்துக் குளித்து, அழுக் கற்ற உடையைத் தரித்துக் கொள்பவர்கள், தமது தேகம் எவ்வளவு சுத்தமாயும் சுகமாயும் இருக்கிற தென்பதை உணர்வார்கள்.

## 5. பருவ காலங்கள்

ஒரு தினத்தில், காலை நடுப் பகல் மாலை எனக் கால வேறுபாடுகள் தோற்றுவது போல, வருஷத்திலும் காலங்கள் வேறுபடுகின்றன. கால வேறுபாடுகள் தோன்றும் அவ்வக் காலத்திற்குத் தக்கபடி, மனிதன் முதலிய பிராணிகளுக்கும், தாவர முதலியவற்றிற்கும் வேறுபாடுகள் தோன்றுகின்றன. இந்த வேறுபாடுகளும், அவ்வப்போது தோன்றுஞ் சீதோஷ்ண ஸ்திதியை அநுசரித்தே யமைகின்றன.

2. தென் இந்தியாவின் கீழ்த் திசையாகிய இந்த நாடுகளில், ஒரு வருஷத்திற்குப் பருவ காலங்கள் ஆறும். அவையாவன — கார் காலம், குளிர் காலம், முன்பனிக் காலம், பின்பனிக் காலம், இளவேனிற் காலம், முதிர்வேனிற் காலம் என்பனவாம்.

3. இந்தியாவின் வடபாகத்திலும், ஐரோப்பாக் கண்டத்திலும், அமெரிக்கா முதலிய விடங்களிலும் வருஷத்திற்குப் பருவங்கள் நான்காம். அவை — வசந்தம், கோடை, வறளை, மாரி என்பனவாம்.

4. நமது நாட்டில் இரண்டிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு பருவம் மாறி வருகின்றது. ஆவணியும் புரட்டாசியும் கார்காலம்; ஐப்பிசியும் கார்த்திகையும் குளிர்காலம்; மார்கழியும் தையும் முன்பனிக் காலம்; மாசியும் பங்குனியும் பின்பனிக் காலம்; சித்திரையும் வைகாசியும் இளவேனிற் காலம்; ஆனியும் ஆடியும் முதிர்வேனிற் காலம்.

5. மேகங்கள் கூடி மழை பெய்யுங் காலமே கார் காலம் என்னப்படும். இக் காலத்தில் மரஞ் செடிகளில் புஷ்பங்கள் இரா. மழை பெய்வதனால் விலங்குகள்,

பறவைகள் முதலிய ஜந்துக்கள் இரை யகப்படாமை-யினாலும், ஈரத்தினாலும் நொந்து வருந்தும். குளிர் காலத்திலும் மழை பெய்வ துண்டு.

6. முன்பனிக்காலம் ஐரோப்பியருக்கு மிக இன்ப-கரமானது. அக் காலத்தில் பூஞ்செடிகளில் புஷ்பங்கள் அழகாய் மலர்ந்து நிறைந்திருக்கும். இந்தப் பருவத்தில் நெற்பயிர் முற்றிக், கதிர்க ளெல்லாம் தலை சாய்ந்து நிற்கும். குடியானவர்கள் அனைவரும், தாங்கள் பட்ட பாட்டின் பயனை யனுபவிக்க, விளைச்சலை அறுத்துக், களத்திற் போட்டு அடித்து, மணியையும் தாளையும் வேறு பிரித்து, அருமையாய்க் கொண்டு போய்த் தத்-தம் அகத்தில் சேர்ப்பார்கள். இக் காலத்தில் குளிர் மிகுதியாய்த் தோற்றும். ஆகையால், இந்தப் பருவத்-தில் வைக்கோல் வேய்ந்த வீட்டில் வசித்தால் சுகமா யிருக்கும். இதனை, "தையும் மாசியும் வை யகத்து உறங்கு" என்னும் வாக்கியத்தால் அறியலாம்.

7. இளவேனிற் பருவமே தமிழ் நாட்டாருக்கு மிக்க இன்பமான காலம். இக் காலத்தில் பறவைகள் யாவும் கூவிக் களித்துக், கூடுகட்டத் தொடங்கும். தருக்க ளெல்லாம் தளிர்த்து தழைத்து, அரும்பிப் பூத்துப், புஷ்பங்களாற் பிரகாசித்து விளங்கும். ஆனால், சில நாட்களில் இலைகளும் பூவிதழ்களும் வாடி யுதிர்ந்து, பிஞ்சுவிட்டுக் காயாகி, வெப்பங் கொண்டு பழுக்கும்.

8. முதிர்வேனிற் பருவத்தில் பறவைகள் யாவும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். அக் காலத்தில் பட்சிகள் மரங்களில் மறைவிருந்து, இனிமையாகப் பாடி, மாந்தர்க்கு இன்பம் விளைக்கும்.

# 6. இரும்பு

இரும்பைப்போலப் பிரயோசன முள்ள உலோகம் ஒன்றில்லை. அது கருமை நிறமாய்க் காணப் படுவதனால் 'கரும் பொன்' என்றும் பெயர் பெறும்.

2. இரும்பு கருமை கலந்த நீல நிற முடையது. அது மிகக் கனமானது. ஆயினும், பொன்னுக்குச் சமமான கனமுள்ள தன்று. இரும்பு, தண்ணீரைவிட எட்டு மடங்கு கனமுள்ளது. பொன்னோ தண்ணீரைப் போல் பத்தொன்பது மடங்கு கனமுள்ளது.

3. இரும்பை நெருப்பிலிட்டுக் காய்ச்சித் தகடாக அடிக்கலாம்; கம்பியாகவும் நீட்டலாம். அதை மிகுதியும் காய்ச்சினால் உருகிவிடும். இரும்பை நெடுநாள் உபயோகிக்கா விட்டாலும், அதில் ஈரம் படவிட்டாலும் துருப் பிடித்துவிடும். இரும்பைச் சிக்கிமுக்கிக் கல்லில் தட்டினால் தீ யுண்டாகும். இரும்பை நெருப்பிற் காய்ச்சக் காய்ச்ச அது நயப்பான தாகும். அதுவே எஃகு என்னப்படும்.

4. இரும்பு சுரங்கத்தி லிருந்து எடுக்கப்படும் போது, மண் கல் முதலிய வேறு சில வஸ்துக்களோடு கலந்திருக்கும். அதைத் தண்ணீர் விட்டு நன்றாய்க் கழுவிப், பெரிய கட்டிகளைப் பொடியாக நறுக்கி, உலையிலிட்டு உருக்குவார்கள். உருக்கும்போது, இரும்பைச் சுத்தி செய்ய, அதனோடு கரியும் சுண்ணாம்பும் சேர்ப்ப துண்டு. அதனால், இரும்போடு சேர்ந்திருந்த மண் கல் முதலிய பொருள்களெல்லாம் மேலே நிற்கும். இரும்பு மாத்திரம் தண்ணீர்போல் உருகிக் கீழே தங்கி விடும். உருகிய இரும்புக் குழம்பை, அச்சுகளில்

ஊற்றி ஆற வைப்பார்கள். பின்பு, அந்த இரும்பை வேண்டிய படியே உபயோகித்துக் கொள்ளலாம். எங்கிலந்து, பர்மிங்காம், ஷெப்பீல்ட், டட்லி முதலிய விடங்களில் இரும்புச் சாமான்கள் அமிதமாய்ச் செய்யப்படுகின்றன.

5. இரும்பினால் பலவகையான யந்திரங்கள், தூண்கள், குழாய்கள் முதலியவை செய்யப்படும். ஆணி பூட்டு சாவி முதலிய வீட்டுச் சாமான்களும் செய்யப்படும். தச்ச வேலை, தட்டார வேலை, விவசாய வேலை முதலிய கைத் தொழில்களுக்கு வேண்டிய கருவிகள் செய்யப்படுகின்றன. இது, துப்பாக்கி பீரங்கி குண்டு முதலிய யுத்தாயுதங்கள் செய்ய உதவுகிறது. கப்பல், இருப்புப்பாதை முதலியவை செய்யப்படுவது இரும்பினாலேயே. இவ் வுலகத்தில் நடக்கும் சகல காரியங்களுக்கும் இரும்பு மிகவும் இன்றியமையாதது. இவ் வுலோக மில்லாமல் எந்தக் காரியமும் நிறைவேறாது.

6 கத்தி ஈட்டி வாள் ஊசி பேனாமுள் முதலிய பொருள்கள் மேலான இரும்பாகிய எஃகினால் செய்யப்படுகின்றன. இரும்பைத் திராவகமாகவும் செந்தூரமாகவும் செய்து மனிதர்கள் மருந்தாக உபயோகிக்கிறார்கள். "இளைத்தவன் இரும்பைத் தின்னவேண்டும்" என்னும் பழமொழியும் வழங்குகிறது. மெல்லிய இரும்புத் தகட்டின்மேல் தகரத்தைப் பூசிப் பலவிதமாய் உபயோகிக்கிறார்கள். ஒரு வருடத்தில் எங்கிலாந்தில் மாத்திரம் செய்யப்படும் இரும்பின் விலை சுமார் முப்பதுகோடி ரூபாய் மதிப்பாகுமாம்.

## 7. ஒட்டகம்

மிருகங்களில், காட்டு மிருகங்கள் நாட்டு மிருகங்கள் என இருவகை யுண்டு. காட்டு மிருகங்கள் காட்டில் வசிப்பவைகளாம். நாட்டு மிருகங்கள், மனிதருக்கு உபயோகமாக வீட்டில் வளர்க்கப்படுவனவாம். இந்த நாட்டில் நமக்குப் பசுக்கள் பயன்படுவது போல, அரபியருக்கு ஒட்டகங்கள் பயன்படுகின்றன.

2. ஒட்டகம் ஒரு விந்தையான விலங்கு. அது பார்வைக்கு விகாரமாயும் நெட்டையாயும் இருக்கும். அது ஏறக்குறைய எட்டடி உயர முள்ளது. ஒரு பொருளை அதன் உருவத்தினால் மதிக்காமல் குணத்தினால் மதிக்கவேண்டும். ஒட்டகம் பார்வைக்கு விகாரமாய்த் தோன்றினாலும், அது உபயோகத்தில் சிறந்து விளங்குகின்றது.

3. அரேபியா தேசத்தை யடுத்து மிக விஸ்தாரமான மணல் வெளிக ளுண்டு. அவை பாலைவனம் எனப்படும். அங்கு நீரும் நிழலும் காண்ப தரிது. அந்த வனாந்தரத்தில் பிரயாணஞ் செய்வது ஒட்டகத்திற்கும், தீப்பறவைக்குமே யன்றி மற்றெந்தப் பிராணிக்கும் சாத்திய மன்று. வேறு எவ்வகையிலுங் கடந்து போகக்கூடாத சமுத்திரத்தை, நீராவிக் கப்பலின் மூலமாய்க் கடந்து போவதுபோல், பாலை வனங்களை ஒட்டகத்தின் மூலமாகவே கடக்கும்படி நேரிடுகின்றது. அதனால் ஒட்டகத்திற்கு, 'வனாந்தரக் கப்பல்' என்னும் பெயர் வழங்குகிறது. இவ் விலங்கு கடவுளால் இவ்வகைய உபயோகத்திற்கென்றே சிருஷ்டிக்கப்பட்டதென்பது அதன் இயற்கைத்தன்மையால் புலப்படும்.

5. ஒட்டகம், நீர் நிலையைக் கண்ட விடத்தில் தனக்கு வேண்டியமட்டும் குடித்து வயிற்றை நிரப்பிக்கொண்டு, சுமார் ஒருவாரம் வரையில் தண்ணீர் குடியாமலே பிரயாணஞ் செய்யும். இதுவன்றி உணவு இல்லாமலும் இருப்பதுண்டு. இந்தச் சக்தி எந்தப் பிராணிக்கும் உண்டாவது அரிது. ஒட்டகத்திற்கு முதுகில் ஒருவகைக் கூனுண்டு. அதற்கு முசுப்பு என்று பெயர். அம் முசுப்பு முழுதும் கொழுமை யானது. ஒட்டகம் ஆகார மில்லாமல் பசியால் வருந்தும்போது, அந்த முசுப்புக் கரைந்து, அதற்கு ஆகாரமாகிறது. ஒட்டகத்தின் பாதம் பிளவுபட்டு, அகன்றதா யிருபபதனுல், மணலில் செல்ல அநுகூலமா யிருக்கிறது.

6. ஒட்டகம் அமிதமான பாரத்தைத் தாங்கிச் செல்லும். அதன் எஜமானன் அதன்மேல் சுமையை ஏற்ற எண்ணும்போது, அது முழங்காற் படியிட்டுப் படுத்துக்கொள்ளும். சுமக்கக்கூடாத சுமையை, அவன், அதன்மேல் ஏற்றிஞல், அது மனத்தில் கபடம் வைத்துக்கொண்டு, நடந்து செல்லாமல், அசைவற்று நின்று விடும். அப்போது எஜமானன், அது காணும்படி, ஏதாவது ஒரு சிறு மூட்டையை அதன் மேலிருந்து எடுத்து எறிந்துவிட்டால், உடனே பிரயாணப்படும்.

7. ஒட்டகத்தின் பால் அரபியருக்குச் சிறந்த உணவாகிறது. அதன் உரோமம் வருஷத்திற்கு ஒரு முறை உதிர்ந்துவிடும். அதனுல் உடைகள் செய்யப்படுகின்றன. ஒட்டகத்திற்கு வேப்பிலையே விருப்பமான உணவு.

# 8. சர்க்கரை

சர்க்கரை சாதாரணமாய் ஒவ்வொருவருக்கும் தெரிந்துள்ள ஒருவகை இனிப்பான பொருள். இதில் பழுப்புச் சர்க்கரை யென்றும், வெள்ளைச் சர்க்கரை யென்றும் இருவகை உண்டு. இரண்டு பொருள்களும் கருப்பஞ் சாற்றினாலேயே செய்யப்படுகின்றன. பழுப்புச் சர்க்கரையை நன்றாய்ச் சுத்தப்படுத்தினால் வெள்ளைச் சர்க்கரையாகும்.

2. நன்றாய் முற்றின கருப்பங் கழிகளைச் சிறு சிறு துண்டுகளாகத் தறித்துக், கரும்பாலையி லுள்ள இரும்பு உருளைகளுக்கு இடையிலிட்டால், உருளைகள் சுழன்று, கருப்பங்கழியிலுள்ள சாற்றை முற்றும் பிழிந்துவிடும். அந்தச் சாறு முழுதும் திரண்டு, ஆலைக்குக் கீழே வைக்கப்பட்டிருக்கும் ஒரு பெரிய பாண்டத்தில் விழும். அந்தக் கருப்பஞ் சாற்றைக் காய்ச்சியே சர்க்கரை செய்கிறார்கள்.

3. கருப்பஞ் சாற்றைக் காய்ச்சுவதற்கு, ஈயம் பூசிய பெரிய செப்புப் பாத்திரங்களே ஏற்றவை. காய்ச்சும்போது, சாற்றோடு சிறிது சுண்ணாம்பு நீர் சேர்ப்பதனால், அதிலுள்ள அழுக்கெல்லாந் திரண்டு மேலே மிதக்கும். அந்த அழுக்கை வெகு சுலபமா யெடுத்து எறிந்துவிடலாம். பிறகு, சாறு நன்றாய்க் காய்ந்து, பதமாகச் சுண்டி வரும்போது, பாத்திரத்தைக் கீழே யிறக்கி ஆறவைப்பார்கள். அது நன்றாய் ஆறிய பிறகு உடைத்தால், தூளாய் நொறுங்கிப் பொடியாகும். அதுவே பழுப்புச் சர்க்கரையாம்.

4. பழுப்புச் சர்க்கரையை வெந்நீரில் கரைத்துக் கம்பளப் பைகளில் பல முறை ஊற்றி வடிப்பார்கள்.

அதனால் சர்க்கரைத் தண்ணீர் சுத்தப்பட்டாலும், அதன் நிறம் பழுப்பாகவே யிருக்கும். அந் நிறத்தை மாற்றுவதற்கு, மிருகங்களின் எலும்பைச் சுட்டெரித்த கரியின்மேல் சர்க்கரைத் தண்ணீரை ஊற்றினால், தண்ணீரிலுள்ள அசுத்தமெல்லாம் கரியில் ஒட்டிக்கொண்டு, சர்க்கரைத் தண்ணீர் மாத்திரம் மிகவுஞ் சுத்தமாகக் கீழே இறங்கிவிடும். அந்த ஜலத்தை மறுபடியும் செப்புப் பாத்திரத்தில் ஊற்றிக், காற்று நுழையாதபடி இறுக மூடிப், பதமாகக் காய்ச்சியபிறகு இறக்கி விட்டால், நன்றாய் ஆறிச் சுத்தமான வெள்ளைச் சர்க்கரையாகும்.

5. நமது இந்து தேசத்தில் தென்னை பனை ஈந்து முதலியவற்றின் சாறுகளினாலும் சர்க்கரை செய்வதுண்டு. சென்னை ராஜதானியில் பீமன் பட்டணம், அஸ்கா, ராஜமகேந்திரவரம், மைசூர் ராஜ்யத்திலுள்ள அஷ்டகிராமம், திருவெண்ணெய் நல்லூர் முதலிய விடங்களில் பெரிய சர்க்கரைச் சாலைகள் உண்டு.

6. எங்க்லந்து தேசத்தில் பலவகை மரங்களிலிருந்தும் சர்க்கரை உண்டாக்கப்படுகின்றது. அவை யனைத்திலும் பீட்ரூட் என்னும் ஒருவிதக் கிழங்கிலிருந்து உண்டாகும் சர்க்கரையே சிறந்தது.

7. சர்க்கரை உப்பைப்போலவே தேகத்துக்குச் சௌக்கியத்தையும், புஷ்டியையும் தரத்தக்கது. சர்க்கரையையும் உப்பையுங் கரைத்துப் பதார்த்தங்களின் மேல் பூசிவைப்பதால், அவை சில நாட்கள் வரையில் கெடாமலிருக்கும். இக் காரணம் பற்றியே ஊறுகாய்களுக்கும் சிறிது சர்க்கரை சேர்க்கிறார்கள்.

8. சர்க்கரை பலவித பலகாரங்களுக்கு உபயோகப்படுவதன்றி, சிலவித ஔஷதங்களோடும் சேர்க்கப் படுகிறது.

## ௯. பட்டு

ஒரு வகைப் புழு தனது படுக்கைக்காக நூற்கும் நூலே பட்டு எனப்படும். அந்தப் புழு முசுக்கட்டைச் செடியில் மாத்திரம் வசிக்கும். அதற்கு அம் முசுக்கட்டை இலையே முக்கிய உணவாம்.

2. பட்டுப் பூச்சியின் உற்பத்தி, கேட்போர் எவருக்கும் வியப்பை உண்டாக்கும். பட்டுப் பூச்சி முட்டையிலிருந்து வெளியான எட்டுத் தினங்களுக்குப் பிறகு, முதல் முறை தன் தோலை உரித்துக்கொள்ளுகிறது. அப்போது அது வெண்ணிறமாய்க் காணப்படும். ஐந்து நாட்களுக்குப் பிறகு, அது இரண்டாம் முறை தோலை உரித்துக்கொள்ளும். மறுபடியும் ஐந்து நாட்களுக்கு ஒரு முறையாக இரண்டு தடவை தோலை உரித்துக்கொண்டு, கடைசியில் கம்பளிப் பூச்சியின் வடிவத்தை யடைகின்றது. பின்பு, அப் புழு தனக்கு ஒரு கூடு கட்டிக்கொள்ள வசதியான இடத்தைத்தேடி, முசுக்கட்டைச் செடியின் கிளையொன்றில், அதை யமைக்கும். அந்தக் கூட்டைக் கட்டுவதற்கு அமைக்கும் பொருள் எல்லாம் பட்டேயாகும். அந்தப் பொருள் மஞ்சள்நிறமும் பிரகாசமும் உள்ள ஒரு வகைப் பிசின்போல் காணப்படுகிறது. அது அப் புழுவின் உடலிலிருந்தே வெளிப்படுகின்றது.

3. பட்டுப் புழு, தன் வாயிலிருந்து உண்டாகும் உமிழ் நீரினால் கூட்டின் உட்புறத்தி லுள்ள பிசினைக் கரைத்து வழி யுண்டாக்கி, வெளியே போக முயலும். அப்போது, அது பட்டாம் பூச்சியை ஒத்திருக்கும்.

4. வியாபாரிகள், பட்டுப் பூச்சி விருத்தியாவதற்காக, பழுதுபடாத சில கூடுகளை மாத்திரம் விட்டு

வைப்பார்கள். பட்டுப் புழு, தன் கூட்டில் வழி செய்து கொண்டு, பறந்து வெளியே போய்விடுவதற்கு முன்னமே, புழுக்களோடு கூடுகளையும் சேர்த்து எடுத்து வெது வெதுப்பான வெந்நீரிலாவது வெயிலிலாவது போடுவார்கள். அதனால், கூடுகளிலுள்ள புழுக்கள் இறந்துவிடும். பிறகு, அக் கூடுகளைத் தக்கவாறு தரம் பிரிப்பார்கள்.

5. பட்டு நூலை, யந்திரத்தின் உதவியால், புரிகளாகவும் கட்டுகளாகவும் கட்டி, விற்பனைக்கு அனுப்புவார்கள். பட்டுச் சிப்பங்கள், இந்தியா பிரான்சு இத்தாலியா முதலிய தேசங்களிலிருந்து மிகுதியாய் ஏற்றுமதி செய்யப் படுகின்றன. ஐரோப்பா கண்டத்தின் பல பட்டணங்களிலும், வங்காளத்தி லுள்ள டாக்கா நகரிலும் பட்டுநூல் நெசவு அதிகம். சென்னை ராஜதானியில் திரிசிராப்பள்ளி மதுரை தஞ்சாவூர் காஞ்சீபுரம் முதலிய நகரங்களில் பட்டுநூல் நெசவு மிகுதியாய் நடைபெறுகிறது. மைசூர் நாட்டிலும் வங்காள தேசத்திலும் பட்டு உண்டாக்கப்படுகிறது.

6. பட்டு, ஆதியில் சீனாவில் மாத்திரம் உண்டாயிருந்தது. ஆனால், ஆறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில், சீன தேசத்திற்குச் சென்ற பாதிரிமார் இருவர், பட்டுப் பூச்சிகளின் முட்டைகளைக் கான்ஸ்தாந்திநோபிலுக்குக் கொண்டுபோய், அங்கு அவற்றைப் பொரிக்கச் செய்து, புழுக்களைப் பாதுகாத்துப் பட்டு உண்டாக்கினார்கள். பின்பு ஐரோப்பியரும் அந்தத் தொழிலை அறிந்தனர். நாளடைவில் அத் தொழில் பல்வேறு இடங்களிலும் சர்வ சாதாரணமாய்ப் பரவிவிட்டது.

## 10. காப்பிச் செடி

காப்பி, இலை தழைத்து ஓங்கி வளரும் ஒரு வகைச் செடி. அது, சாதாரணமாய் பதினைந்து அடி உயர்ந்து வளரும். ஆனால், காப்பித் தோட்டக்காரர்கள், செடி உயரமானால், பழங்களைப் பறிப்பதற்கு அனுகூலப்படாதென்று கருதி, அதை ஆறடிக்குமேல் வளரவொட்டாமல் வெட்டிவிடுகிறார்கள். காப்பிச்செடியின் புஷ்பம், நிறத்திலும் அளவிலும் வாசனையிலும் பெரும்பாலும் மல்லிகைப் பூவை ஒத்திருக்கும். காய்கள் உருட்சியானவை. பழத்தின் மேற்புறம் சிவப்பு அல்லது மங்கின நீல நிறமாகக் காணப்படும்.

2. காப்பித்தோட்டம் வைத்து விருத்தி செய்வதற்கு, மிகுந்த காற்றில்லாமல் மிதமான ஈரமுள்ள மலையடிவாரங்களே தகுதியானவை. காப்பிச் செடிக்கு அமிதமான காற்றாவது மழையாவது ஆகாது. காப்பிச் செடி வைப்பதற்குத் தகுதியான இடத்தில், ஐந்து அடிக்கு ஒன்றாக, வரிசையாய் ஆழமான குழிகள் தோண்டி, அவற்றில் நல்ல எருவிட்டு, விதையையாவது, நாற்றுவிட்ட சிறு செடிகளையாவது நடுவார்கள். நட்ட பிறகு, அக் குழிகளில் களை யுண்டாகாதபடி கொத்திக்கொண்டே இருப்பதுமன்றி, எருவும் போடவேண்டும். அந்தந்தக் காலங்களில் உண்டாகும் காற்றையும் மழையையுங் கவனித்துச் செடியைப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும். முதல் வருஷத்தில் காப்பிச் செடிகள் பலன் கொடுப்பதில்லை.

3. முற்றின வுடனே காய்களை அறுக்காமல் விட்டு வைத்தால், அவை பழுத்து உதிர்ந்துவிடும். தோட்டக்காரர் அப் பழங்களைப் பொறுக்கிச் சேர்ப்பார்கள்.

பிறகு, மற்றக் கனிகளையும் குலுக்கிச் சேர்த்து, இரண்டொரு நாள் குவித்து வைத்துக் காலால் மிதித்தால், தோல் முழுதும் சுலபமாய் நீங்கிப் போகும். பிறகு, அக் கொட்டைகளைப் பெரிய தண்ணீர்த் தொட்டியில் போட்டுக் கழுவி, வெயிலிலாவது தீயின் அனலிலாவது காயவைப்பார்கள். அதன் பின், அந்தக் கொட்டைகளை உபயோகித்துக் கொள்ளலாம்.

4. அராபியாவி லுள்ள மொக்காவிலும், ஜாவாவிலும், தென் அமெரிக்காவிலுள்ள பிரேஜில் முதலியவிடங்களிலும் காப்பித்தோட்டங்கள் விசேஷமாயுண்டு. பிரேஜில் நாட்டில் உண்டாகும் கொட்டையே சிறந்தது. மொக்காவி லுண்டாகுங் காப்பிக்கொட்டை சிறுத்து, நீலங் கலந்த வெண்ணிறமா யிருக்கும் ஜாவாவில் உண்டாகுங் கொட்டை மற்றெல்லாக் கொட்டைகளிலும் பெரிதாயும், மஞ்சள் நிறமாயும் இருக்கும்.

5. உலக மெங்கும் பயிரிடப்படும் காப்பிக்கொட்டையில் பாதிக்கு மேல் பிரேஜில் நாட்டி லுண்டாகிறது. முதலில், காப்பிச்செடி ஆப்பிரிக்கா கண்டத்திலிருந்து பாரஸீகத்திற்குக் கொண்டுபோகப்பட்டதாம். இப்போது அது உலகத்தின் பற்பல பாகங்களிலும் மிகுதியாய் விருத்திசெய்யப்படுகிறது. நமது சென்னை ராஜதானியிலும், நீலகிரி ஏர்க்காடு முதலிய இடங்களில் காப்பிச் செடி மிகுதியாப் பயிரிடப்பட்டுவருகிறது.

6. காப்பிக்கொட்டை, கஷாயம் செய்து பானம் பண்ணுவதற்கு உதவுகிறது. பச்சைக் கொட்டையை அங்கிலவைத்தியர் மருந்துக்கு உபயோகிக்கிறார்கள்.

## 11. இந்திய ரப்பர்

ரப்பர் ஒருவகை மரத்தின் பால். அத்தி ஆல் முதலிய மரங்களின் பால் வடிந்து இறுகுவதுபோல், இந்திய ரப்பர் மரத்தின் பாலும், மரத்திலிருந்து வடிந்த சிறிது நேரத்திற்கெல்லாம் இறுகிவிடும்.

2. ரப்பர், பரிசிப்பதற்கு மிருதுவாய்க் காணப்பட்டாலும், அது செய்வகையால் கடினமாகவும் மாறும். ரப்பர் தண்ணீரில் ஊறி அதனோடு சம்பந்தப்படுவதில்லை. அதை நெருப்பில் காய்ச்சி யிளக்கி, வேண்டும் உருவமாகச் செய்யலாம். ஆறிவிட்டபின்பு அவ் வுருவத்தை மாற்ற இயலாது. ரப்பரை இழுத்தால் அது அதிகமும் நீளும். விட்டால் மறுபடியும் முன்னுள்ள அளவிற்கே சுருங்கிவிடும். இந்தத் தன்மை வேறு எந்தப் பொருளுக்கும் இல்லை.

3. ரப்பர் மரத்தில் பால் அமிதமாய் வடிகின்றது. இம் மரம் 30 அடி முதல் 50 அடி உயரம் வரையில் வளரும். ரப்பர் மரம், இந்தியா பர்மா ஆப்பிரிக்கா தென் அமெரிக்கா முதலிய நாடுகளில் மிகுதியாய் விருத்தியாகிறது. ரப்பர் மரத்தில் பட்டையைச் சிறிது சீவிவிட்டால் பால் மிகுதியாய் வடிந்து இறுகிவிடும். அந்தப் பாலினாலேயே ரப்பர் செய்யப்படுகிறது.

4. மரத்தின் பாலைத் திரட்டுவதற்கு வேனிற் காலமே ஏற்றது. மனிதர்கள் அம் மரத்தில், கைக்கோடரிகொண்டு வெட்டி, அவ் வெட்டுவாயில் ஒரு சிறு தகரக் கிண்ணத்தை களிமண்கொண்டு ஒட்டவைப்பார்கள். வெட்டுகள் அதிக ஆழமின்றி, ஓர் அங்குல அகல முள்ளவையா யிருக்கும். முதல் நாள் மரத்தைச் சுற்றியும் கைக்கெட்டிய உயரத்தில் ஒரு வரிசை

வெட்டி, கிண்ணங்களைப் பதியவைப்பார்கள். அந்தந்த வெட்டுவாயில் வடியும் பாலெல்லாம், அதன் கீழ் பதித்துள்ள கிண்ணத்தில் வடிந்து நிற்கும். பின்பு அக் கிண்ணங்களிலுள்ள பாலையெல்லாம் ஒரு பெரிய தொட்டியில் பெய்துகொள்வார்கள். இவ்வாறே மறுநாளும் முன் வெட்டிய வடுக்களுக்கு 7 அல்லது 8 அங்குலத்தின் கீழ் வெட்டிப் பாலைச் சேகரிப்பார்கள்.

5. சேகரித்த பாலை அடுப்பிலேற்றிக் காய்ச்சி, அதில் ஓடு ஒன்றை ஒரு புறமாய்ப் பலமுறை தோய்த்து வெயிலிற் காயவைப்பார்கள். அதனால், பால் ஓட்டில் படையாய் ஒட்டிக்கொள்ளும். பிறகு, ஓட்டை உடைத்து விட்டால் ரப்பர் துண்டாய் நின்றுவிடும். இந்த ரப்பர் வெண்ணிறமாய் இருக்கும். மேற் கூறியபடி பாலை ஓட்டில் தோய்த்தெடுத்து தீப்புகையில் காயவைப்பது முண்டு. அப்படிச் செய்வதனால் ரப்பர் கருமை நிறத்தை யடையும். பாலைக் காய்ச்சும்போது வேண்டிய வேறு வர்ணங்களையும் அதனோடு சேர்த்துக்கொள்வ துண்டு.

6. ரப்பர் என்னும் அங்கில மொழிக்குத் துடைக்கும் கருவி என்று அர்த்தம். பென்ஸிலாலும் மையாலும் எழுதியதை ரப்பரால் துடைத்துவிடலாம். ரப்பர் பலவித விநோதப் பொருள்களும், யந்திரங்களுக்கு வேண்டிய குழை முதலிய கருவிகளும் செய்ய ஏற்றதாயிருக்கிறது. இப்போது வண்டிச் சக்கரங்களுக்கும் ரப்பரை கட்டாக உபயோகிக்கிறார்கள்.

## 12. முத்து.

முத்து நவரத்தினங்களி'லொன்று. அது பளபளப்பான வெண்ணிறத்தை யுடையது. அதனால் ஆடவரும் மகளிரும் அதை ஆபரணமாக அணிகிறார்கள். முத்துக்கள் பெரும்பாலும் ஆரமாக கோத்து அணியப்படும். முத்து சமுத்திரத்திலுள்ள கிளிஞ்சில் என்னும் ஒரு வகைப் பிராணியில் உற்பத்தி யாகின்றது. அக் கிளிஞ்சிலின் உடல் இரண்டு ஓடுகளா லமைந்தது. அந்தப் பிராணி தான் விரும்பிய போதெல்லாம், அவ்வோடுகளைத் திறக்கவும் மூடவும் கூடும். அவ் வோட்டின் மேற்புறம் கரடு முரடாகவும், உட்புறம் அதிக வழுவழுப்பும் பிரகாசமும் உள்ளதாகவும் காணப்படுகின்றன. அவ்வோடுகளுக்குள் அமைந்துள்ள தசையில் தான் முத்துக்கள் உண்டாகின்றன. இலங்கைத் தீவின் மேற் கடலிலும், பாரசீக வளை குடாவிலும் முத்துக்கள் விசேஷமாய் எடுக்கப்படுகின்றன, இலங்கைத்தீவை யடுத்த இடங்களில் தண்ணீர் மட்டத்திற்குச் சுமார் 75 அடிக்குக் கீழ் முத்துச் சிப்பிகள் கிடைக்கின்றன.

2. முத்துக் குளிப்பவர்கள் திரளாய் ஒரு படகில் ஏறி, முத்துச் சிப்பிகளை நாடிச்செல்வார்கள். முத்துக் குளிப்பவன், தன் காலில் ஒரு பெருங் கல்லை, உறுதியான கயிற்றால், கட்டிக்கொண்டு தண்ணீரில் மூழ்குவான். இல்லாவிடில் அவன் ஜலத்தில் தரைமட்டத்திற்குப் போக இயலாது. முத்துக் குளிப்பவன் மேற் கூறியவாறு ஜலத்தில் மூழ்கி அங்கு நெடுநேரம் தங்கியிருந்து, முத்துச் சிப்பிகளை எல்லாம் தன்னால் ஆனமட்டுந் திரட்டி, அதற்கெனத் தன்னோடு விட்டிருக்கும் கூடையில் சேர்ப்பான். குளிப்பவன், தான் இனித்

தண்ணீரிலிருக்க இயலாதென்று கண்டவுடனே, காலிற் கட்டிய கல்லின் கயிற்றைக் கழற்றிவிட்டு, நீர் மட்டத்திற்கு வந்து விடுவான். அங்கு அவன் சிறிது நேரம் சுவாசம் விட்ட பிறகு, மறுபடியும் கீழே செல்வான்.

3. தரளங்கள், அவற்றின் பேரழகின்பொருட்டு, மிக்க விலையேறப் பெறுகின்றன. அவற்றில் சில மூவாயிரம் நாலாயிரம் ரூபாய் மதிப்பு உள்ளவை யாயும் இருக்கின்றன.

4. முத்துச்சிப்பி மழை பெய்யும்போது நீர் மட்டத்திற்கு மேலே வந்து, தன் அகட்டைத் திறந்து நிற்கும். ஒரு மழைத்துளி தன் அகட்டில் விழுந்த உடனே, ஓட்டை மூடிக்கொண்டு உள்ளே செல்லும். அந்த மழைத் துளியே பிறகு முத்து ஆகிறது.

5. முத்துப் பிறக்குந் தன்மையை நோக்கினுல் நமக்கு ஒரு நீதி விளங்கும். அதாவது, ஒரு மழைத் துளி சிப்பியில் தங்கினுல் மிக்க விலையும் வனப்பும் வாய்ந்த முத்து ஆகிறது. அம் மழைத்துளியே ஒரு தாமரை இலையின்மீது தங்கினுல் முத்தின் உருவத்தை மாத்திரங் காட்டுகிறது. அதே மழைத்துளி பூமியில் விழுந்தால் உருவமே இல்லாமற் சுவறி விடுகின்றது. மேற்கண்ட மூன்று இடங்களிலும் தங்கியது மழைத் துளியே யாயினும், அது அணுகிய இடத்தை யொட்டிப் பெருமையும், சிறுமையும் அடையும். யோசிக்குமளவில், நமது அறிவும் இம் மழைத் துளிக்குச் சமமானதே. அது, நல்லோரை யணுகி நேசித்தால் நற்புத்தியாகவும், தீயோரை யணுகி நேசித்தால் துர்ப்புத்தியாகவும் மாறுகின்றது.

## 13. மாணாக்கர்கள்

கல்வி கற்கும் சிறுவர்களுக்கு மாணாக்கர்கள் என்று பெயர். உத்தம மாணாக்கரது இலட்சணங்களை இங்குக் கூறுவோம்.

2. உத்தம மாணாக்கர் காலங் கடவாமல் கல்விச் சாலைக்குச் செல்வார்கள்; உபாத்தியாயரைக்கண்டவுடன் தாழ்ந்து வந்தனம் செலுத்தி, தமது வகுப்பில் அமரிக்கையாய் அமர்வார்கள். அவர்கள் தம் சகபாடிகளுக்காவது உபாத்தியாயருக்காவது, எவ்வகைய சங்கடமும் உண்டாக்கமாட்டார்கள். தங்கள் பாடங்களைச் செவ்வனே ஒப்பித்து, உபாத்தியாயர் கற்பிப்பவைகளை மனத்தில் அமைத்துக் கொள்வார்கள். இதுவன்றி, உத்தம மாணாக்கர் தமது ஆசிரியரிடத்தி லுள்ள நற்குணங்களிலும் பழகுவார்கள்.

3. பொதுவில், மாணாக்கர்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவை — தலை மாணாக்கர், இடை மாணாக்கர், கடை மாணாக்கர் என்பனவாம்.

4. தலை மாணாக்கர் — இவர்களை உத்தம மாணாக்கரென்றுங் கூறலாம். இவர்கள் பசுவுக்கு ஒப்பானவர்கள். பசு, பசும் புல்லைக் கண்ட விடத்தில் வயிறுர மேய்ந்து, பின்பு ஓரிடத்தில் தங்கி, அசைபோடும். அது போலவே தலைமாணாக்கரும் தேர்ந்த ஆசிரியர் கிடைத்த போது, வேண்டிய அளவு கல்வி பயின்று, தமக்கு அவகாசமான நேரங்களில், கேட்ட விஷயங்களைச் செவ்வனே சிந்தித்து, மேன்மேலும் தேர்ச்சி யடைவார்கள்.

5. இடை மாணாக்கர் — இவர்களை மத்தியம மாணாக்க ரென்றும் வழங்கலாம். இவர்கள் உழு நிலத்-

திற்குச் சமான மானவர்கள். உழு நிலம் உழுவன் பாடு படும் அளவிற்குப் பயனைத் தரும். அது போலவே இடை மாணாக்கரும் உபாத்தியாயர் கற்பிக்கும் விஷயங்களை மாத்திரம் கருத்தில் வைப்பார்கள்.

6. கடை மாணாக்கர் — இவர்களை அதம மாணாக்கரென்றும் கூறலாம். இவர்கள் இல்லிக் குடத்திற்கு ஒப்பானவர்கள். இல்லிக் குடம் தான் கொண்ட ஜலம் முழுவதையும் ஒழுக விடுதல்போல, கடை மாணாக்கரும் உபாத்தியாயர் கற்பித்த விஷயங்கள் அனைத்தையும் அந்த க்ஷணமே மறந்துவிடுவார்கள்.

7. நமது வாழ் நாளில் மாணாக்கரா யிருக்குங் காலமே மிகச் சிறந்தது. ஏனெனில், இவ் வுலகத்தில் நாம் அடைய வேண்டிய நன்மைகளுக் கெல்லாம் மாணாக்கரா யிருக்கும் பருவத்தில்தான் கடைக்கால் இடவேண்டும்.

8. ஒருவனுக்குத் தான் மாணாக்கனு யிருக்குங் காலத்தில் படியுங் குணங்கள் தன் வாழ்நாள் முழுதும், பசுமரத்தி லறைந்த ஆணிபோல், பதிந்து விடும். பிறகு அதைத் திருத்திக்கொள்வது அசாத்தியம். அதனால், மாணாக்கர்கள் இளமைப் பருவத்திலேயே நற்குண நற் செய்கைகளில் பழகவேண்டும். முதலெடுப்பில் தீக் குணங்கள் இன்பந் தருவன போலவும், நற் குணங்கள் துன்பந் தருவன போலவும் தோன்றும். ஆகையால், மாணாக்கர்கள் தீயாரோடு சேர்ந்து தீக் குணங்களில் பழகாமல், நல்லாரோடு சேர்ந்து நற்குணங்களில் பழகி நன்மை யடைய முயலவேண்டும்.

## 14. நெருப்புக் கோழி

நெருப்புக்கோழி தீப்பறவை என்றும் சொல்லப்படும். இப்பறவை, நீரும் நிழலுமற்ற பாலை வனங்களில் வசிப்பதனால், 'பாலைவனப் பட்சி' எனவும், 'ஒட்டகப் பட்சி' எனவும், குதிரையும் பின்னிடக்கூடிய விரைவாய் ஓடுவதனால் 'ஓடும் பட்சி' எனவும் பெயர் பெறும்.

2. பூரண வளர்ச்சியுள்ள தீப்பறவை சுமார் 11 அடி உயரமுள்ளது. தீப்பறவையே பட்சிகள் எல்லாவற்றிலும் பெரியது. இப் பறவைக்குத் தலை சிறுத்தும், கால்கள் நீண்டும் இருக்கும். கழுத்திலும், தொடையிலும் சிறகின்றி, உரோமம் அடர்ந்திருக்கிறது. ஒவ்வொரு காலிலும் இரண்டே விரல்கள் உண்டு. அவை இரண்டும் முன் புறமாகவே அமைந்திருக்கின்றன. தீப்பறவைக்கு இரக்கைகள் சிறியவை, எனினும், அவை அழகான சிறகுகளை அடைந்திருக்கின்றன.

3. தீப்பறவை பெரும்பாலும் அரபி தேசத்தை அடுத்துள்ள வனாந்தரங்களிலும், ஆப்பிரிகா தேசத்து வெளிகளிலும், கூட்டங்கூட்டமாய்ச் சஞ்சரிக்கிறது. தனக்கு ஏதேனும் இடையூறு வருவதாய்க் கண்டால், இப் பட்சி, தன் தலையை மாத்திரம், எதிரில் நேர்ந்த புதலி லாயினும், மரப் பொந்தி லாயினும் மறைத்துக் கொள்ளும். அப்படிச் செய்வதனால், அது தன் உடல முழுவதையும் மறைத்துக்கொண்டதாய் அபிப்பிராயப் படுகிறதாம். இப்பட்சிக்குப் பசியைச் சகிக்குந் தன்மை மிகுதியாய் உண்டு. இது மணலில் பள்ளந் தோண்டி முட்டையிடும். அந்த முட்டைகளை எவரேனும் பரிசித்துவிட்டால், அதை மோப்பத்தினால் கண்டறிந்து, முட்டைகள் அனைத்தையும் மிதித்து நாசஞ் செய்து

விடும். ஒரு முட்டை சுமார் ஒரு நாழி ஜலம் கொள்ளத்தக்க அளவுள்ளது. இப்பட்சிக்கு உடல் பெருத்தும், இரக்கை சிறுத்தும் இருப்பதனுல், அது பறக்கச் சக்தியற்றிருக்கிறது. ஆனுல், அது ஏககாலத்தில் இரண்டு மனிதர்களை சுமந்துகொண்டு விரைவாய் ஓட வல்லது.

4. தீப்பறவைகள், கண்ணுடி கந்தை தோல் இலை ஆணி முதலான எந்தப் பொருளையும் வேற்றுமையின்றிப் புசிக்கும். இதன் முட்டைகளை அரபியர் தக்க உணவாக உண்கிறுர்கள். அவர்கள் இப் பட்சிகளைப் பிடித்துப் பழக்கி, குதிரைகளைப்போல் சவாரிசெய்ய உபயோகிக்கிறுர்கள். இதன் இறகுகள் மிருதுவாயும் அலங்காரமாயும் இருப்பதனுல், ஐரோப்பிய ஸ்த்ரீகள் அவற்றைத் தலைக்கு அணியாக உபயோகிக்கிறுர்கள். அந்தச் சிறகுகளால் விசிறி முதலிய அலங்காரப் பொருள்களும் செய்யப்படுகின்றன. அப் பொருள்கள் மிகவும் விலையேறப் பெற்றவை. அரபியர் தீப்பறவையின் முட்டைகளை உணவாகக் கொள்வதுமன்றி, அதன் மாமிசத்தையும் புசிக்கிறுர்கள். முட்டையின் ஓட்டை ஜல பாத்திரமாகவும் உபயோகிக்கிறுர்கள். தோலைப் பதஞ்செய்து பற்பல விதமாய் பயன்படுத்துகிறுர்கள்.

5. தீப்பறவை மனிதர் கையிற் சிக்குவது அரிது. அது நேராக ஓடுமாயின், அதைப் பின்ருெடர்ந்து பிடிக்க எந்தக் குதிரையாலும் இயலாது. வளைந்து வளைந்து ஓடுவது அப்பறவைக்கு இயல்பா யிருப்பதனுல், வேட்டையாட்கள் தமது அசுவங்களை நேராய்ச் செலுத்தி, அது இளைப்படையும் வண்ணம் நெடுநேரம் துரத்தி, அதைப் பிடித்துக்கொள்ளுகின்றனர்.

# 15. பொன்

பொன் மஞ்சள் நிறமான ஓர் உலோகம். அதை நெருப்பி லிட்டால் விரைவில் சூடேறி உருகும். ஒரு குன்றுமணி எடையுள்ள பொன்னை 500 அடி நீளக் கம்பியாக நீட்டலாம்; அல்லது 56 சதுர அங்குலமுள்ள தகடாக அகட்டலாம். பொன், பிளாடினம் என்னும் ஒருவகை உலோகந் தவிர, மற்றெல்லா உலோகங்களி-லும் கனமானது. பொன், தண்ணீரைப்போல் 19 மடங்கு கனமுள்ளது. இதில் துருப் பிடியாது.

உலோகங்க ளெல்லாம் கனிஜ வஸ்துக்களே. பொன்னும் சுரங்கத்தில் உண்டாகும் வஸ்துவே. இவ்வுலகத்தில் ருஷியா நியூஜீலந்து பிரேஜில் காலிபோர்னியா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களில் மிகப் பெரிய பொற் கனிகள் உண்டு. சிறிது காலமாக அங்கில வர்த்தகர்கள், நமது இந்து தேசத்திலுள்ள மலையாள ஜில்லாவின் வயநாட்டிலும், குடகு ராஜ்யத்திலும், மைசூரை யடுத்த கோலார் முதலிய விடங்களிலும், பொற்கனிகளைக் கண்டுபிடித்துப் பொன் எடுக்கிறார்கள். அன்றியும், இந்த வுலோகம் கோதாவரி கிருஷ்ணை நருமதை முதலிய ஆறுகளில் மணல் போலவும் அகப்படுகிறது. பொன் அருமையாய் அகப்படுவதனால், அது மிகவும் விலையுள்ளதா யிருக்கிறது.

2. இந்த உலோகம், மலைச் சுரங்கங்களில், வெள்ளி செம்பு ஈயம் முதலியவற்றோடு கலந்து பெருங் கட்டிக ளாகவும், ஆறுகளில் மணலாகவும், பொடியாகவும், சிறு கட்டிகளாகவும் அகப்படுகின்றன. அவற்றை எடுத்து, கீழ் வரும் விதமாய்ச் சுத்தி செய்வார்கள். மண்ணோடு கலந்துள்ள பொற்கட்டிகளைத் தூளாக்கித்

தண்ணீரில் கலந்தால், பொன் தூள் மண் தூளைக் காட்டிலும் கனமானதால், அது தண்ணீரின் அடியில் தங்கிவிடும். மண் தூள் தண்ணீரோடு கலந்து நிற்கும். அப்போது தண்ணீரை வடித்து, மண்ணைப் போக்கி, பொன் தூளைமட்டும் எடுத்துக் கொள்ளலாம். மேலே சொன்னபடி சுத்திசெய்த பொன்னோடு பாதரசத்தைக் கலந்து தேய்த்தால், பொன் மிகவும் சுத்தமாகும். சுயமான பொன் சுலபத்தில் உருகாது. பொன்னோடு கொஞ்சம் வெங்காரத்தைச் சேர்த்து உருக்கினால், அது சீக்கிரம் உருகும். கலப்பான பொன் சுலபமாய் உருகிவிடும்.

3. பொன்னால், ஸ்த்ரீகளும் புருஷர்களும் பல விதமான ஆபரணங்களைச் செய்து அணிந்துகொள்வார்கள். பூஜா பாத்திரங்களும், பானத்திற்கு வேண்டிய பாத்திரங்களும் அதனால் செய்துகொள்ளலாம்; விக்கிரகங்கள் வார்ப்படம் வார்க்கலாம். பொன்னால், நாணயங்கள் செய்யப்படும். அவை மோகரா, சாவரன், அரைச் சாவரன், கால் சாவரன், பூவராகன் முதலியன. பொன்னால் சரிகையும் செய்யப்படுகிறது. வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களால் செய்யப்படும் பாத்திரங்களுக்கும், நகைகளுக்கும் பொன்னைத் திராவகமாக்கி முலாம் பூசலாம். 11 பங்கு பொன்னும், 1 பங்கு செம்புங் கலந்த பொன்னினால் நாணயங்களும், நகைகளும் செய்யப்படுகின்றன. செம்பு சேர்க்காவிட்டால் பொன் மிகவும் நயப்பா யிருக்கும்.

# 16. வேளாண்மை

எவ்வகைத் தொழில் முயற்சியிலும் வேளாண்மையே சிறப்பானது. இதனாலேயே, "மேழிச் செல்வம் கோழை படாது," எனவும், "சீரைத் தேடின் ஏரைத் தேடு" எனவும், "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" எனவும் ஒளவையார் அருளிச்செய் திருக்கின்றனர்.

2. வேளாண்மை தொன்றுதொட்டு நமது நாட்டில் செவ்வையாய் நடை பெற்று வந்திருக்கிறது என்பதில் சற்றும் சந்தேகமில்லை. வேளாண்மைக்குக் கிருஷி என்று மற்றொரு பெயருண்டு. கிருஷி என்பதற்கு முயற்சி என்பது பொருள். ஒருவன் செய்ய வேண்டிய முயற்சிகள் பலவற்றுள்ளும் வேளாண்மையே மேலானதென்பதை நன்கு விளக்கவே, அத்தொழிலுக்குப் பெரியோர் கிருஷி என்று பெயரிட்டிருக்கின்றனர்

3. கிருஷித் தொழிலுக்கு வேண்டிய கருவிகள் யாவும், நமக்குக் குறைவறச் செவ்வனே ஏற்பட்டிருக்கின்றன. அதனால், வேளாண்மை தொன்றுதொட்டு முறையாக நடந்துவந்த தென்பது நன்கு விளங்குகின்றது. ஆயினும், அது நாளடைவில் க்ஷீணதசையை அடைந்ததாகக் காணப்படுகிறது. அதற்குத் திருஷ்டாந்தமாய், பயிரிடுவோரில் ஒவ்வொருவரும் தமது நிலத்தைச் சுட்டி, "இது எங்கள் பாட்டனார் காலத்தில் நல்ல பலனைக் கொடுத்தது; இப்போது அதில் மூன்றில் ஒரு பங்கு விளைவதும் முட்டுப்பாடா யிருக்கிறது" என்கின்றனர். பாட்டனார் பட்டபாடு இவரும் படுவாரானால், பூமி பலன் கொடாமற் போகாது. உழு நிலம் உழைப்புக்கு ஏற்க பலன் கொடுக்கும். இதனாலேயே

மத்தியம மாணுக்கர்களே உழு நிலத்திற்குச் சமமாய்ச் சொல்வது வழக்கம்.

4. பயிர்த் தொழிலில் விருத்தியடையா தேசம் நல்ல பலனை யடையாது. ஏனெனில், உணவுப் பொருள்கள் எல்லாம் நமக்குப் பயிர்த்தொழிலிஞலேயே கிடைக்கின்றன. "ஓதுவோர் எல்லாம் உழுவோன் தலைக்கடையில்" என்னும் பழ மொழியின்படி எல்லோரும் பயிரிடும் தொழிலின் பயனையே எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றது.

5. பணம் மலிந்த தேசத்தை விடப், பயிர் மலிந்த தேசமே சுகத்தை யடையும். செல்வ மெல்லாம் உண்ணவும் உடுத்தவும் உபயோகப் படுவனவே. உணவுப் பொருளை வேறு நாட்டிலிருந்து எதிர்பார்த்துக்கொண்டு, வெறுஞ் செல்வத்தைத் தேட முயன்ருல், வேறு நாட்டுப் பொருள் சமயத்தில் நமக்குப் பயன்படாமற் போதலும் உண்டு. அக் காலத்தில், உணவுப் பொருளின்றி உயிர் துறக்கவே நேரிடும்.

6. ஆகையால், ஒவ்வொரு நாட்டிலும் செல்வராஞலும், தரித்திர ராஞலும், கற்றவராஞலும், கல்லாதவராஞலும் தமது நாட்டுக் கிருஷித்தொழில் விருத்தியடைய முயல வேண்டும். செல்வர்கள் பிறருக்குத் திரவிய சகாயஞ் செய்தும், கற்றவர்கள் அந்நிய தேசங்களில் நடத்தும் மேலான முறைகளைக் கல்லாதவர்களுக்கு உணர்த்தியும் உதவி செய்வார்களாஞல் எந்தத் தேசமும் விருத்தி யடையும்.

## 17. பயிரிடல்

பயிரிடும் தொழிலில் முக்கிய அமிசங்கள் நான்கு. அவை — உழவு, விதை, எரு, காலம் என்பனவாம்.

2. உழவு—"அகல வுழுவதை ஆழவுழு" என்னும் வாக்கியப்படி, நிலத்தை ஆழக் கிளறுவதற்கு நாலைந்து சால் நன்றாய் உழவேண்டும். நிலத்தை ஆழ வுழுதால், பூமியிலுள்ள மரவுணவு சாரத்தைப் பயிர்கள் சுலபமாயும் மிகுதியாயும் கிரகித்துக் கொள்ளும். ஐரோப்பா கண்டத்துக் கலப்பை மிகப் பெரியதாயும், ஓரே சாலில் இரண்டடிக்கு மேலும் பூமியை ஆழமாய்ப் பேர்க்கக் கூடியதாயும் இருக்கின்றது.

3. விதை — பயிரிடுவதற்கான விதைகள், நன்றாய் முற்றி மணி பெருத் திருக்கவேண்டும். அறுவடையானவுடன், குடியானவர்கள் தானியத்தை விற்று விட்டு, விதைக்குங் காலத்தில் மற்றொருவன் வைத்திருக்கும் விதையை விலைக்கு வாங்குகின்றனர். இவ்வாறு செய்வது முற்றும் பிசகு. சாதாரண தானியத்தைப் பலமுறை வெயிலில் உலர்த்துவதினாலேயே அது நல்ல விதையாகாது. ஒவ்வொரு தானியத்திற்கும் ஒரு வகை நோயுண்டு. அந்த நோயை அடைந்த தானிய மணியை, மற்ற நல்ல தானிய மணியோடு சேர்த்தால், நல்லதும் கெட்டதாகிவிடும். அதனால், அங்கிலக் குடியானவர்கள், தம் வயல் அறுவடைக்குத் தகுதியானவுடன், நிலத்தைச் சுற்றிப் பார்த்து, விளைச்சலில் ஆங்காங்கு நன்றாய் முற்றி மணி பெருத்திருக்கும் கதிர்களை மாத்திரம் வேண்டியமட்டும் அறுத்து, விதைக்கென்றே வேறாக வைக்கிறார்கள். இவ் விதைகளை விளைத்தால், அவை ஓங்கி வளர்ந்து, மிகுந்த பலனைத் தருகின்றன.

4. எரு — வயல்கள் நல்ல பயனைத் தருவதற்குக் காரணம் தக்க எருவேயாம். இது விஷயத்தில் நமது நாட்டார் அவ்வளவாய்க் கவனிப்பதில்லை. இந் நாட்டில் சாம்பலும் குப்பையுமே சாதாரண எருவாகக் கொள்ளப்படுகின்றன. சிலர் ஏகதேசமாய் இலை தழைகளை இடுவதுண்டு. மாட்டுச்சாணம் வயலுக்கு ஏற்ற எருவாகும். இச் சாணத்தைக் குடியானவர்கள் வரட்டியாகத் தட்டி, அடுப் பெரிக்க உபயோகிக்கின்றனர். குடியானவன், தன் கால் நடைகளுக்கு இராத்தோறும் படுக்கைக்காக வைக்கோலை வேய்ந்தால், அது, மறுநாள் காலையில், கோசலம் கோமயம் முதலியவற்றோடு கலந்திருக்கும். அதைச் சிறிதும் விடாமல் சேர்த்து எடுத்துக்கொண்டு போய், பெரிய பள்ளத்தில் கொட்டிச் சேர்த்து வைக்கவேண்டும். சாணத்தை வரட்டியாகத் தட்டி விற்பனை செய்யுந் துர்வழக்கத்தை முற்றும் நீக்கி விடவேண்டும். இதுவன்றி, கொல்லைப் புறங்களிலும், வயற் புறங்களிலும் மரஞ் செடிகளை வைத்து விருத்தி செய்து வந்தால், வேண்டிய காலத்தில் அவற்றின் தழைகளைக் கழித்து வயலுக்கு எருவாகப் போடலாம்.

5. காலம் — குடியானவன் தன் நிலத்தில் விளைவதற்குத் தக்க பயிரை, அது விளையுங் காலத்தை உணர்ந்து விதைத்தல் வேண்டும். இதை நோக்கியே, "பருவத்தே பயிர்செய்" என்றும், "ஆடிப் பட்டந் தேடி விதை" என்றும் வாக்கியங்கள் வழங்குகின்றன.

6. மற்றும் இவ்வாறே நேரவல்ல குறைவுகளைக் கண்டு, கிருஷிகன் தக்க முயற்சிசெய்து, அக்குறைவுகளை நிறைவாக்கி, நற்பயனை யடைதல் வேண்டும்.

# 18. சிங்கம்

சிங்கம் காட்டு மிருகங்களில் ஒன்று. அது மற்றெல்லா விலங்குகளையும் அடக்கி நடத்தும் ஆண்மையுடையது. ஆகையால், அது மிருகேந்திரனாக விளங்குகின்றது. சிங்கம் கம்பீரமும், பெருந் தகைமையும், பயங்கரமுமான தோற்ற முடையது. அது, சுமார் 5 அடி உயரமும், வால் உள்பட 9 அடி நீளமு முள்ளது. வால் மாத்திரம் சற்றேறக்குறைய 4 அடி நீள மிருக்கும்.

2. பெண் சிங்கம், ஆண் சிங்கத்தில் முக்காற் பங்கு வளர்ச்சி யுடையது. ஆண் சிங்கத்திற்குப் பிடரி மயிர் உண்டு. பிடரி மயிர் கழுத்தின் பின் புறத்திலிருந்து நீண்டு, முழங்கால் அளவிற்குத் தொங்கும். பெண் சிங்கத்திற்குப் பிடரி மயிர் இல்லை. சிங்கத்திற்கு இடை சிறுத்தும், மார்பு அகன்று மிருக்கும். அதன் கண்கள் வட்டமானவை. கண்களிலுள்ள கரு விழிகள், பகலில் நீண்ட கோடு போலவும், இரவில் வட்டமாகவும் தோன்றும். அதனால், பகலைவிட இரவில் அதற்குப் பார்வை யதிகம். சிங்கத்திற்கு மேல் உதட்டில் நீண்ட மீசை மயிரும், வாயின் இரு பக்கங்களிலும் நீண்ட கோரப்பற்களும் இருக்கின்றன. நாக்குச் சிறுத்து நீண்டு, அரம்போல் சொரசொரப்பாயிருக்கும். காதுகள் வட்டமாய் நுனியில் சிறிது நீண்டிருக்கும். சிங்கத்தின் கன்னம் மிகவும் உறுதியானது. கால் மெல்லியதாயும் நீண்டும் நரம்பு அடர்ந்தும், பாதம் பட்டுப்போல் மெத்தென்றும் இருக்கும். பாதத்தில் நான்கு நகங்களும், பாதத்துக்குச் சற்று மேலே ஒரு நகமும், ஆக ஐந்து நகங்கள் உண்டு. பாதத்திலுள்ள நான்கு நகங்களையும், சிங்கம் தனக்கு இஷ்டமானபோது உள்ளே வாங்கிச்

சுருக்கவும், வெளியே நீட்டவும் கூடும். நகங்கள் வளைவாயும், கூர்மையாயும், ஏறக்குறைய ஓர் அங்குல நீளமுள்ளனவாயும் இருக்கும். வாலின் நுனியில் மயிர்க் குச்சம் உண்டு.

3. சிங்கம் சாதாரணமாய் மங்கின மஞ்சள் நிறமுள்ளது. அந்த நிறம் கபில நிறம் எனப்படும். சில வகைச் சிங்கங்கள், அவை வசிக்கும் காட்டிலுள்ள மணலின் நிறம்போல் இருக்கும். சிங்கத்தின் விலாப் புறம் சிறிது வெளுத்திருக்கும்.

4. சிங்கம் மரங்க ளடர்ந்த காடுகளில் வசிக்கும். அது, இந்து தேசத்தின் கூர்ச்சர நாட்டிலும், வட இந்துஸ்தானத்திலும், அரபி தேசத்திலும், பாரசீக தேசத்தின் பெரிய வனாந்தரங்களிலும், ஆப்பிரிக்காக் கண்டத்தின் மரங்களடர்ந்த வனங்களிலும் உண்டு.

5. சிங்கம் மனிதரிடத்தில் அகப்படுவது அரிது. அது, துஷ்டமிருக மானபடியால், மனிதர்கள் அதைப் பிடித்து வளர்ப்பதில்லை. இந்த மிருகம் எங்கேயாவது இருக்கக் கண்டாலும், வேட்டையாடிக் கொன்று விடுவார்கள். அப்படி வேட்டையாடிக் கொல்வோருக்குத் துரைத்தனத்தார் வெகுமதி அளிக்கிறார்கள். சிங்கத்தைப் பிடித்து, மிருகக் காட்சிச் சாலைகளில் வைத்து வளர்ப்ப துண்டு.

# 19. சூரிய காந்தி

சூரியகாந்தி என்பது ஒருவகைப் பூஞ்செடி, இதை நமது நாட்டார் கருதிப் பார்ப்ப தில்லை. இது மிக்க பயன் தரத் தக்கதென்பது பெரும்பாலாருக்குத் தெரியாது. ஆகவே, அதை விநோதமாகத் தோட்டத்தின் ஒரு மூலையில் நட்டு வைப்பதன்றி, அதை உரிமையோடு பாதுகாப்ப தில்லை.

2. சூரிய காந்தியினால் உண்டாகும் பயன்கள் இவ்வள வவ்வள வன்று. அதைக்கொண்டு அநேகபொருள்கள் செய்யலாம். அமெரிக்கர் இந்தச் செடியினால் அடையும் ஊதியத்திற்கோ அளவில்லை. அமெரிக்காக் கண்டத்தில் சூரிய காந்திச் செடியைப் பாதுகாத்து வளர்க்காத கிருஷிகனே கிடையாது. அந்த நாட்டார் அதன் பயனை நன்கு உணர்ந்திருக்கின்றனர்.

3. சூரிய காந்திப் பூ மிகப் பெரிதாயும், மிகுதியும் விதைகளை யுடையதாயும் இருக்கின்றது. அதில் அமிதமான தேனும் உண்டு. அதனால், தேன் தேடும் வண்டினங்கள் அப் புஷ்பத்தில் சதா ரீங்காரஞ் செய்து, அதிலுள்ள மதுவை யுண்டு, அருகிலுள்ள சோலைகளின் மரங்களில் கூடு கட்டித் தேனைச் சேர்க்குமாம்.

4. இதன் தன்மையைக் கண்டறிந்த அமெரிக்கர், தங்கள் வயல்களின் ஒரு புறத்தில், சூரிய காந்தியைப் பயிரிட்டு விருத்தி செய்கின்றனர். அந்த விடங்களில் தேனீக்கள் தாமே திரண்டு வந்து சேர்வதுண்டு. சில சமயங்களில் அவை வந்து சேராவிடினும், குடியானவர்கள் தாமே சில தேனீக்களைப் பிடித்து வந்து, தமது தோட்டங்களில் விட்டு வளர்ப்பார்கள். அதனால்

மற்றும் பல்லாயிரம் ஈக்களும் அங்கே வந்து சேர முகாந்தரம் உண்டாகின்றது.

5. வண்டினங்கள் சூரிய காந்திப் பூக்களி லுள்ள மதுவைத் திரட்டி, தம் வழக்கப்படி, அயலி லுள்ள விருக்ஷங்களில் கூடு கட்டும். இவ்வாறு சில சமயங்களில் நூற்றுக் கணக்காகவும் தேன் கூடுகள் ஏற்படும். விவசாயிகள் அந்தக் கூடுகளில் திரண்டுள்ள தேனைச் சேகரித்து விற்பனை செய்வதால் மிகுந்த பலனை அடைகின்றனர். இது மாத்திரமே யல்ல, தேன்கூட்டி லுள்ள மெழுகும் உபயோகமாகின்றது.

6. புஷ்பங்களில் நிறைந்துள்ள விதைகளை, நன்ருய் முற்றின பிறகு, வெய்யிலில் உலர வைத்து, செக்கிலிட்டு ஆட்டி, ஒருவகை எண்ணெய் எடுக்கிருர்கள். அமெரிக்கர் அதைப் பல விதங்களில் உபயோகிக்கின்றனர். அதன் பிண்ணுக்கு, ஆடு மாடு முதலிய கால் நடைகளுக்கு ஏற்ற உணவாகின்றது. அச் செடியின் தட்டும், நமது நாட்டிலுள்ள சோளத்தட்டு முதலியவற்றைப்போல், மாடுகளுக்கு உணவாகப் பயன்படுகின்றது. மற்றும் அதன் உபயோகம் பலவாம்.

7. இத்தகைய உபயோகமுள்ள செடியின் தன்மையை நமது நாட்டுக் கிருஷிகர் அறியாமலே இருக்கிருர்கள். இனியேனும் அவர்கள் தமது ஊக்கத்தில் குன்ருமல், அமெரிக்கரைப்போல் இந்தச் செடியை விருத்தி செய்வார்களானல், மிகுந்த பலனை அடையலாம் என்பதில் சற்றுஞ் சந்தேக மில்லை.

## 20. மழை

தண்ணீருக்கு முக்கியாதாரம் மழை. மழையே உலகத்திற்குத் துணைக்காரணம். "மாரியல்லது காரியமில்லை" என்றும், "வானம் சுருங்கில் தானஞ் சுருங்கும்" என்றும் ஔவையார் அருளிச்செய் திருக்கின்றனர்.

2. மழை உண்டாக்குவதற்குக் காரணம் மேகமே. சிறிது ஜலத்தைக் கல்லின்மீது தெளித்தால், அது கொஞ்ச நேரத்திற்குள் உலர்ந்துவிடுகிறது. ஈர வஸ்திரத்தை வெய்யிலிற்போட்டால், அதிலுள்ள ஈரம்போய், வஸ்திரம் உலர்ந்துவிடுகிறது. ஒரு பாண்டத்தில் தண்ணீர் ஊற்றி, நெருப்பின்மேல் வைத்துக் காய்ச்சினால், தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைகிறது.

3. இந்தத் தண்ணீர் எல்லாம் எப்படிப் போகின்றது? என்று ஆராய்ந்து பார்த்தால், கல்லின் மீது தெளித்த தண்ணீரும், வஸ்திரத்திலிருந்த தண்ணீரும் சூரிய உஷ்ணத்தினால் ஆவி ரூபத்தை யடைந்தன. நெருப்பின்மீது வைத்துக் காய்ச்சப்பட்ட தண்ணீரோ, நெருப்பின் சூட்டினால் ஆவிரூப மடைந்தது. இவ்வாறு ஆவி ரூபமடையும் ஜலவாயு, சாதாரண வாயுவைக் காட்டிலும் லேசானபடியால், மேலே செல்கின்றது. இவ்வாறே, ஆறு ஏரி சமுத்திரம் முதலிய நீர் நிலைகளிலுள்ள ஜலம், நாள்தோறும் சூரிய உஷ்ணத்தினால் ஆவி ரூபமடைந்து மேலே செல்கிறது. முன் சொல்லிய விதமாக, ஆவி ரூப மடைந்து மேலே செல்லும் நீராவி, எக்காரணத்தினாலாவது குளிர்ச்சியை அடைந்தால், கண்ணுக்குத் தோன்றும் உருவத்தை அடைகின்றது. இந்த நீராவித் திரட்சியே மேகம் என்று சொல்லப்படும்.

4. மேகங்கள் பூமிக்கு இரண்டு மூன்று மைல் தூரத்தில் சஞ்சரிக்கின்றன. காற்றில், காகிதத் துண்டு முதலானவை பறப்பதுபோல, மேகங்களும் காற்றினுல் அங்கு மிங்குஞ் சஞ்சரிக்கும். ஆகையால், சாதாரணமாய்க் காற்று வீசும்போது, மழைபெய்யாமல், காற்று நின்றவுடனே பெய்கின்றது. உலைப் பானையின்மேல் ஒரு சட்டியைக் கவிழ்த்து வைத்தால், அந்தப் பானையிலுள்ள ஜலம், உஷ்ணத்தால் ஆவியாக எழும்பி, மூடியிருக்கும் சட்டியின் உட்புறத்தில் போய்ப் படியும். அந்தச் சட்டியை எடுத்து, குளிர்ந்த காற்றுமுகமாய்ச் சாய்த்தால், அதில் அடைந்திருந்த நீராவி, மறுபடியும் நீராக மாறி, துளித் துளியாய்ச் சொட்டும். அதுபோலவே, நீராவியைக் கொண்டிருக்கும் மேகங்களின் மீது குளிர்காற்றுப் பட்டால், அந்த ஆவி ஜலமாக மாறும். அந்த ஜலம் சாதாரண வாயுவைவிட கனமானபடியால், துளித் துளியாய்ப் பூமியின்மீது விழும். இதுவே மழை பெய்தல் எனப்படும்.

5. மலைப் பிரதேசங்களிலும், சோலைகள் அடர்ந்து விளங்கும் இடங்களிலும் மேகங்கள் அடுத்து உலவும். ஆகையால், அவ்விடங்களில் மழை மிகுதியாய்ப் பெய்யும். பூமியின்மேல் எல்லாவிடத்திலும் ஒரே அளவாய் மழை பெய்வதில்லை. சில விடங்களில் மிகக் கொஞ்சமாய் பெய்யும். சில விடங்களில் எப்போதும் பெய்து கொண்டே இருக்கும்.

6. மழை பெய்வதனுல் ஜீவராசிகளெல்லாம் உயிர் வாழ்கின்றன. மரஞ் செடிகள் விருத்தியாகின்றன. ஆகாயம் சுத்தமாகின்றது.

## 21. தபால்

உள்ளக் கருத்தை ஒருவர்க் கொருவர் தெரிவித்துக் கொள்வதற்குத் தபால் மார்க்கம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. பூர்வ காலத்தில் அயலூரி லுள்ள சுற்றத்தாருக்காவது, நண்பருக்காவது ஒருவன் ஒரு விஷயத்தை அறிவிக்க விரும்பினுல், ஓலை எழுதி ஆள்வசம் அனுப்புவதே வழக்கமா யிருந்தது. அவ்வாறு செய்வதில் கால தாமதமும், சிரமமும் நேரிடும் என்பதில் சிறிதும் சந்தேக மில்லை. ஆனுல், ராஜகலகம், யுத்தம் முதலியவை நேரும் அபாயகரமான காலங்களில்,சமாசாரப் போக்கு வரவுக்காகப் புறுக்களைப் பழக்கி, அதன் மூலமாய்ச் சங்கதிகளை அறிவித்து வந்தனர். இந்தக் காலத்தும் அங்கில அரசாட்சியர், யுத்தம் நடக்கும் காலங்களில், இது விஷயமாகப் புறுக்களையே உபயோகிக்கின்றனர். அப் புறுக்களும் வெகு துரிதமாய்ச் சென்று குறிப்பிட்ட விடத்திற் கடிதத்தைச் சேர்க்கின்றன.

2. பதினைந்தாம் நூற்றுண்டின் மத்தியில், இந்து தேசத்தில் அரசு புரிந்த மொகலாய சக்கிரவர்த்தி ஒருவன் இருந்தான். அவன் ஷர்ஷா என்னும் பெயருடையவன். அம் மன்னன் தக்க ஆட்களை யமைத்து, அவரவர்கள் எழுதும் நிருபங்களைக் குதிரை மேலேறிச் சென்று அவ்வவ்விடத்தில் சேர்க்கும் முறையை முதல் முதல் ஏற்படுத்தினுன். அது முதல் தபால் மார்க்கம் எங்கும் பரவியது.

3. இக் காலத்தில் இருப்புப் பாதைகளும், புகைக் கப்பல்களும் எங்கெங்கும் உண்டாயிருக்கவே, கடிதப் போக்கு வரவு சிறிதும் தடை படாமல் விரைவாய் நடைபெற்று வருகின்றது. ஒருவன் நூறு மைல்

தூரத்திலுள்ள தன் நண்பனுக்கு இன்று ஒரு கடிதம் எழுதினால், அது மறு நாளே அவனிடத்திற் போய்ச் சேர்கின்றது.

4. தபால் மார்க்கம் உண்டான காலத்தில், கடிதம் செல்லவேண்டிய தூரத்திற்குத் தக்கபடி கட்டணம் வாங்கப்பட்டது. நாளடைவில் அந்த முறை மாறி, தூரத்தைக் கருதாமல், அனுப்பப்படும் பொருளின் நிறையைக் குறித்துக் கட்டணம் ஏற்படுத்தப்பட்டது. இப்போது ஒரு காலணாக் கார்டிலும் விஷயங்களைத் தெரிவிக்கலாம்.

5. தபால் மார்க்கமாய் சமாசாரப் போக்குவரவேயன்றி, பத்திரிகை, புத்தகம், மாதிரி வஸ்து முதலியவைகளும் இக்காலத்தில் அனுப்பப்படுகின்றன. இதுவுமன்றி, பணத்தையும் தபால் மார்க்கமாய் அனுப்பலாம்.

6. சமாசாரம் விரைவிற் செல்லவேண்டுமானால் அதற்கும் தபால் மார்க்கத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது "தந்தித் தபால்" என்னப்படும். இதன் மூலமாய் பணமும் அனுப்பலாம். ஆனால், இதற்குக் கட்டணம் அதிகம்.

7. மனிதர்கள் தம்மாலியன்ற சிறு தொகையையும் அபாயமின்றிச் சேர்த்துவைக்கத் தபாலாபீஸில் மார்க்கமுண்டு. அது 'சேவிங்ஸ் பாங்கி' எனப்படும். இதில் ஒரு முறையில் நான்கு அணாவுக்குக் குறையாமல் கட்டிவைத்து வேண்டியபோது அதைப் பெற்றுக் கொள்ளலாம்.

## 22. யானை

யானை காட்டு மிருகங்களில் ஒன்று. அது நிலத்தில் வாழும் பிராணிகள் எல்லாவற்றுள்ளும் பருத்த உருவ-முடையது. யானையை அறிவில் மனிதனுக் கிரண்டா-வதாய்ச் சொல்லலாம்.

2. பூரண வளர்ச்சியுள்ள யானை சற்றேறக்குறைய பதினன்கடி உயரமிருக்கும். சிலவகை யானைகள் ஏழெட்டடி உயரத்திற்குமேல் வளர்வதில்லை. யானை, பன்றி, கண்டகம் முதலியவை ஓரின விலங்குகளாம்.

3. யானையின் கால்கள், அதன் பருத்த உடலைத் தாங்கத் தக்கபடி கனத்துக் குறுகி யிருக்கின்றன. யானையின் சிரம் மிகப் பெரியது. அதன் மேற்பாகம் இருபிரிவாய்த் தோன்றும். அப்பாகம் மத்தகம் என்று சொல்லப்படும். யானை வலம் இடம் திரும்ப வேண்டு-மானல் தன் உடல் முழுவதையும், திருப்ப நேரும். யானைக்கு அபூர்வமாய் ஓர் அவயவம் அமைந்துள்ளது. அது தும்பிக்கை யெனப்படும்.

4. துதிக்கை, யானைக்குக் கையும் நாசியுமாக உத-வுகின்றது. துதிக்கையின் நுனியில் விரல்போன்ற அவயவம் ஒன்றும் அமைந்திருக்கின்றது. அந்த அவ-யவத்தால் யானை சிறிய மணியையும் தட்டாம லெடுக்-கும். ஆண் யானைக்கு மேல்வாயின் இருபுறங்களிலும், இரண்டு நீண்ட பற்களுண்டு. அவைகட்குத் தந்தம் என்று பெயர். பிடியானைக்குக் கொம்பில்லை. சிலவற்-றிற்கு இருந்தாலும், அவை நீண்டு வளர்கிறதில்லை. நன்ருய் முதிர்ந்த தந்தத்தில் முத்து உண்டாகும்.

5. யானை சாந்தமும் நன்றி பாராட்டுங் குணமு-முள்ளது. அது, ஒருவர் தனக்குச் செய்த நன்மை

தீமைகளை மறவாமல் பதில் செய்யும் பண்புடையது. யானைகள் திரளாகச் சேர்ந்து பிரயாணம் செய்கையில், வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவை முன்னும், நடு வயதுள்ளவை கடைசியிலும், கன்றுகளும் பலவீன முள்ளவைகளும் இடையிலும் அமைந்து செல்லும்.

6. யானை சாக பட்சணி. அது இலை, தளிர், காய், கனி, தானியம் முதலியவற்றையே தனக்கு ஆகாரமாகக் கொள்ளும். மச்ச மாமிசங்களைத் தொடுவது மில்லை. அது இரை யருந்தும்போது, தன் உடலையும் துதிக்கையையும் அசைத்துக்கொண்டே யிருக்கும். இதனால், "யானை யசைந்து தின்னும், வீடு அசையாமல் தின்னும்" என்னும் பழமொழியும் வழங்குகின்றது.

7. யானை மிக்க வுபயோகமானது. பண்டைக் காலத்து அரசர் யானைகளை யுத்தஞ்செய்யப் பயிற்றி வந்தார்கள். இக் காலத்தில் யுத்தாயுதங்களையும், யுத்த தளவாடங்களையும் சுமந்துசெல்ல அதை யுபயோகிக்கின்றனர். ஆப்பிரிக்காக் கண்டத்திலும், கீழ் இந்திய தேசங்களிலும் பெரும்பாலும் பாரங்களைச் சுமந்து செல்வது யானையே. காட்டில் வெட்டப்பட்ட பெரிய மரத்துண்டுகளைக் கொண்டு போய், குறித்தவிடத்தில் ஒன்றின்மீ தொன்றாய் அடுக்குவதில் யானை மிகவும் திறமை வாய்ந்தது. தந்தம் மிக்க விலை யேறப் பெற்றது. அதைக்கொண்டு வேலைப்பாடும் விநோதமுமுள்ள பொருள்கள் செய்யப்படும் இச் சென்னை ராஜதானியிலுள்ள விசாகபட்டணம், மைசூர்நாடு முதலிய விடங்களில் தந்தவேலை மிகுதியாய் செய்யப்படுகிறது. அரசர்களும் பிரபுக்களும் யானையின்மீது அலங்காரமாய் ஏறிச் செல்வார்கள்.

# 23. தேயிலை

தேயிலை, அடர்ந்து வளரும் ஒருவகைச் செடியின் தழை. அந்தச் செடி எட்டடிக்கு மேலும் உயர்ந்து வளரும். ஓங்கி வளர்ந்தால் இலையைப் பறிப்பதற்கு அநுகூலப்படாதென்று கருதி, தோட்டக்காரர் அதை நான்கு அடிக்குமேல் வளர விடுவதில்லை.

2. தேயிலைச்செடி பெரும்பாலும் தென்றற்காற்று வீசும் மலைச்சாரல்களிலும், பள்ளத் தாக்குக்களிலும் செழித்து வளரும். இதற்கு, கரிய நிறமுள்ள களிப்பு நிலமே யேற்றது. தேயிலைத் தோட்டக்காரர் வருடந்தோறும், புரட்டாசி ஐப்பசி மாதங்களில் விதைகளை யெடுத்து, வசந்தகாலம் வருமளவும் மணலில் அல்லது மண்ணில் புதைத்து வைப்பார்கள். வசந்தகாலம் வந்ததும் அவ்விதைகளை எடுத்து, ஓரிடத்தில் நாற்று விடுவார்கள். அது ஓரடி நாற்றாக ஓராண்டு செல்லும். பிறகு, அந்த நாற்றுக்களைப் பிடுங்கி, ஒவ்வொரு குழியில் ஐந்தாறாக நடுவார்கள். அவ்வாறு நடுவதற்குமுன், ஒன்றுக் கொன்று நாலைந்தடி தூரமிருக்க, வரிசை வரிசையாகக் குழிகள் தோண்டிவைப்பது வழக்கம். வசந்த காலத்தில் பெய்யும் மழையே தேயிலைச் செடியை விருத்தி செய்வதற்கு ஏற்றதெனக் கருதி கிருஷிகர் அக்காலத்தில் நாற்று நடுவார்கள்.

3. தேயிலைச்செடி, மூன்று வருடமட்டும் பலன் கொடாது. பின்பு, வருடத்திற்கு மூன்று முறையாக ஏழெட்டு வருடம் வரையில் பயன்றரும். இளஞ் செடியின் இலையே மிகச் சிறந்தது. மூன்றும் வருடம் முடிந்ததும், ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் பலரும் சென்று இலை பறிப்பார்கள். பறித்த இலையை முதலில்

வெய்யிலிற் காயவைப்பார்கள்; அல்லது அனலில் வாட்டுவார்கள். தேயிலையில் கறுப்பிலை, பச்சையிலை என இருவகை யுண்டு

5. தேயிலை முதல் முதல், சீன ஜப்பான் தேசங்களில் உண்டாயிற்று. இப்போது, அது அத் தேசங்களில் அமிதமாய்ப் பயிரிடப்பட்டு, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதுவன்றி, அமெரிக்காக் கண்டத்தின் சிற்சில பாகங்களிலும், ஜாவா இலங்கை முதலிய தீவுகளிலும், சென்னை ராஜதானியில் நீலகிரி, சேர்வராயமலை, பழனிமலை முதலிய மலைச்சாரல்களிலும் மிகுதியும் பயிரிடப்படுகின்றது.

6. தேயிலை, அதன் மணத்திற்குத் தக்கவாறு விலைபெறும். அதனால், பயிரிடுவோர் இலையைப் பதமாக்கி விற்பனைக்கு அனுப்பு முன், அதன் மணமறுதபடி ஈயத்தகட்டை உள்ளிட்ட கடிதத்திலாயினும், தகரடப்பியிலாயினும் பக்குவமாகச் சேமித்து அனுப்புவது வழக்கம். பதினாறும் நூற்றாண்டின் மத்தியில், தேயிலை, முதல் முறையாக இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது. அக்காலத்தில், அது இராத்தல் ஒன்று முப்பது ரூபாய் விலைபெற்றது. இப்போது அதன் விலை எட்டணா முதல் ஒரு ரூபாய் வரையில் ஏற்படும்.

7. தேயிலையால் ஒருவகை நறுமணமும் சுவையுமுள்ள கஷாயம் செய்யலாம். மிதமாக உட்கொண்டால், தேயிலைக் கஷாயம் தீனிப் பைக்கும், குடலுக்கும் வலிவைக்கொடுத்து, ஜீர்ணசக்தியை யுண்டாக்கும். அமிதமாக உட்கொண்டால், நித்திராபங்கத்தை யுண்டாக்கி வியாதிக்கு இடந்தரும்.

## 24. புகையிலை

புகையிலை, இலை தழைத்து அடர்ந்து வளரும் ஒரு வகைச் செடியாம். அது சுமார் ஆறடி உயரத்திற்கு ஓங்கி வளரும். இதன் இலை சுமார் இரண்டடி அளவு நீண்டு அகன்றிருக்கும். புகையிலைச் செடியில் இலை-களே மிக்க உபயோகமானவை. அதன் விதை பெரும்-பாலுங் கடுகை ஒத்திருக்கும். இலைகள் ஆரம்பத்திற் பசுமை நிறம் அடைந்து, முதிருங் காலத்தில் வெண்-ணிறமாய் மாறும்.

2. புகையிலை, ஆதியில் அமெரிக்காவினின்றும் கொண்டுபோய் மற்றத்தேசங்களில் பயிரிடப் பட்ட தென்று பெரும்பான்மையோர் எண்ணுகின்றார்கள். இப்போது அது, உஷ்ணப் பிரதேசங்களில் எல்லாம் மிகுதியும் பயிரிடப்படுகின்றது. ஆசியாகண்டத்தில் இந்தியா, சீனா, பிலிபயன் தீவுகள், ஜவா, பாரசீகம், துருக்கி முதலிய விடங்களில் மிகுதியாய் விருத்தி செய்யப்படுகின்றது. நமது சென்னை ராஜதானியில் கோதாவரி கிருஷ்ணா நதிகள் பாயுமிடங்களிலும், தென் நாட்டு ஜில்லாக்களின் புன்செய் நிலங்களிலும் அமித-மாய்ப் பயிரிடப் படுகின்றது. ஆயினும், திண்டுகல், திரிசிராப்பள்ளி முதலிய விடங்களிலும், பிலிபயன் தீவிலுள்ள மனில்லா நகரத்திலும், ஜாவாத் தீவிலும் பயிரிடப்படும் புகையிலையே மிகவும் மேலானதாகக் கருதப்படுகின்றது.

3. புகையிலை புன்செய்ப் பயிராம். புகையிலை யைப் பயிரிடுவோர், முன்பு நிலத்தை பாங்குபெற வுழுது, நிலமெங்குஞ் செவ்வையாய் நீர் பாயும் வண்-ணம் பாத்தி கட்டி, அந்தப் பாத்திகளை யடுத்துக் கால்-

வாய் வாங்கிச் சீர் படுத்திய பின்பு, விதையைத் தூவி விதைத்து, நீர் பாய்ச்சுவார்கள். பிறகு, நாலைந்து தினங்களில் முளை எழும். அக் காலத்தில் ஈரங் குன்ருதபடி, கால மறிந்து, தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இலைகள் நீண்டு வளரும்போது, அவற்றிற்கு யாதொரு பழுதும் நேராவண்ணம் பாதுகாப்பது அவசியம். புகையிலையின் புஷ்பங்களைக் கிருஷிகர் கிள்ளிவிட்-டால் இலைகளுக்கு நல்ல மணமுண்டாகும். இலைகள் முதிரமுதிர வெண்ணிறம் வாய்ந்து, முடிவில் பழுத்துப் போகும் அக்காலத்தில் கிருஷிகர் செடிகளைப் பிடுங்கி ஓரிடத்தில் தொகுதியாக இரண்டொருநாள் போட்டு வைத்துப், பிறகு, சிறிது வெயிலிலுலர்த்திப் பதஞ்-செய்து விற்பனை செய்வார்கள். பதஞ் செய்யப்பட்ட புகையிலை கருமை நிறமாக இருக்கும்.

4. புகையிலை, நெடி நாற்றமும் காரமுமுள்ள ஒருவித மயக்கப் பொருள். இதனை நமது நாட்டில் பெரும்பான்மையோர் பல வகையிலும் உபயோகிக்கி-ருர்கள். சிலர் புகையிலையை அடைக்காயோடு அடைத்-துக் கொள்கின்றனர். சிலர் பொடியாக்கி நாசியிற் பிரயோகிக்கின்றனர். சிலர் அதைச் சுருட்டாக உப-யோகப்படுத்துகிருர்கள்.

5. குளிர் நாட்டி லுள்ளவர்களுக்கு இது இன்றி-யமையாத மருந்தாக இருக்கின்றது. ஆயினும், புகை யிலையை உபயோகிப்பது துர்வழக்கமே.

## 25. கல்யானை

வலிமையில் யானைக்கு இரண்டாவதான மிருகம் கல்யானையே. அது சற்றேறக்குறைய யானையளவு பரிமாண முள்ளது. அது சுமார், பன்னிரண்டடி நீளமும், ஆறேழடி உயரமும் இருக்கும். அதன் கால்கள் குட்டையாயிருக்கின்றன. அதன் தலையில் நாசியினின்று முளைத்த கொம்பொன்று உண்டு. அதன் மேலுதடு நீண்டு கூராயிருப்பதால், அது தன் இரையைக் கும்பலாய்க் குவித்து, வாயில் போட்டுக்கொள்ள அநுகூலமாயிருக்கின்றது: அதன் உடம்பில் உரோமக் கவசமில்லாமல், தோல் மாத்திரம் மடிந்து மடிந்து தொங்குகின்றது. அந்த மடிப்புகளுள் தோளண்டையும் வாலண்டையும் இருக்கும் இரண்டு மடிப்புகள் மிகவும் முக்கியமானவை. அதன் தோல் கபில நிறமுள்ளது; அது அதிக கூர்மையுள்ள கத்திபோல் இருக்கும். அதன் கொம்பு சற்றேறக்குறைய மூன்றடிக்கு அதிகமாயும் நீண்டிருக்கும். அது அதிக உரப்பான எலும்பினின்று உண்டாகின்றது. இப்படிப்பட்ட ஈட்டிபோன்ற சிறந்த ஆயுதம் அதற்கிருக்கின்றமையால், அது, யானை புலி முதலியவைகளையும் லக்ஷியம் செய்வதில்லை. அதன் கல்லான தோல் அதிக வலிமையான சிங்கம் முதலியவைகளின் நகங்களுக்கும் அசையமாட்டாது. ஆதலால், கல்யானையைப் பார்த்துப் பயப்படாத மிருகம் ஏதுவும் இல்லை.

2. கல்யானை ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலுமுள்ள மணல்வெளியான பெருங் காடுகளி லிருக்கின்றது. யானைகளும் சிங்கங்களும் சஞ்சரிக்கின்ற காடுகளில் சாதாரணமாய் அது அகப்படும். இலை, தழை முதலியவைகளே அதற்கு முதன்மையான உணவு.

அதனால், அது இயற்கையாய் ஒரு பிராணிக்கும் தீங்கு செய்யத் தக்கதன்று. இக் காரணத்தினால் அது மற்றைமிருகங்களைவிட தைரியத்தில் குறைந்ததென்று எண்ணப்படாது. ஏதாவது வேறொரு ஜந்து தன்னை எதிர்க்குமானால் பயந்தோடாமல் எதிரே நிற்கும். வேறொரு ஜந்துவும் பிடுங்கிப் புசிக்கமாட்டாத முட்செடிகளையும் முள் தழைகளையுமே அது முக்கியமாய்ப் புசிக்கும். கல்யானைகளைப் பிடிப்பது வெகு கஷ்டம். அவைகள் தூங்கவும் நடமாடவும் உரித்தான சதுப்புநிலங்களில் குட்டியோடு சஞ்சரிக்கும் தருணம் பார்த்துப் பெரியதைக் குண்டுவைத்து அடித்துக் கொன்றுவிட்டு, குட்டியைப் பிடித்துப் பழக்கவேண்டும். அவற்றின்தோல் குண்டுக்கன்றி மற்றொன்றுக்கும் அசையமாட்டாது.

3. கல்யானைகளை வேட்டையாடுவது எளிதன்று. அவற்றைப் பிடிக்க எவ்வளவு முயன்றாலும், அவை கையில் அகப்படுகிறதில்லை. அவை ஓடத் தலைப்பட்டால், அப்புறம் ஒருவர்க்கும் சாத்தியமன்று. பெரிய முட் புதல்களையும் அலக்ஷ்யமாய்த் தாண்டித் தாவும். எவ்வளவு அடித்தாலும் கல்யானையின் உடம்பில் உறைப்பதில்லை. தேகத்தில் வெடி குண்டுகள் போய்ப் பொத்திக்கொண்டாலும் அதை லக்ஷ்யம் செய்யாது; எதிர்த்தோடி வருமேயன்றிப் பின்வாங்காது. புஜம், இருதயம் முதலிய பிராண நிலைகளில் அடிபட்டால் மாத்திரம் தாங்காமல் தவிக்கும்.

4. இந்த மிருகம், சென்னைமாநகரில் புலி, கரடி, சிங்கம் முதலியவை வைத்திருக்கும் ஜனவிநோதத் தோட்டத்தில் இருக்கிறது.

# 26. பேராசை பெருந்துயர்

ஓர் ஊரில் மிகவுந் தரித்திரனாகிய ஒருவன் விறகு வெட்டிச் சுமந்துவிற்று, அதனாலே வயிறு வளர்த்து வாழ்ந்துவந்தான். அவன் ஒருநாள், சமீபத்தில் விறகு வெட்டக் கிடையாமையினால், மிகுந்த தூரத்தில் ஓர் ஆற்றங்கரையிலுள்ள காட்டிற்குப் போய், அதன் கரையிலே பட்டுச் சாய்ந்துநிற்கும் மரத்தைக் கண்டு, கோடாலிகொண்டு அதைத் தறித்தான். கோடாலி கழன்று, பெருகியோடும் ஆழ்ந்த ஆற்று நீருள் வீழ்ந்துவிட்டது.

3433

2. பசி தாகங்களினாலே மிகவும் களைப்படைந்த அவ் விறகுவெட்டி, 'இனி என்ன செய்வேன்!' என்று வருத்தமடைந்து, அழுதுகொண்டு நின்றான். அப்பொழுது, அக் காட்டிலிருக்கும் வனதேவதை அவனுக்கு எதிரே வந்து, 'ஏன் அழுகிறாய்?' என்று கேட்டது. அவன் நடந்ததைச் சொன்னான். உடனே அத் தெய்வம், அவன் துயரத்திற்கு இரங்கி, அந்த ஆற்று வெள்ளத்துளிறங்கி மூழ்கித் தடவிப்பார்த்து, ஒரு வெள்ளிக் கோடாலியை எடுத்துக்கொண்டுவந்து காட்டி, 'இதுதானா உன் கோடாலி?' என்று கேட்டது. அவன், 'ஐயோ இது அல்லவே!' என்றான். அத்தெய்வம் பின்னும் மூழ்கித் தடவிப்பார்த்து, ஒரு பொற் கோடாலியை எடுத்துக்கொண்டுவந்து காட்டி, 'இதுதானா? பார்' என்று கேட்டது. அவன், 'இதுவும் அல்லவே!' என்றான். அத் தெய்வம் பின்னும் ஒரு முறை மூழ்கித் தடவிப் பார்த்து, ஒரு இருப்புக் கோடாலியை எடுத்துக்கொண்டுவந்து காட்டி, 'இது தானா?' என்று கேட்டது. அம் மனிதன், அது தன் கோடாலியா யிருக்கக்கண்டு, மிகுந்த சந்தோஷத்-

தோடு, 'ஆமாம், ஆமாம், இதுதான் என் கோடாலி' என்று சொல்லி, அதனை எடுத்த நன்றிக்காக அத் தெய்வத்தைத் தொழுது துதித்தான்.

3. தெய்வம் அவனுடைய சத்தியத்தையும் உறுதியையும் புகழ்ந்து, தான் எடுத்த கோடாலிகள் மூன்றையும், இன்னும் அநேக திரவியங்களையும், பலவரங்களையுங் கொடுத்து, அவனை ஆசீர்வதித்துப் போயிற்று. அத் தரித்திரன் அவைகளைப் பெற்றுப் பெருஞ் செல்வனாய்த் தன் குடும்பத்தாரோடு இனிது மகிழ்ந்து வாழ்ந்திருந்தான்.

இந்த சமாசாரங்களை விசாரித்தறிந்த வேறொரு விறகுவெட்டி, தானும் இவனைப்போல் செல்வவானாக வேண்டும் என்று எண்ணி, அந்தக் காட்டில் ஆற்றோரத்திலே விறகு வெட்டி, தானே கோடாலியை ஆற்றிலே நழுவவிட்டு நின்று நெடுக அழுதான். அப்பொழுதும் அவ் வனதேவதை முன்போல் தோன்றி, அவன் விஷயங்களைக் கேட்டறிந்து, ஆற்று வெள்ளத்துள் மூழ்கி, ஒரு வெள்ளிக் கோடாலியை எடுத்துக் காட்ட, அவன் மிகுந்த சந்தோஷத்தோடு, 'இதுதான் என் கோடாலி' என்றான். தெய்வம் அவ் வெள்ளிக் கோடாலியை ஆற்றினுள் எறிந்துவிட்டு, அவனைக் கோபித்து, நித்திய தரித்திரனாகும்படி சபித்தது. அவன் தன் பேராசை காரணமாகச் சொல்லிய ஒரு பொய்யினால், முன்னையினும் மிகுந்த தரித்திரனாய்ப் பெருந் துன்பத்தை அனுபவிக்கலானான்.

## 27. கிளிகள்

கிளிகள் உலகத்தின் உஷ்ணமான தேசங்களில் வாசஞ்செய்கின்றன. அவைகளில் நூற்றெழுபது வகைகள் உண்டென்று சொல்லுகிறார்கள்.

2. கிளிக்கு உறுதியும், உருண்டை வடிவுமுள்ள அலகு இருக்கின்றது. அந்த அலகின் மேல் பாகம் வளைந்து மிகவும் உறுதியாயிருப்பதோடு, நுனியில் கூர்மையாயு மிருக்கும்; அது கீழ்ப்பாகத்தைப் பார்க்கிலும் நீண்டிருக்கும். கிளியின் பாதங்கள் கைகளைப் போல் சிறு பொருள்களைப் பிடித்துக்கொள்ளக் கூடியவை. அவைகளுக்கு முன் பக்கத்தில் இரண்டு விரல்களும், பின் பக்கத்தில் இரண்டு விரல்களுமுண்டு. கிளிகள், தரையில் நடப்பது வருத்தமாகையால், கீழே இறங்குவது அபூர்வம். அவை தம் பாதம், அலகு இவைகளின் உதவியால் ஒரு விதமாய் மரத்தில் ஏறிச் செல்லும்.

3. இந்தப் பக்ஷிகள் நிறம், வடிவம், பிரமாணம் முதலியவற்றில் மாறுபட்டு அநேக வகையாகத் தோன்றும். கிளிகளின் சிறகு மினுமினுப்பாயும் அழகாயுமிருக்கும். சாதாரணமாக சில சிவப்பாயும் சில பச்சையாயும் சில வெவ்வேறு பகட்டான நிறங்களாயும் இருக்கும்.

4. கிளிகள் ஒன்றுகூடிச் சஞ்சரிக்கும் தன்மையுடையவை. பேடுகள் மரப்பொந்துகளிலாவது, பாறைகளின் வெடிப்புகளிலாவது முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். குஞ்சுகள் முட்டையினின்று வெளிப்பட்டவுடனே அவைகளுக்குச் சிறகுகள் இரா. சிறகு

முளைத்து உடலெல்லாம் பூரணமாய் மூடுவதற்கு மூன்று மாதம் செல்லும்.

5. கிளிகள் முக்கியமாய்ப் பழங்களைத் தின்று ஜீவிக்கின்றன. அவை ஒரு காலால் நின்றுகொண்டு, மறு காலால் இரையை அலகுக்குக் கொண்டுபோவதும், முழுவதும் சாப்பிடுமட்டும் அந்தக் காலால் மீதி இரையைப் பிடித்துக்கொண்டிருப்பதும் பார்க்க வெகு விநோதமாயிருக்கும். பழக்கப்பட்ட கிளி எதையும் சாப்பிடும். அவைகள் அடிக்கடி ஸ்நாநஞ் செய்து தண்ணீர் குடிக்கும்; உஷ்ணகாலத்தில் அவைகள் அங்கு மிங்கும் பறந்து சென்று தண்ணீரில் மூழ்கி விளையாடும்.

6. கிளிகள் நீண்ட ஆயுசுள்ளவை. சில கிளிகள் 80 வருஷத்துக்குமேல் உயிரோடிருந்ததாகத் தெரிய வருகிறது. சொன்னதைத் திரும்பச் சொல்லுவதிலும், மிருகங்கள் கூப்பிடுவதுபோல் கூப்பிடுவதிலும், பாடுவதுபோல் இராகங்களைப் பாடுவதிலும் கிளிகள் மிக்க திறமை வாய்ந்தவை.

7. நாம் கற்பிக்க விரும்பும் எந்த வார்த்தையையும் கிளிகள் சாதுர்யமாய் கற்றுக்கொண்டாலும், அந்த வார்த்தையின் கருத்தை அவை அறியமாட்டா; தாம் சொல்லுவது என்ன என்பதை நினைக்கவும் மட்டா. இந்த விஷயத்தில் பிள்ளைகளும் சில சமயங்களில் கிளியை ஒத்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பிறர் கற்பிக்கும் விஷயங்கள் இன்னவையென்று அவர்கள் நன்றாக அறியக்கூடும். ஆயினும், அவ்வாறு செய்யப் பிரயாசப்படுவது அவர்களுக்கு அதிக கஷ்டமாகத் தோன்றும்.

# 28. பொய் பேசுதல்

பொய் பேசுவதாகிய கொடுங் காரியத்தினுல் விளையும் தீமைகள் பல உள. அவைகளை யெல்லாம் நுட்பமாய் ஆராய்ந்தறிவது எல்லார்க்கும் எளிதன்று. ஆகிலும், அவைகளுள் மிகவும் கொடுமையான சிலவற்றையாவது தெரிந்துகொள்ளுதல், ஒருபோதும் பொய் சொல்லக் கூடாதென்னும் மன உறுதி உண்டாவதற்கு சாதகமாயிருக்கும். முதலாவது, பொய் சொல்வது பேதைமையின் காரியம். எப்படி யென்ருல், ஒருவன் பொய் சொல்லிக்கொண்டே வந்தால், எப்போதாவது அது வெளியில் வந்து விடுமே தவிர வராமற் போகாது. ஒரு பொய்யைத் தூண்டி இழுக்க எத்தனையோ உபாயங்களுண்டு. ஆகையால், சாதாரணமாய் ஏறக்குறைய எல்லாப் பொய்களும் வெளியாய்விடும். ஒருவன் பொய்யனென்று பகிரங்கமாய்த் தெரிந்துவிட்டால், அவன் பிறகு நிஜம் சொன்னுலும் ஒருவரும் நம்பார். மாடு மேய்த்துக்கொண்டிருந்து ஒரு பையன் வேடிக்கையாகப் 'புலி புலி' யென்று கூவி, அருகிலிருந்தவர்களை ஏமாற்றினுன். ஒரு நாள் மெய்யாகவே புலி வந்த போது, ஒத்தாசைக்காகக் கூவியும் ஒருவரும் அவன் பேச்சை நம்பாமலிருக்க, அவன் மிகவும் துன்பம் அடைந்து மாண்டான் என்னும் கதை எல்லாரும் அறிந்திருக்கலாமே.

2. ஏதோ ஒரு குற்றத்தை மறைப்பதற்காகவோ, பிறரை வஞ்சித்து ஒரு லாபத்தை அடைவதற்காகவோ ஒருவன் பொய் சொல்லுகிருன். அந்தக் கருத்து நிறைவேருமற் போனுல் அவனுடைய தப்-

பிதம் ஒன்றுக்கு இரண்டாகிறது. பொய்யினால் குற்றம் பெரிதாகிறதே யல்லாமல் கொஞ்சமேனும் குறைவுபடுகிறதில்லை. ஆகையால், பொய் பேசி ஒரு காரியத்தை வெல்ல நினைப்பது சாமர்த்திய மன்று. வாஸ்தவமாய்க் கெட்டிக்காரனானால், ஒரு போதும் பொய் சொல்லி, சங்கடத்தில் அகப்பட்டுக்கொள்ளமாட்டான். பொய் சொல்லாமலிருப்பதே சாமர்த்தியத்திற்கு லக்ஷணம்.

3. இரண்டாவது, பொய் பேசுவது மிகவும் இழிவு. கூச்சமில்லாமல் தைரியமாய் நேர்வழியில் நின்று உண்மை பேசத் துணியாமல், இடுக்கு வழியிற் சென்று, தந்திரங்கள் தேடித் தப்பித்துக்கொள்ள எண்ணும் மனம் எவ்வளவு அற்பமானது! இந்தக் காரணத்தை முன்னிட்டே பொய்யன் என்னும்சொல் நாகரிகமுள்ளவர்களுக்குள் தூஷண வார்த்தையாக வழங்கிவருகிறது.

4. அன்றி, கடவுளின் செய்கைகளைப் புகழ்ந்து பாடவும், அவருடைய குணாதிசயங்களைத் தோத்திரம் பண்ணவும் அவர் மனிதனுக்குப் பேசுவதற்கான சக்தியை அளித்திருக்க, அதைத் தீய மார்க்கமாய்க் கொண்டுபோய் உபயோகப்படுத்துவது எவ்வளவு கொடுஞ்செய்கை! மனிதர் ஒருவரோடொருவர் ஒத்து வாழும்பொருட்டு அவர்களைக் கட்டும் பந்தம் ஒன்றுண்டு; அதாவது உண்மை. அதிலிருந்தும் ஒருவன் நீங்க யத்தனப் பட்டால், இன்னொருவன் ஏன் அப்படிச் செய்யக்கூடாது? அப்படியே உலகத்தில் நம்பிக்கை என்பது போய்விட்டால், நல்வாழ்வும் அற்றுப்போகு மல்லவா?

5. சொல்லும் சொற்களுக்குப் பதப்பொருளாய் ஓர் அர்த்த மிருக்க, அவைகளைக் கேட்பவனுக்கு வேறொரு அர்த்தம் படும்படியாய்ப் பேசுவது குற்ற மன்றென்று சிலர் நினைக்கலாம். பிரத்தியக்ஷமாக வெறும் பொய்யைத் துணிவாய்ச் சொல்வது எப்படியோ, அப்படியே இரண்டர்த்த முள்ள சொற்களைச் சொல்வதும், வஞ்சகமுள்ள ஜாடைகள் காட்டுவதும், தலை யசைப்பதுங்கூடப் பொய்யாகவே கொள்ளப்படும்.

6. ஒருவன் தான் வாக்குக் கொடுத்தபடி செய்யத் தவறிப்போனால், அதுவும் பொய் சொல்வதாகிய குற்றத்தில் சேரும். எவ்வளவு அற்பமான சங்கதியானாலும், பேச்சுத் தவறாமல் நடக்கவேண்டும். அப்படிச் செய்யச் சக்தியில்லாதவன், ஏன் வீணாய் வார்த்தைகளைச் செலவழித்துப் பொல்லாப்பு அடைய வேண்டும்! சொன்னது சொன்னபடி செய்து தீரவேண்டு மென்னும் நிர்ப்பந்தத்தை எவன் வைத்துக்கொள்ள வில்லையோ, அவனை உண்மையுள்ளவன் என்று சொல்வது தகுதியன்று.

## 29. ஆந்தை

ஆந்தைக்குப் பருத்து உருண்டையான தலையும், பூனைக்கிருப்பது போன்ற கண்களுமுண்டு. அதன் இறக்கை மிருதுவானதாயும் தூவி நிறைந்ததாயும் இருத்தலால், அது சிறிதும் அரவமின்றிப் பறந்து போய்த் தன் இரையை அயர்ப்பில் பிடித்துக்கொள்ளும். அதன் செவி நுட்பமான சத்தத்தையும் கேட்கும்படி அமைந்துள்ளது.

2. ஆந்தை இரவில் இரைதேடும்; ஏனென்றால், அதன் முக்கியமான இரைகளாகிய எலியும் சுண்டெலியும் தங்கள் வளைகளைவிட்டு இரவில்தான் வெளிப்படும். மிகவும் சொற்ப வெளிச்சத்திலும் அது தன் பெரிய கண்களால் நன்றாய்ப் பார்க்கும். சூரிய ஒளியில் அதற்குக் கண் கூசுமாதலால், அது பகலில் அவ்வளவு நன்றாய்ப் பார்க்கமுடியாது. பகற்காலத்தில், வெளியே போகவேண்டிய அவசியமிருந்தாலொழிய அது வெளிப்படுவதில்லை. வெளிப்படின், சிறு பக்ஷிகளும் அதைத் தாக்குவதுண்டு; அதுவோ தன்னைக் காத்துக்கொள்ளப் பிரயாசப்படுவதில்லை.

3. ஆந்தை எலிக்குஞ்சையாவது, சுண்டெலியையாவது முழுமையாய் விழுங்கி, பிறகு எலும்புகளையும், தோலையும் உருண்டையாகத் திரட்டிக் கக்கிவிடும். பக்ஷிகளைக் கிழித்துத் துண்டுதுண்டாக்கித் தின்னும்.

4. ஆந்தை கோபமாயிருக்கும்போதாவது பயப்படும்போதாவது அலகைக் கடித்துக்கொண்டு, சத்தமிட்டுப் பூனையைப்போல் இரைச்சலிடும். பெரிய ஆந்தையை வேறொரு ஜந்து வந்து தாக்கினால், அது

மல்லாந்துகொண்டு, பயங்கரமான தன் அலகையும், கால் நகங்களையும் காட்டிக்கொண்டு, பிராணன் போகும்வரையும் சத்துருவோடு சண்டை செய்யப் பின்னிடைவதில்லை.

5. ஆந்தை தன் குஞ்சுகளின்மேல் அதிக பக்ஷமுள்ளது. அதன் கூட்டை ஒருவன் எடுத்துக்கொண்டு போனால், அது தன் குஞ்சுகளுக்கு இரை வைத்துக் கொண்டு பின்னால் தொடர்ந்துபோகும். ஒரு சமயத்தில் ஆந்தைக் குஞ்சொன்று ஒரு கோழிக்கூட்டுக்குள் அடைத்துவைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது ஒவ்வொரு இரவிலும், எல்லாம் அமைதியாயிருக்கையில், தாய்ப்பறவை தன் குஞ்சுக்காக ஒரு சிறு குருவியையாவது எலிக்குஞ்சையாவது கொண்டு வந்து அந்தக் கோழிக் கூட்டின் ஓரத்தில் வைத்துவிட்டுப் போயிற்று; அந்தக் குஞ்சு தனக்கு வேண்டியதைத் தானே சம்பாதித்துக்கொள்ளக்கூடிய பெரிய பக்ஷியாகும் வரையும் இப்படியே செய்தது.

6. ஆந்தையினுடைய அமைதியுங் கம்பீரமுமான நிலை தத்துவ சாஸ்திரிக்குரிய குறிப்பைக் காட்டுகிறபடியால், கிரேக்கர் சரசுவதியாகிய 'மினெர்வா' என்னும் தங்கள் தேவதைக்கு ஆந்தையைப் பிரதிஷ்டை செய்தார்கள்.

7. அறிவீனரான ஜனங்கள் அநேகர் ஆந்தை கிளைகூட்டுவது துர்ச்சகுணம் என்று எண்ணுகிறார்கள். இதில் எள்ளளவும் உண்மையில்லை. ஆந்தைகள் வேளாண்மைக்குச் சத்துருவான எலிகளையும் சுண்டெலிகளையும் நாசமாக்கி நன்மை செய்கின்றன.

## 30. கடவுள் ஒருவர் உண்டு

கடவுள் ஒருவர் உண்டென்று நம்புகிறவர்களுக்கு ஆஸ்திகர் என்று பெயர். கடவுள் இல்லை என்று மறுக்கிறவர்களுக்கு நாஸ்திகர் என்று பெயர். ஒரு நாஸ்திகன் தானே ஆஸ்திகனாக மாறிய வரலாறு ஒன்று கூறுவோம்.

2. ஓர் ஊரில், வீரன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் கடவுள் இல்லை என்று மறுக்கும் நாஸ்திகன். தெய்வம் என்று அவனிடம் சொன்னால் சீறி விழுவான். கடவுள் என்று சொல்லுவோரைக் காய்ந்து வைவான். ஆலயங்களைக் கண்டால் அசட்டை செய்வான். அடியாரைக் கண்டால் அவமதித்துப் பேசுவான்.

3. யாராவது வீரனிடம் கடவுளைப் பற்றிப் பேசினால், "கடவுளை நீ நேரில் கண்டாயா? அவர் எங்கே இருக்கிறார்? எப்படி இருக்கிறார்? என்ன செய்கிறார்?" என்று பலவாறு குதர்க்கமாய்க் கேட்டு, கேட்டவர் வாய்க்குப் பூட்டுப் போடுவான்.

4. ஒரு நாள், வீரன் ஓர் ஊருக்குப் பிரயாணம் செய்தான். அவன், வழியில் ஒரு குளக்கரையில் தங்கி, கட்டுசாதம் சாப்பிட்டு, களைதீர ஓர் ஆலமரத்தின் அடியில் படுத்தான்; படுத்து மேலே பார்த்தான். மரத்தில் பழங்கள் நிறைந்திருக்கக் கண்டு, தனக்குள் யோசிக்க ஆரம்பித்தான்.

5. "ஆஹா, இந்த ஆலமரம் எவ்வளவு பெரியதாய் ஓங்கி வளர்ந்திருக்கிறது! இது சுமார் கால் மைல் அளவுக்குப் பரந்திருக்கும்போல் காண்கிறது. சில இடங்களில் ஆலமரம் ஒரு மைல் அளவுக்கும்

பரந்து வளர்ந்திருக்கின்றது. இவ்வளவு பெரிய மரத்திற்குக் காயோ கழற்சிக்காய் அளவாய் சிறுத்து இருக்கிறது. பரங்கிக் கொடியோ ஒரு விரல் அளவு பருமன் இருக்கும். அதன் காயோ பலாக்காய் அளவு பருத்திருக்கின்றது; இது என்ன ஆச்சரியம்!"

6. "சிலர் இவற்றை யெல்லாம் கடவுள் ஒருவர் படைத்ததாகச் சொல்லுகிறார்களே, அந்தக் கடவுளின் அறிவை என்னவென்று சொல்லலாம்! பெரிய மரத்திற்குச் சிறிய காயும், சிறிய கொடிக்குப் பெரிய காயும் படைத்தது மூடத்தனமல்லவா" என்று எண்ணினான்.

7. அப்பொழுது ஓர் ஆலங்காய் மரத்திலிருந்து அவன் புருவத்தின்மேல் விழுந்தது. விழவே, திடுக்கிட்டு எழுந்து, "ஆஹா! நமக்கு நல்ல புத்தி வந்தது. கடவுளை மூடன் என்று எண்ணினோமே, அவர் மூடரல்லர், அவர் மிகவும் அறிவுடையவர். அவர் இந்த மரத்திற்கு ஏற்றதுபோல் பெரிய காயை உண்டாக்கியிருந்தால், இப்போது நமது தலை நொறுங்கிப்போய் இருக்கும் அல்லவா? அவர் அறிவே அறிவு. அவருடைய மகிமை தெரியாமல் இதுவரையில் வாய்க்கு வந்தபடி பிதற்றிக்கொண்டு இருந்தோமே, என்ன செய்வது! இனியாவது நாம் கடவுளை வழிபடவேண்டும் என்று தீர்மானித்து, நற்புத்தி யடைந்தான்.

# 31. பொறாமை

ஒருவன் அடையும் நன்மையைப் பார்த்து மனஞ் சகியாமலிருப்பதுபொறாமை. பொறாமைக்காரன்மனம் எப்பொழுதும் துன்பத்தையே யடையும். அவனுக்குச் சந்தோஷ மென்பது உண்டாகாது. பொறாமை யுள்ளவன் முடிவில் தனக்கே அழிவைத் தேடிக்கொள்வான். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுவோம்.

2. பொறாமையே குடிகொண்டமனத்தையுடைய ஒருவன், தன் அண்டைவீட்டுக்காரன் அடையும்செல்வத்தைக் கண்டு சகிக்கமாட்டாமல், மன வேதனை கொண்டு, காட்டிற்கு ஓடி விட்டான். அவ்விடத்தில் ஒரு சந்நியாசி எதிர்ப்பட்டு, பொறாமைக்காரனை நோக்கி, "ஐயா! நீ யார்? உனக்கு என்ன வேண்டும்?" என்று வினவினர். அதற்குப் பொறாமை யுள்ளவன் சந்நியாசியை வணங்கிச் சொல்லுவான்.

3. "பெரியோரே! நான் ஓர் ஏழை. எனக்குத் தேவரீர் பெருஞ் செல்வ முண்டாக அருள்செய்ய வேண்டும்" என்று வேண்டினன். அப்பொழுது சந்நியாசி ஓர் அரிய பாச்சிகையைக் கொடுத்து, "இதை மூன்று முறை உருட்டு; ஒவ்வொரு முறைக்கும் நீ வேண்டியது கிடைக்கும். ஆனல் உன் அண்டை வீட்டுக்காரனுக்கு உனக்குக் கிடைப்பதைப் போல் இரண்டத்தனை கிடைக்கும்" என்று சொல்லிப் பாச்சிகையைக் கையிற் கொடுத்தார்.

4. பொறாமைக்காரன் அப் பாச்சிகையை பெற்றுக்கொண்டு தன் இருப்பிடம் வந்து, "எனக்கு ஒரு அலங்காரமான மாளிகை உண்டாகக் கடவது" என்று முதல் முறை உருட்டினன். பொறாமைக்காரன்

நினைத்தபடியே, தனக்கோர் மாளிகையும் அயல் வீட்டானுக்கு இரட்டிப்பும் ஏற்பட்டன. அதைக்கண்ட பொருமைக்காரன், சந்நியாசி சொல்லியதை ஊகித்தறிந்து, "ஆகா! என்ன காரியஞ் செய்தேன்! என்று மனங் கொதித்து, "இவனுக்கும் இவ்வளவு செல்வமுண்டாக நான் பார்ப்பேனு?" என்று சொல்லி, என் வீட்டில் பாதி யழியக்கடவது" என இரண்டாம் முறை உருட்டினுன். அப்படியே தன் வீட்டில் பாதியும் அண்டைவீடு முழுமையும் அழிந்தமை கண்டு அக மகிழ்ந்தான்.

5. மூன்ரு முறை பாச்சிகையை உருட்ட நமக்கு என்ன வேண்டுமென்று ஆலோசித்தான். அண்டை வீட்டுக்காரன் அழிவதே நமக்கு வேண்டுவது எனத் தீர்மானித்து, ஒரு மனிதனுக்கு மிகவும் அருமையானது கண்ணல்லவா? ஆகையால், அதையே அழித்துவிட வேண்டுமென்று, மூன்ரு முறை "என் கண்களில் ஒன்று அவியக் கடவது" என்று உருட்டினுன். உடனே, தனக்கு ஒரு கண்ணும், அண்டை வீட்டுக்காரனுக்கு இரண்டு கண்களும் அவிந்தன. வீடழிந்தது மன்றி கண்களும் அவிந்துபோக அண்டை வீட்டுக்காரன் அவ்வூரைவிட்டு அகன்ருன்.

6. அது கண்ட பொருமைக்காரனுடைய வேலைக்காரர்கள் ஒன்று சேர்ந்து, அவனை அடித்து, அவனது பொருள்களை எல்லாம்கொள்ளையிட ஆரம்பித்தார்கள். அப்போது, பொருமைக்காரன், "ஐயையோ! பொருமையின் பயன் இதுதானு? என் அயலான் இருந்தால், இவ் வேலைக்காரர்கள் இப்படிச் செய்வார்களா? என்று தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு உயிர் துறந்தான்.

## 32. உப்பு

உப்பு, நாம் உண்ணும் உணவுக்கு சுவை கொடுக்கும் பொருள்களில் முக்கியமானது? 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்னும் பழமொழி உப்பின் விசேஷத்தை உணர்த்தும்.

2. உப்பு தண்ணீரிலிட்டால் கரையக் கூடியது; நெருப்பிலிட்டால் வெடிக்கக்கூடியது. கடல் நீர் முழுவதும் உப்பாயிருக்கிறது. அதனால், பெரும்பாலும் கடல் நீரைக்கொண்டே உப்பு விளைவிக்கிறார்கள்.

3. கடற் கரையை யடுத்த நாடுகளில் உப்பு உண்டாக்குகிறார்கள். உப்பங்கழிகள் உள்ள நாடுகளிலும் உண்டாக்குவது முண்டு. முதலில் நிலத்தைச் சமப்படுத்தி, பாத்திகட்டி, உப்புத் தண்ணீரை இறைப்பார்கள். உப்பு நீர் பாத்திகளில் தங்கி, சூரிய உஷ்ணத்தினால், தண்ணீர்மாத்திரம் ஆவியாகமாறி மேலே போய்விடும்; உப்புமாத்திரம் பாத்தியில் தங்கி விடும். பயிரிடுவோர் மேலும் மேலும் தண்ணீர் இறைப்பார்கள். மேல்சொன்ன விதமாகவே தண்ணீர் ஆவியாகப் பரிணமித்துச் செல்ல, உப்பு மேலும் மேலும் பூத்து நிற்கும். அந்த உப்பை சேகரித்து வாரி எடுத்துக் குவிப்பார்கள்.

4. உப்பு வியாபாரம துரைத்தனத்தாருடைய பார்வைக்கு உட்பட்டது. ஏனெனின், துரைத்தனத்தார் உப்பு வியாபாரத்திற்குக் கொஞ்சம் வரி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். குடியானவர்கள் உப்பைப் பயிரிட்டுக் குவித்து வைத்தால், துரைத்தன உத்தியோகஸ்தர் வந்து பார்வை யிடுவார்கள். சில சமயங்களில்

உப்பு கெட்டிருக்கும். அப்படிப்பட்ட வுப்பைத் தண்ணீரிற் கொட்டிவிடும்படி அந்த உத்தியோகஸ்தர்கள் உத்தரவு செய்வார்கள். நல்ல உப்பாய் இருந்தால், அந்த உத்தியோகஸ்தர்கள் அளந்து எடுத்துக்கொண்டு பயிரிட்டவனுக்கு விலைகொடுத்து விடுவார்கள். பிறகு, துரைத்தனத்தாரே அந்த உப்பை வர்த்தகர்களுக்கு விற்பது வழக்கம்.

5. உப்பு உணவுக்கு முக்கியமானது. 'உப்பிட்டவரை உள்ளவும் நினை', 'உப்பும் தண்ணீரும் உள்ளவரையில் உழைக்கவேண்டும்' என்னும் வாக்கியங்களால் உப்பே உணவுப்பொருள்களில் முக்கியமானதாகத் தெரிகிறது.

6. உப்பை அதிகமாகத் தின்பதும் கெடுதி. உப்பு மிஞ்சினால் தண்ணீர் அதிகம் கேட்கும். 'உப்பு தின்றவன் தண்ணீர் குடிப்பான்' என்பதும் ஒரு பழமொழி. 'உப்பு மிஞ்சினால் குப்பையிலே' என்றும் வழங்குகிறது. உப்பு பண்டங்களைக் கெடாமல் காக்கும்; ஊறுகாய் முதலியவற்றிற்கு உப்பு சேர்ப்பதற்கும் மச்சம் மாமிசங்களை உப்பிட்டு உலர்த்துவதற்கும் காரணம் இதுவே.

# 33. வேர்கள்

விருக்ஷங்களுக்கு முக்கிய ஆதாரம் வேரே. அடி-மரத்தின் கீழ் பூமிக்குள் பரவியிருக்கும் பாகமே வேர் எனப்படும். வேர்கள், பூமிக்குள் பல பக்கங்களி-லும் பரவி ஓடி, மரத்தை நிலைக்கச் செய்கின்றன. கழைக்கூத்தன் ஆடும்போது ஸ்தம்பத்தை எப்படி நிறுத்துகிறான்? கயிற்றை ஸ்தம்பத்தின்மேலே கட்டி, நாலா பக்கத்திலும் முளை யடித்து, பிணித்து வைக்-கிறான் அல்லவா. அந்தக் கயிறுகளைப் போலவே இந்த வேர்களும் மரத்தை விழாமல் காக்கின்றன.

2. மரம் காற்றினால் விழாதபடி காக்க, பக்கங் களில் பரவும் வேர்களுக்குப் 'பக்கவேர்' என்று பெயர். செடி முளைக்கும்போதே ஒரு வேர் நீண்டு பூமிக்குள் நேரே செல்லும். அந்த வேரும் மரத்தை விழாமல் காக்கும்; அதற்கு 'ஆணிவேர்' என்று பெயர். சில வேர்கள் பக்க வேரிலும், ஆணி வேரிலும் கிளைத்து, மயிரிழைபோல் வளரும்; அந்த வேர்கள் பூமியில் உள்ள தண்ணீரையும் மரவுணவு சாரத்தையும் உறிஞ்சி மரத்தைப் போஷிக்கும். அதற்கு 'சல்லிவேர்' என்று பெயர். சில மரங்களுக்கு ஆணிவேர் பூமிக்குள் நீர்-மட்டம் வரையில் போகும். அப்படிப்பட்ட மரங்க-ளுக்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்கவேண்டிய அவசிய-மில்லை. புளி, பனை முதலிய மரங்களுக்கு ஆணிவேர் அதிக நீளமானது. அதனால், அவை தண்ணீர் வேண்-டாமலே நன்றாய் வளர்கின்றன.

3. தென்னமரத்திற்கு வேர் பூமியின் மேற்புற-மாகவே பரவியிருக்கும். அதனால், அதற்கு அதிகம்

தண்ணீர் பாய்ச்சவேண்டும். பாக்கு, வாழை முதலிய மரங்கள் இந்த இனத்தில் சேர்ந்தவை.

4. தாவரங்களுக்கெல்லாம் வேர் ஒரே வகை-யாக இருப்பதில்லை. நெல், கம்பு, சோளம் முதலிய பயிர்கள் ஒரு வருஷமே ஜீவித்திருக்கும். இவற்றின் வேர் நார்போல் இருக்கின்றன. அதனால், ஓர் ஆண்-டுப் பயிர்களின் வேர்களுக்கு 'நார் வேர்' என்று பெயர். கருணை, உருளை முதலிய கிழங்குப் பயிர்-களை விட்டுவைத்தால், அவை இரண்டுவருஷம் ஜீவித்-திருக்கும். அவற்றின் வேர்கள் சதைப்பற்று உள்-ளவை. அதனால், ஈராண்டுப் பயிர்களின் வேர்களுக்கு 'தசைவேர்' என்று பெயர். பெரும்பாலும் மரங்-கள் எல்லாம் பல ஆண்டுகள் ஜீவித்திருக்கின்றன. அவற்றின் வேர் மரத்தின் தன்மையாகவே இருக்-கின்றன. அதனால், பலவாண்டுப் பயிர்களின் வேர்-களுக்கு 'மரவேர்' என்று பெயர்.

5. வேர்களை மரத்திற்குக் கீழ் நோக்கிப்போகும் கிளைகள் என்று சொல்லலாம். கிளைகளில் இலைகள் உண்டு; வேரில் இலை யில்லை. கிளைகள் அதிகமும் பருத்திருக்கின்றன; வேர்கள் சிறுத்திருக்கின்றன.

6. வேர்கள் மரத்திற்கு உபயோகப் படுவதே யன்றி, மனிதர்க்கும் உபயோகமாகின்றன. சில வேர்-க்களை மருந்தாகவும், சாயச் சரக்கு முதலியவாகவும் உபயோகித்துக்கொள்ளுகிறோம்.

## 34. ஆறு

ஆறுகள் பெரும்பாலும் மலைகளிலிருந்தே தோன்றுகின்றன. சில ஆறுகள் பெரிய ஏரிகளிலிருந்தும் தோன்றுவதுண்டு. சில ஆறுகளில் எப்போதும் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும். அவற்றிற்குப் பேராறுகள் அல்லது ஜீவ நதிகள் என்று பெயர். சில ஆறுகளில் மழை காலத்தில்மட்டும் தண்ணீர் ஓடுவதுண்டு. இவற்றிற்குச் சிற்றாறுகள் என்று பெயர். கங்கை, பிரமபுத்திரை, கோதாவரி, கிருஷ்ணை முதலிய ஆறுகள் ஜீவ நதிகளாம். வையை, தாமிரபருணி முதலியவை சிற்றாறுகளாம்.

2. மழைபெய்து மலைச்சாரலில் பாயும் அருவிகள் ஒன்று சேர்ந்து ஆறுகளாகப் பாய்கின்றன. ஒரு பெரிய ஆற்றில் வேறு சில சிற்றாறுகளும் வந்து கலப்பதுண்டு. அந்தச் சிற்றாறுகளுக்கு உபநதிகள் என்று பெயர். பெரிய ஆற்றிலிருந்து பிரிந்து சிற்றாறுகளாகப் பாய்வதும் உண்டு. அவற்றிற்குக் கிளை நதிகள் என்று பெயர்.

3. நதிகள் தோன்றுமிடம் உயரமாயும், பாயுமிடம் தாழ்வாயும் இருக்கும். ஆறு தோன்றுமிடத்திற் குறுகியும் போகப் போக அகன்றும் காணும். பெரும்பாலும் ஆறுகள் எல்லாம் கடலில் கலக்கின்றன. அதிக மழையினால் உண்டாகும் வெள்ளத்தை ஆறுகளே கடலிற் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன.

4. ஆறுகள், அவை பாயும் இடங்களுக்குச் செழிப்பையும் அழகையும் தருகின்றன. இதை 'ஆறில்லா ஊருக்கழகு பாழ்' என்பதனால் உணரலாம். ஆற்றை யடுத்த ஊர்களில் வசித்தால் சுகானுகூலம்

உண்டாகும். சுத்தமான ஆற்று நீர் பலவித நோய்களையும் போக்கத் தருந்தது.

5. ஆற்று நீர் பயிர்களுக்குப் பாய்ச்ச உதவுகின்றது. ஆற்றுக்கால் பாய்ச்சலுள்ள நிலங்கள் எப்போதும் நல்ல பலனைத் தரும். அகன்று ஆழ்ந்த ஆறுகள் கப்பல் செல்வதற்கும் ஏற்றவை யாதலால், அந்த ஆறுகள் வர்த்தகம் செய்வதற்கும் அநுகூலமானவை.

6. இந்து தேசத்தில் கங்கை, பிரமபுத்திரை, சிந்து ஆகிய மூன்று ஜீவநதிகளும் வடக்கில் தோன்றித் தெற்கில் பாய்கின்றன. தபதி, நருமதை ஆகிய இரண்டு நதிகளும் கிழக்கில் தோன்றி மேற்கில் பாய்கின்றன. மற்ற நதிகள் எல்லாம் மேற்கில் தோன்றிக் கிழக்கில் பாய்கின்றன.

7. வெய்யிற் காலத்தில் சிற்றாறுகளில் தண்ணீர் ஓடுவதில்லை. ஆயினும், அந்த ஆற்றில் கால்வாய் வெட்டினால் ஊற்றுநீர் சுரக்கும். அது மனிதர்களுக்கும் மற்ற ஜந்துக்களுக்கும் உபயோகமாகிறது.

8. சில ஆறுகளில் பொன், வெள்ளி முதலிய உலோகங்கள் மணல்போல் கிடைக்கின்றன. சிலவற்றில் வைரம் முதலிய கற்களும் கிடைப்பதுண்டு.

## 35. கடல்

உலக முழுதும் பூபாகத்தைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் உப்புநீர்ப் பரப்புக்குக் கடல் என்று பெயர். பூபாகத்தைவிட ஜலபாகம் மூன்றுபங்கு அதிகமானது. பூமியிலுள்ள மற்ற நீர்நிலைகளுக்கும் கடலே முக்கிய ஆதாரமானது.

2. கடல் அகன்று இருப்பது போலவே ஆழ்ந்தும் இருக்கிறது. கடல் எங்கும் ஒரே அளவான ஆழமுடையது அன்று. சில இடங்களில் அளக்கக்கூடாத ஆழமும் உடையது. அதனால், கடலுக்கு 'ஆழி' யென்றும் பெயர் உண்டு.

3. தரையில் இருப்பது போலவே சமுத்திரத்திலும் எண்ணிறந்த ஜந்துக்கள் இருக்கின்றன. எறும்பினும் சிறிய ஜந்துவும், யானையினும் பெரிய ஜந்துவும் கடலில் உண்டு. கடலிலும் மலைகள் காணப்படுகின்றன. கடலின் அடியில் நீரோட்டம் பாய்கிறது; அதைக் கடலிலுள்ள ஆறுகள் என்று சொல்லலாம்.

4. கடலில் அநேகவித விலையுயர்ந்த பொருள்கள் இருக்கின்றன. பலவிதமான இரத்தினங்களும், பவளங்களும் கடலிலிருந்து கிடைக்கின்றன. கடலில் வசிக்கும் ஒருவிதக் கிளிஞ்சிலிலிருந்தே முத்துக்கள் அகப்படுகின்றன. இதனால் கடலுக்கு 'ரத்நாகரம்' என்னும் ஒரு பெயர் வழங்குகிறது.

5. கடல்நீர் கருமை நிறமுள்ளதாகக் காண்கின்றது. கடல் அதிக ஆழமாய் இருப்பதனாலும், வானத்தின் சாயை பிரதிபிம்பிப்பதனாலும் அவ்வாறு தோன்றுகிறது. சில விடங்களில் கடல்நீர் இறுகிப் பனிக்

கட்டிகளாக மிதக்கும். சில விடங்களில் தண்ணீர் உரைந்து கப்பலும் செல்லக்கூடாதபடி கட்டிப்போயிருக்கும்.

6. கடற்கரையில் அலைகள் மோதிக்கொண்டே இருக்கின்றன. கடலில் கொஞ்சதூரம்போனுல் அலையிராது. புயல் அடிக்கும்போது கடல் நடுவிலும் அலைகள் மலைபோல் எழுந்து வீசும். இதனுல் அலை வீசுவதற்கு காற்றே காரணம் என்பது ஏற்படும்.

7. கடலே மழை பொழிவதற்குக் காரணமாக இருக்கிறது. சூரிய வெப்பத்தினுல் கடல்நீர் ஆவியாகி, மேலே சென்று மேகமாகி மழையாகப் பொழிகின்றது. கடல்நீர் உப்பாயிருப்பதேன்— கடல்நீர் சுத்த ஜலமாக இருந்தால் அது முழுதும் துர்நாற்றமெடுத்து உலகம் அழிந்துவிடும். உப்புநீரா யிருப்பதனுல் அதில் சேரும் கெட்ட பொருள்களையெல்லாம் சுத்தப்படுத்தி நாற்றமில்லாமலிருக்கிறது.

8. தூரதேசங்களுக்குக் கடல்மீதில் போகவேண்டும். அதற்கு நீராவிக்கப்பல்கள் உதவியாயிருக்கின்றன. கடலில் யாத்திரை செய்தவர்கள் அநேக புதிய நாடுகளைக்கண்டு பிடித்து இருக்கிறுர்கள். அதனுல் இப்போது நாம் அதிக நன்மையை அடைகிறேம்.

# 36. வர்த்தகம்

நமக்கு ஒருபொருள் வேண்டுமானால், அந்தப் பொருளை வைத்திருப்பவனுக்கு வேறு பொருளைக் கொடுத்து அதைப் பெற்றுக்கொள்ளுவோம். இப்படி ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருளை வாங்கிக் கொள்வதே வர்த்தகமாகும். வர்த்தகம் என்பது பண்ட மாற்றேயாம்.

2. மானிட வாழ்க்கைக்கு வர்த்தகம் அவசியமானது. வர்த்தகம் இல்லாவிட்டால், நாம் அதிகமும் கஷ்டப்பட வேண்டியிருக்கும். குறித்த காலத்தில் நமக்கு வேண்டிய பொருள் கிடைப்பது அருமை. அன்றி, ஒவ்வொருவனும் தனக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் தானே செய்து கொள்ள முயலவேண்டியவனாவான். இது யாரால் ஆகிற காரியம்!

3. வர்த்தகத்தினால் பஞ்சம் தோற்றாமல் விலகும். ஓர் இடத்தில் விளைவு குன்றினால், அங்குள்ள வர்த்தகர்கள், நல்ல விளைவுள்ள நாடுகளுக்குச் சென்று தானியங்கள் கொண்டுவந்து தம் ஊரில் விற்பனை செய்யத் தலைப்படுவார்கள். விலை சிறிது அதிகமானாலும், தானியம் கிடைக்கவில்லையே என்னும் கவலை இராதன்றோ.

4. வர்த்தகத்தினால் நாகரிகம் விருத்தியாகும். வர்த்தகத்தின் பொருட்டு ஒரு நாட்டிலுள்ளவர் மற்றொரு நாட்டிற்குப் போக நேரிடுகின்றது. அதனால் பிற நாட்டு வர்த்தமானங்களும் நடையுடை பாவனைகளும் நன்கு விளங்கும். விளங்கவே நல்லொழுக்கங்களை ஒருவர்க் கொருவர் கண்டு அநுசரிக்க இடமுண்டாகும்.

5. வர்தகத்தினால் கைத்தொழில் விருத்தியாகும். வஸ்துக்களைக்கொண்டே வர்த்தகம் செய்கின்றோம். வஸ்துக்களைக் கொள்வோர் அதிகமானால், அதிக வஸ்-துக்களைச் சேகரிக்க அவசியமுண்டாகும். அதனால் கைத்தொழில் விருத்தியாவதோடு, நாளடைவில் யந்திரங்கள் செய்யவேண்டும் என்னும் ஊக்கமும் உண்டாகும்.

6. ஒரு நாட்டின் செல்வ மிகுதியைத் தெரிவிப்-பது வர்த்தகமே. வர்த்தகம் ஒரு நாட்டில் எவ்வள-வுக் கெவ்வளவு மிகுந்திருக்கிறதோ அந்த நாடு அவ்-வளவுக்கவ்வளவு செல்வத்திற் சிறந்ததென்று எண்ண-வேண்டும். பெரும்பாலும் வர்த்தகர்கள் எல்லாம் தனிகராகவே இருப்பார்கள். முதலில்லாத வர்த்தகம் முன்னுக்கு வராது.

7. வர்த்தகம் செய்வோர் நாட்டின் நன்மையை விரும்புவார்களானால், நாணயஸ்தராக இருக்கவேண்-டும். வர்த்தகத்தில் சொற்ப லாபம் எதிர் பார்ப்ப-வனே யோக்கியன். யோக்கியனல்லாத வியாபாரி-யைக் கொள்ளை யடிக்கும் கள்வனுக்குச் சமமாகச் சொல்லலாம். வர்த்தகம் பொதுஜன நன்மையைக் குறித்தது. ஆதலால், வர்த்தகர்கள் ஊரின் நன்மையை நாடினவர்களாக இருக்கவேண்டுவது அவசியம்.

## 37. தண்ணீர்

தண்ணீர் ஒரு திரவபதார்த்தம். திரவபதார்த்தங்களுக்குத் தமக்கான உருவம் ஒன்றும் கிடையாது. ஆதலால் தண்ணீருக்கும் உருவமில்லை. தண்ணீரை எந்தப் பாத்திரத்தில் வைக்கின்றோமோ, அந்தப் பாத்திரத்தின் உருவை அத்தண்ணீர் அடையும். பாத்திரத்தில் தண்ணீர் நிறைந்து விட்டால், மிகுந்த நீர் வழிந்து ஓடும். தண்ணீர் கீழ் நோக்கி ஓடும் தன்மையுள்ளது. "பள்ளங்கண்ட விடத்தில் தண்ணீர் நிற்கும்" என்னும் பழமொழியும் வழங்குகிறது.

2. தண்ணீருக்குச் சுயமான நிறம் கிடையாது. அது எந்த நிலத்தில் ஊறுகின்றதோ அந்த நிலத்தின் நிறத்தை யடையும். சுத்த ஜலத்திற்கு இயற்கையான சுவையும் இல்லை, மணமும் இல்லை. தெய்வசிருஷ்டியில் தண்ணீருக்கு இந்த விதமான தன்மைகள் உண்டாயிருப்பது ஏன் என்று சற்றுக் கவனிப்போம்.

3. எல்லாப் பொருள்களையும் நாம் தண்ணீரிலிட்டு சுத்தம் செய்கிறோம். தண்ணீருக்கு ஏதேனும் ஒரு நிறம் இருந்தால், அந்த நிறம் நாம் அதிலிடும் பொருளில் பிடித்துக்கொண்டு அப்பொருளின் நிறம் மாறுபடும். அதனால், நமக்கு வேண்டிய நிறம் நிற்காமற் போகும். ஆகவே, தண்ணீருக்கு இயற்கையில் நிறமில்லா திருக்கின்றது. இதுபோலவே, அதற்கு மணமும் சுவையு மிருந்தால், அதிலிடும் பொருளுக்குள்ள மணமும் சுவையும் மாறிவிடும் மாறிவிட்டால் நமக்கு வேண்டிய மணமும் சுவையும் அப்பொருளில் நிற்கமாட்டா. ஆகையால் சுத்தஜலம் நிறமும் சுவையும் மணமும் இல்லாமலிருக்கும்.

4. பக்கங்கள், கீழ், மேல் ஆகிய எந்தப் புறத்திலும் பாயும் சக்தி தண்ணீருக்குண்டு. இதை எப்படிக்கண்டு பிடிப்பது. ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வைத்து, பக்கத்தில் ஒரு சிறு துவாரம் செய்தால், தண்ணீர் பக்கவாட்டமாய்ப் பாய்கின்றது. அப்படியே அப்பாத்திரத்தின் அடியில் துவாரம்செய்தால் கீழ்ப்புறமாய் பாய்கின்றது. இதனால் மேற்புறத்திலிருந்து கீழ்ப்புறமாய் நோக்கிப் பாயும் சக்தியிருக்கிறதென்று தெளிவாகிறது. இனி, கீழ்ப்புறத்திலிருந்து மேற்புறமாய்ப் பாயும் சக்தியைக் கவனிப்போம். தண்ணீரில் ஒரு சடைத் துண்டைப் போடு, அது மிதக்கும். அந்தச் சடையை உன் சுட்டு விரலால் மெல்ல அழுத்தித் தண்ணீரின் அடிக்குக் கொண்டுபோய், விரலை மெல்ல மேலே எடு; அப்போது சடை உன் விரலோடு ஒட்டினாற்போல் மேலுக்கு எழும். அதைக் கவனித்தால் அடியிலிருந்து யாரோ அந்தச் சடையை மேலுக்குத் தள்ளுவது போல் தோன்றும். அதுதான் அடியிலிருந்து மேலே பாயும் சக்தி.

5. தண்ணீர் மிகவும் உபயோகமானது. அது எல்லா உயிர்களுக்கும் இன்றியமையாதது. தண்ணீர் இல்லாமல் எந்தக் காரியமும் நடவாது. நாம் குடிப்பதும் தண்ணீர். நமது உணவுப் பொருள்களை சமைப்பதும் தண்ணீர். நமது உடைகளை வெளுப்பதும் தண்ணீர். நமது தேகத்தைச் சுத்தஞ் செய்வதும் தண்ணீர். தண்ணீர் ஜந்துக்களுக்கே யன்றி, புல் பூண்டு முதலிய தாவரங்களுக்கும் மிகவும் அவசியமானதாகும்.

## 38. நாணயம்

நமக்கு ஏதேனும் ஒரு பொருள் வேண்டுமானால், உடனே கடைக்குப் போய், விலை பேசிப் பணம் கொடுத்து அதைப் பெற்றுக்கொள்கிறோம். பணம் இல்லாவிட்டால் ஒரு பொருளுக்காக மற்றொரு பொருளைக் கொடுக்கவேண்டி வரும். ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருள் பெறுவதானால் அநேக இடையூறுகள் நேரிடும்.

2. துணி விற்பவனுக்கு அரிசி வேண்டுமானால், ஜவுளி வியாபாரி அரிசி மண்டிக்காரனிடம் துணியை எடுத்துக்கொண்டு போவான். அரிசி வியாபாரிக்குத் துணி வேண்டி யிராவிட்டால், துணி வியாபாரிக்கு அரிசி கிடைப்பதெப்படி, கிடைக்காது. அரிசி வியாபாரி துணியைப் பெற்றுக்கொள்வதா யிருந்தாலும், ஜவுளிக் கடைக்காரன் தன் துணிக்குச் சொல்லும் விலை அரிசி வியாபாரிக்குச் சம்மதமாக வேண்டும். அப்படியே அரிசிவியாபாரி தன் அரிசிக்குச் சொல்லும் விலை துணிவியாபாரிக்குச் சம்மதமாக இருக்கவேண்டும். சம்மத மாகாவிட்டால் துணிவியாபாரிக்கு அரிசி கிடைக்காது. அப்படியே மற்றவர்களுக்கும் துன்பமுண்டாகும்.

3. ஆகையால், மனிதர்கள் கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் செல்லத்தக்க ஒரு பொருள் வேண்டுமென்று நாடுவது அவசியமாகும். அதற்கு ஏற்பட்ட அந்தப் பொருளுக்கே நாணயம் என்று பெயர். இப்போது நாம் வழங்கும் நாணயத்தை யாரிடத்தில் எப்போது கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளத் தடையிராது.

4. நாணயம் பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களால் செய்யப்படுகிறது. பொன்னால் சாவ-ரனும், வெள்ளியால் ரூபாவகைகளும், செம்பினால் காலணு, அரையணு தம்பிடியும் நாணயங்களாக வழ-ங்குகின்றன. நிக்கல் என்னும் ஒரு உலோகத்தினால் அணு செய்யப்படுகிறது. காகிதத்தினாலும் நாணயம் உண்டு. அதற்கு நோட்டு என்று பெயர். முற்காலத்தில் தோலினாலும் நாணயம் இருந்ததுண்டு. இப்போதும் சில விடங்களில் பலகரை முதலிய பொருள்களை நாணயமாக வழங்குகிறார்கள்.

5. நாணயங்களை துரைத்தனத்தாரே செய்கி-றார்கள். உலோகங்கள் விலையில் ஏறினாலும் குறைந்-தாலும் அவற்றால் செய்யப்படும் நாணயங்கள் எப்-போதும் ஒரே அளவாகவும் ஒரே மதிப்புள்ளதாகவும் இருக்கும். ஒரு ராஜாங்கத்து நாணயம் மற்றொரு ராஜாங்கத்தில் செல்லுவது அரிது. நாணயமாகச் செல்லாவிட்டாலும் உலோகமாக எங்கும் செல்லத் தடையில்லை.

6. நாணயங்களை ஏன் துரைத்தனத்தார் செய்-யவேண்டும். இல்லாவிட்டால், எல்லோரும் அதை ஒப்புக்கொண்டு ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். துரைத்தனத்தார் வெளியிடும் நாணயங்களை எவரே-னும் விலையாகப் பெற்றுக்கொள்ள மறுப்பார்களானால் அவர்களை நியாயஸ்தலத்தில் கொண்டுபோய் தண்-டிக்கவும் சட்டமுண்டு.

## 39. காடு, மலை

மரங்களடர்ந்து பரந்துள்ள நிலப்பாகத்திற்குக் காடு என்று பெயர். நிலப் பரப்பிற்கு மிகவும் உயர்ந்துள்ள கல்மேடே மலையாகும். சாதாரணமாய் மலையைச் சுற்றிக் காடிருப்பது வழக்கம். சில மலைகளை யடுத்து நாடிருப்பது முண்டு.

2. காடு மலைகளைக் காணும்போது இயற்கையின் சிறப்புக்கள் நமது மனத்தில் மகிழ்வை யுண்டாக்கும். மரங்களடர்ந்த காட்டிற் புகுந்தால், வெய்யிலென்பது தெரியாமல், நிழல் நிறைந்திருக்கும். மரங்களும், செடிகளும், கொடிகளும் ஒன்றையொன்று பற்றி வளர்ந்திருக்கும் காட்சி பார்ப்பவர் கண்ணைக் கவர்ந்து கொள்ளும். புதியமலர்கள் மலர்ந்து மணம் வீசுவதும், பழையமலர்கள் உதிர்ந்து பலவித நிறங்களோடு மெத்-தெனக் கிடப்பதும் மனத்தை ரமிக்கச் செய்யும்.

3. காட்டாறுகள் சலசலவென்று ஓடுவதும், வண்டுகள் ரீங்காரஞ் செய்வதும், பாடும் பறவைகள் இனிமையாய்ப் பாடுவதும், அழகிய மயில்கள் தம் கலாபத்தை விரித்து ஆடுவதும் கண்டால் யாருக்குத்தான் இன்பமுண்டாகாது! மலைகளில் சுனைநீர் பாய்வதும், சுரங்கங்களில் உலோகப் பொருள் ஒளிர்வதும், சிகரங்கள் உன்னதமாக ஓங்கியிருப்பதும் கண்டால் தெய்வத்தின் திறம் நமது சிந்தையிற் பதியாமற்போகுமா!

4. காட்டில் அநேகபொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன. பல மரங்களும் மருந்து வகைகளும் பழவர்க்கங்களும் கிடைக்கக் காடே காரணமாக இருக்கிறது. நாட்டை யடுத்துக் காடுகள் இருப்பதனால், மேகங்கள் தங்கி மழை பொழிய அனுகூலமுண்டா-

கின்றது. இந்த வகையான உபயோகத்தைக் கருதி- யே துரைத்தனத்தார் அதிக பொருள் செலவிட்டும், உத்தியோகஸ்தர்களை அமைத்தும் காடுகளை விருத்தி செய்து வருகிறார்கள்.

5. மலைகளினாலும் அதிக பயன் உண்டு. மலை- களில் நமக்கு உபயோகமான பொருள்களும் கனிஜ வஸ்துக்களும் கிடைக்கின்றன. மேகங்கள் தங்கி மழை பொழிந்து, ஆறுகளாக ஓடுகின்றன. வேனிற் காலத்- தில் மலைப் பிரதேசங்களில் வசித்தால் மிகவும் சவுக்- கியமாக இருக்கும். ஐரோப்பியர் பெரும்பாலும் வேனிற்காலத்தில் நீலகிரி, கோடைக்கானல் முதலிய மலைகளுக்குப் போய் அங்கு வசிக்கிறார்கள்.

6. காப்பிச் செடி முதலிய சில செடி வகைகள் மலைப் பிரதேசங்களில் மட்டும் விருத்தியாகின்றன. நீர்ப்பரப்பில் கடல் அதிகம் ஆழ்ந்திருப்பதுபோலவே நிலப் பரப்பில் மலை அதிகம் உயர்ந்திருப்பது பார்ப் போர்க்கு நன்கு விளங்கும்.

7. நமது இந்தியாவில் பெரிய காடுகளும் மலை- களும் உண்டு. உலகத்தில் இருக்கும் மலைகளுக்கெல்- லாம் பெரியதாகிய இமயமலை நமது இந்தியாவுக்கு வடவெல்லையாக அமைந்திருக்கின்றது. பூர்வகாலத்- தில் முனிவர்களும் தவசிகளும் காடுகளிலும் மலை- களிலும் வசித்திருந்தார்கள். அவர்கள் செய்துள்ள நூல்களில் இவைகளை வெகு விநோதமாய் வருணித் திருக்கிறார்கள்.

## 40. பொங்கல்

பொங்கல் இந்துக்களுக்கு மிகவும் முக்கியமான பண்டகை. இது வருஷந்தோறும் தைமாதம் முதல் தேதிவரும். மற்றப் பண்டகைகள் எல்லாம் திதிகளையும் நக்ஷத்திரங்களையும் அனுசரித்து வர, இது ஒன்றுமாத்திரம் தேதியைப்பற்றி வருகின்றது.

2. பொங்கல் பண்டகையை ஆதிகாலத்தில் இந்திரனைப்பற்றிக் கொண்டாடினார்கள் என்றும், பிறகு கிருஷ்ணனைப்பற்றிக் கொண்டாடினார்கள் என்றும் சரித்திரம் உண்டு. ஆனால், இது இப்போது சூரியனைப்பற்றி கொண்டாடப்பட்டு வருகிறது என்று சொல்லலாம். இக்காலத்தில் பொங்கலிடுவோர் அனைவரும் தாங்கள் செய்யும் பண்டங்களை சூரியனுக்கே ஆராதிக்கிறார்கள்.

3. பயிரிடும் குடிகள் மார்கழிமாதத்தில் அறுவடைசெய்து சந்தோஷமாய் இருப்பார்கள். வீடுகளில் தானியம் நிறைந்திருக்கும். அறுவடையானதும் குடியானவன் பிறருக்கு இட்டு, தானும் உண்ண வேண்டும் என்பது முறைமை. அதற்கென்றே இப் பண்டகை ஏற்பட்டதென்று எண்ண இடமுண்டு.

4. இந்துக்கள் ஆதிகாலத்தில் பஞ்சபூதங்களையும் சூரிய சந்திரர்களையும் வணங்கிவந்தார்கள். தெய்வத்தின் மகிமையை இவைகள் வெளிப்படையாய் காட்டத் தகுந்தவையாதலால் அவ்வாறு வணங்கிவந்தார்கள். சூரியன் உலகத்திற்கு முக்கிய ஆதாரம். அதிலும் பயிர்த்தொழிலுக்கு அது மிகவும் அவசியமானது. சூரியவுஷ்ணமில்லாவிட்டால் புல் பூண்டும் முளையா. ஆகவே, கிருஷிகர்கள் தாங்கள் செய்யும்

பயிர்த்தொழிலுக்கு அதிக அவசியமான சூரியனுக்குத் தாம் பயிர்த் தொழிலில் கொண்ட பொருள்களை ஆராதிக்கும் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

5. தை மாதம் முதல்தேதி பெரும்பொங்கல். அன்று பெரிய பானையில் பொங்கலிட்டு, சூரியனுக்கு ஆராதித்து உண்பார்கள். இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல். கிருஷிகருக்கு ஆடு மாடு முதலிய கால்நடைகளை முக்கிய ஆதாரமாகையால் மாட்டுப் பொங்கலன்று அவர்கள் தம் ஆடு மாடுகளைக் குளிப்பாட்டிச் சிறப்புச்செய்து விளையாட விட்டு வேடிக்கை பார்ப்பார்கள். அன்று அனைவரும் கோடிவஸ்திரம் உடுத்து, கோயிலுக்குப் போய், கடவுளை வணங்கிய பின்பு, தம் பந்துக்கள், சிநேகிதர்கள் முதலானவர்களைச் சந்தித்து க்ஷேமங்களை விசாரிப்பது வழக்கம். வேலைக்காரர்கள் தங்களுக்கியன்ற பொருள்களைக் கொண்டுவந்து கொடுத்து, தம் எஜமானரைக் கண்டு வெகுமதி பெற்றுக்கொண்டு போவார்கள்.

6. தைமாதம் முதல் தேதி முதற்கொண்டு உத்தராயண புண்ணிய காலமானதால், அன்று சூரியனுக்கு ஆராதனை செய்யும்படி பொங்கல் இடுவது வழக்கம் என்றும் சொல்லுவதுண்டு.

## 41. கால ஒழுங்கு

எந்தக் காரியத்தையும் காலந் தவறாமல் செய்வதே கால ஒழுங்காகும். இதைக் காலக்கிரமம் என்றும் சொல்லலாம். தலைக்குமேல் அண்ணாந்து பார்த்தால், சூரியன் சந்திரன், நக்ஷத்திரங்களைக் காண்கிறோம். அவை தம் இஷ்டப்படி எல்லாப் பக்கங்களிலும் எல்லாக் காலங்களிலும் திரிவதில்லை. அவை ஓர் ஒழுங்காய் ஒரே வழியிற் செல்கின்றன.

2. சூரியன் எப்போதும் கிழக்கில் உதித்து, மேற்கில் அஸ்தமிக்கின்றது. சந்திரனும் அவ்வாறே செய்கின்றது. ஆனால், சூரியனைப்போலவே சந்திரன் விஷயத்தில் இந்த ஒழுங்கு அவ்வளவு சரியாய் ஏற்படவில்லை. சந்திரன் ஒரே விதமாகச் சரியான காலத்தில் வளர்தலும், தேய்தலும் அடைகின்றது. பதினான்கு நாள் வரையில் வளர்ந்துகொண்டே வருகின்றது; மறுபடியும் பதினான்கு நாள் வரையில் தேய்ந்துகொண்டே போகின்றது. இரவில் நக்ஷத்திரங்களும் ஆகாயத்தில் தத்தமக்குரிய இடங்களிலேயே காலந் தவறாமல் காணப்படுகின்றன. ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கும் ஆகாயத்தில் நிலையான இடமுண்டு.

3. சமுத்திரத்தில் ஓயாமல் வீசிக்கொண்டிருக்கும் அலைகளுக்கும், வருவதிலும் போவதிலும் நல்ல ஒழுங்கு ஏற்பட்டிருக்கின்றது. இதே விதமாக ஆறுகளும் கீழ்நோக்கியே செல்கின்றன; ஒருபோதும் மேல் நோக்கிச் செல்வதில்லை. ‘ஒன்றும் ஒன்றும் இரண்டே’ என்னும் உறுதியைப்போல், தண்ணீர் மேட்டிலிருந்து பள்ளத்திற்கு வருமேயன்றி, பள்ளத்திலிருந்து மேட்டிற்குச் செல்லாதென்பதை உறுதியாகக் கொள்ளக்கூடும்.

4. மற்றும், பருவகாலங்கள் வருடந்தோறும் ஒரே முறையாக மாறி மாறி வருகின்றன. அவை இப்படியே கால வேறுபாட்டை யடையாமல் எந்தக் காலத்தும் வரும் என்று உறுதியாகச் சொல்லலாம். இதனுல், காலை—மாலை, பகல்—இரவு, கார், குளிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய பருவகாலங்களையும், உழவுக்காலம், விதைக்குங்காலம், அறுவடைக்காலம் முதலியவற்றையும் உறுதியாகக் கொள்ளலாம்.

5. இவ்வாறு சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலிய இயற்கைப் பொருள்களுக்கு ஒழுங்கான ஏற்பாடு இல்லாதொழிந்தால் நம்முடைய தன்மைகளும் நிலை குலையும் அல்லவா? உதாரணமாக — சூரியன், சந்திரன், நக்ஷத்திரம் முதலியவை இன்ன காலத்தில் இன்ன விடத்தில் தோன்றுவதென்றும், இன்ன காலத்தில் இன்ன விடத்தில் மறைவதென்றும் நிச்சயமான ஒழுங்கு ஏற்படாவிட்டால் நாம் ஏதாவது காரியம் செய்யமுடியுமா? கால அளவு தெரியுமா? காலந் தவருமல் புகைவண்டிகள் ஓடவும், கப்பல்கள் செல்லவும், கப்பலோட்டிகள் திசைகளை அறியவும் கூடுமா? கூடாதல்லவா? அதுபோல நாமும் நம்முடைய காரியங்களை ஒழுங்காகக் குறித்த காலத்தில் செய்யாவிட்டால் அந்தக் காரியங்கள் எவ்வாறு முற்றுப் பெறும்!

## 42. தாவரங்களால் உண்டாகும் நன்மைகள்

நாம் வெளியிற் சென்று திரிந்து வருந்தும்போது, நிழலில் தங்கி இளைப்பாற விரும்புகிறோம். அதிலும் இலை தழைந்த மர நிழலைக் கண்டால் பேராநந்தம் அடைகின்றோம். இதனாலே, "நிழலருமை வெயிலில் தெரியும்" என்னும் வாக்கியமும் வழங்குகிறது. அநேக தருக்கள், மனிதர், பக்ஷி முதலிய பிராணிகளுக்கு மாதுரியமான கனிகளைத் தருகின்றன. பறவைகள் மரக்கிளைகளில் கூடுகட்டி இன்பமாய் வசிக்கின்றன. மிருகங்களும் இலை தளிர்களை மேய்ந்து, மரத்தடியில் தங்கி இளைப்பாறுகின்றன. இவையேயன்றி, தாவரங்களால் பிராணிகளுக்கு உண்டாகும் நன்மை வேறு ஏதேனும் உண்டா? உண்டு; அது பிராணாதாரமான நன்மை யாகும். அதை விவரிப்போம்.

2. பிராணிகளுக்கெல்லாம் பிராணாதாரமானது ஆகாயம். இந்த சுத்த ஆகாயம் ஜந்துக்கள் மூச்சுவிடுவதனாலும், நெருப்பு எரிவதனாலும், பதார்த்தங்கள் அழுகிப் பதங் கெடுவதனாலும் விஷமுள்ளதாக மாறுகின்றது. உலகமெங்கும் வியாபித்திருக்கும் சுத்த ஆகாயம், இவ்வாறு விஷமுள்ளதாக மாறிவிட்டால், அதை உட்கொள்ளும் பிராணிகள் எல்லாம், நாளடைவில் இறந்துவிட நேரிடும். அவ்வாறு ஆகாயம் கெடாதபடி செய்வதில், தாவரங்கள் நமக்கு நன்மை புரிகின்றன. அது எப்படியெனில் —

3. பிராணிகள் உயிர் வாழ்வதற்குச் சுத்த ஆகாயம் அவசியமாவதுபோல, மரம், புல், பூண்டு முதலிய தாவரங்கள் விருத்தியாவதற்கு அசுத்த ஆகாயம் அவசியம். பயிர் பச்சைகள் செழித்து வளர எருப்

போடுவதே இதற்குத் திருஷ்டாந்த மாகும். நாம் இடும் எருவிலுண்டாகும் அசுத்தவாயுவைத் தாவரங்கள் உட்கொண்டு ஓங்கி வளர்கின்றன. அதுபோலவே, ஆகாயத்தோடு கலந்துள்ள விஷ வாயுவைத் தாவரங்கள் சூரியனுதவியினால் வேறு பிரித்து, அதையே தமக்கு உணவாக்கிக்கொண்டு, சுத்த ஆகாயத்தை மாத்திரம் வெளியிடுகின்றன. இனி, இதைத் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டுவோம்.

4. வாயகன்ற ஒரு பாத்திரத்தில் முக்காற் பங்கு ஊற்றுத் தண்ணீர் விடு. அதற்குள், ஜலத்தில் பயிராகும் நீர்ப்பூண்டு ஒன்றை வை. பிறகு அப் பாத்திரத்தில் ஒரு மச்சத்தை விட்டு, உள்ளே சிறிதும் காற்று நுழையாதபடி இறுக மூடிவிட்டுப் பார். எத்தனை நாளாயினும் அந்த மச்சம் உயிரோடு ஜீவித்திருக்கும். எப்படியெனில், மச்சம் சுவாசம் விடுவதனால் அப் பாத்திரத்திற்குள் இருக்கும் ஆகாயம் முழுவதும் விஷமுள்ளதாகும். ஆனால், அதிலுள்ள செடி, விஷவாயுவைக் கிரகித்துக்கொண்டு, சுத்த ஆகாயத்தை வெளியிடும். இவ்வாறே மாறி மாறி ஒன்றுக்கொன்று உதவி புரிந்துகொள்ளும். மச்சத்திற்கு ஆகாரம் மாத்திரம் அப்போதைக்கப்போது போடவேண்டும். இரவில் சூரிய உஷ்ண மில்லாமையினால், தாவரங்களும், மனிதரைப் போலவே, பிராண வாயுவை உட்கொண்டு, அசுத்த வாயுவை வெளியிடும்.

5. மனிதர் முதலிய பிராணிகளுக்குத் தாவர வஸ்துக்கள் இவ்வித அரிய நன்மையைச் செய்வது எவ்வளவு ஆச்சரியம்! இப்படிப்பட்ட பேருதவியை ஜீவராசிகளுக்காக ஏற்படுத்தியுள்ள கடவுளை நாம் என்றும் மறவாமல் வணங்க வேண்டுவது அவசியமல்லவா?

## 43. தேகாப்பியாசம்

மனிதர்களில் சிலர் உத்தியோகம் செய்கிறார்கள்; சிலர் கைத்தொழில் செய்கிறார்கள். சிலர் முன்னோர் தேடிவைத்த பொருளைக்கொண்டு உண்டு உடுத்து சுக ஜீவனம் செய்கிறார்கள். இவர்களில் உத்தியோகம் செய்கிறவர்களுக்கு மனோப்பியாசமும் அதிகம். கைத்தொழில் செய்கிறவர்களுக்குத் தேகாப்பியாசம் அதிகம். சுக ஜீவனம் செய்கிறவர்கள் அவரவர்கள் செய்யும் முயற்சிக்குத் தக்கபடி மனோபலமோ தேக பலமோ உண்டாகும்.

2. ஒருவனுக்கு மனோபலம் மாத்திரம் இருந்து, தேகபலம் இல்லாமற் போனால் ஒன்றும் பயனில்லை. மகா பண்டிதர் நோயினால் மெலிந்து, நடக்கவும் பேசவும் சக்தியற்றிருந்தால், அவரால் யாருக்கு என்ன பலன் உண்டாகும்! அதனால் இரண்டுவிதமான பலமும் ஒருவனுக்கு அவசியம் என்பது ஏற்படும்.

3. மாணாக்கரில் பலர் கல்வியிலேயே சதா கண்ணும் கருத்துமாக இருந்து தேகாப்பியாசம் செய்வதை வெறுக்கின்றனர். தேகாப்பியாசம் செய்யப் போவதனால் காலம் வீணே கழிகின்றது என்பது அந்த மாணாக்கர்களின் எண்ணம். இப்படிப்பட்ட மாணாக்கர்கள் பரீக்ஷாகாலத்தி லாயினும், சற்று முன்னாயினும் நோயில் அடிபட்டு அவ் வருஷத்தில் பரீக்ஷைக்குச் செல்ல சக்தியற்றவர்க ளாகிறார்கள். அவ் வருஷத்திய உழைப்பெல்லாம் வீணாகி, உடல் மெலிந்து வருந்தி, மறுவருஷம் வாசிக்கவும் சக்தியற்றவர்களாகிறார்கள்.

4. அதனால், மனோபலத்தை விரும்புவோர் தேக பலத்தையும் விரும்புவது அவசியமாகும்.

மாணுக்கர்களும் புத்தியைக்கொண்டு உழைக்கும் உத்தியோகஸ்தர்களும் தினந்தோறும் ஒருமணி நேரமாவது தேகாப்பியாசம் செய்யவேண்டும். சில பாடகர்கள் எடுத்துப் பாடமுடியாமல் இடர்ப்படுவ-தையும் நாம் காண்கின்றேமல்லவா ?

5. கசரத்துப் பழகுவதுமட்டும் தேகாப்பியாசம் என்று சிலர் எண்ணுகிறார்கள். கசரத்துப் பழகுவது துன்மார்க்கத்தில் கொண்டுபோய் விடும் என்று நினைக்கிறார்கள் சிலர். கல்வி யறிவில்லாதவன் கச-ரத்துப் பழகினல் துஷ்டனுக்கக் கூடும். அன்றி தேகாப்பியாசமென்றால் கசரத்துச் செய்வது மட்-டும் என்று எண்ணுவது பிழையாகும்.

6. தேகாப்பியாசம் பல வகைப்படும். நடத்தல், ஓடுதல், வண்டியிலாயினும் வாகனத்திலாயினும் சவாரிசெய்தல், பந்தாடல் முதலியவை தேகாப்பியா-சத்திற்கு உரியனவாம். ஆனல், வயதுக்குத் தக்க-படி அப்பியாசம் இருக்கவேண்டும். சிறுவர்கள், ஆடு-தல், ஓடுதல், குதித்தல் முதலிய அப்பியாசங்களைச் செய்யவேண்டும். வாலிபர்கள், பந்தாட்டம், குதி-ரைச் சவாரி செய்தல், கசரத்துச் செய்தல் முதலிய-வற்றில் பயிலவேண்டும். விருத்தாப்பியர்கள், நடத்-தல், வண்டியில் சவாரி செய்தல் முதலியவைகளிற் பழகலாம். இதனல், குழந்தை முதல் விருத்தர் வரையில் அனைவர்க்கும் தேகாப்பியாசம் இருக்க-வேண்டும் என்பது அவசியமாகும். ஆகையால், ஒவ்-வொருவரும் கால நஷ்டத்தைக் கவனியாது தேகாப்-பியாசத்தைக் கையாடவேண்டும்.

## 44. விடா முயற்சி

காரியத்தில் ஊன்றிய கருத்துடன் முயல்வதே விடா முயற்சியாம். சில காரியங்கள் முயலும்போதே முடியும். சில அரிதில் முடியும்; சில முடியாமற் போதலும் உண்டு. நாம் எந்தக் காரியத்தையும் அடுத்து முயலவேண்டும். ஒருவன் எவ்வளவு மந்தனுயினும், விடாமல் முயன்முல் தன் காரியத்தில் வெற்றி யடைவான். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் கூறுவோம்.

2. ஒரு காட்டில், ஓர் ஆமை முயல் ஒன்றைச் சந்தித்தது. ஆமை அசைந்து அசைந்து நகர்வதை முயல் கண்டு நகைத்தது. பிறகு, அந்த முயல் ஆமையைப் பார்த்து, "ஐயா, ஆமையாரே! நாம் இருவரும் ஒரு பந்தயம் வைத்து விளையாடுவோம் வருகிறீரா ?" என்று பரிகாசமாய்க் கேட்டது. ஆமை முயலின் கருவத்தைத் தெரிந்துகொண்டு, "அப்படியே செய்யலாம்" என்று பதில் சொல்லிற்று.

3. பிறகு, முயல் ஆமையைப் பார்த்து, "ஐயா! நாம் இருவரும் ஒரே காலத்தில் இங்கே இருந்து புறப்பட்டு, அதோ தெரியும் மலையடிவாரத்திற்கு ஓட வேண்டும். அந்த இடத்தை, முன்பு அடைபவரே வெற்றி கொண்டவர் ஆவர்" என்று சொல்லி, இடத்தையும் குறித்தது.

4. அப்போது ஆமை, முயலைப் பார்த்து, "ஐயா! நீர் சொல்லுவது சரிதான். முடிவில் நம்முடைய வெற்றியையும் தோல்வியையும் கணிப்பவர் யார்?" என்று கேட்டது. முயல் ஒன்றும் பதில்சொல்ல முடியாமல் திகைத்தது.

5. இவற்றை எல்லாம், மறைந்து கேட்டுக்கொண்டு இருந்த ஒரு நரி அங்கே வந்தது. பிறகு,

அந்த இரண்டும் சம்மதித்து, நரியை மத்தியஸ்தமாக ஏற்படுத்தின. நரி, குறித்த இடத்திற்கு ஓடி, அவ்விடத்தில் ஒரு கொடியைக் குறியாக நாட்டிவைத்தது.

6. பின்பு, இரண்டும் குறித்த இடத்திலிருந்து ஒரே காலத்தில் புறப்பட்டன. முயல், ஓர் ஓட்டம் பிடித்து, பாதி அளவுக்குப் போய்விட்டது. ஆமையோ அடிமேல் அடி வைத்து, நகர்ந்து கொண்டே இருந்தது. முயல் ஆமையைத் திரும்பிப் பார்த்தது. ஆமை புறப்பட்ட இடத்திலேயே நகர்ந்துகொண்டு இருப்பதாய் அதற்குப் புலப்பட்டது. அதனால், முயல் கர்வங்கொண்டு, "சரி, சரி, ஆமை இங்கு வரவே அரை நாள் செல்லும்; நாம் மற்றத் தூரத்தை அரை க்ஷணத்தில் ஓடிச் சேரலாம். ஆகையால், இங்கே சற்று இளைப்பாறுவோம்" என்று படுத்து உறங்கிவிட்டது.

7. ஆமையோ சிறிதும் நிற்காமல், விடாமுயற்சியோடு நகர்ந்துகொண்டே, முயல் இருந்த இடத்திற்கு வந்துவிட்டது. அங்கு முயல் நன்றாய் நித்திரை செய்வதைக் கண்டு, ஆமை இதுவே நல்ல சமயம் என்று எண்ணி, விடாமல் நகர்ந்து சென்று, குறித்த இடத்தைச் சேர்ந்துவிட்டது. முயல் நித்திரை தெளிந்து பார்த்தது. ஆமை குறித்த இடத்தை அடைந்துவிட்டது என்று உணர்ந்து, அதிக வேகமாய் ஓடிற்று. ஓடியும் என்ன பலன்! முயல் முடிவில் தோல்வியே அடைந்தது.

8. அதைக் கண்ட நரி முயலைப் பார்த்து, "நண்ப! தானே வல்லவன் என்று எண்ணுகிறவன் ஒருபோதும் ஈடேறமாட்டான். விடா முயற்சியே வெற்றியைக் கொடுக்கும்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டது.

## 45. உண்மை

உள்ளதைச் சொல்வது உண்மை. கண்ணாற் கண்டதை கண்டவாறே சொல்வது உண்மை யுரைப்பதன் கடமையாம். உண்மைக்கு ஒருபோதும் பழுது வராதென்று எண்ணி, அதை எக் காலத்தும் எந்த விடத்தும் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும். 'சத்தியம் தலை காக்கும்' என்பதை நம்பி, உயிர் போனாலும் உண்மை யுரைப்பதை மறக்கக்கூடாது.

2. உண்மைக்கு விரோதமானது பொய். இல்லாததை உண்டென்றுவது, உள்ளதை இல்லையென்றுவது உரைப்பது பொய்யாகும். மனிதர் குற்றம் செய்த காலத்தில் மெய்யைத் தள்ளிப் பொய்யைத் தழுவுகின்றனர். பொய் சில சமயங்களில் வெற்றியை யுண்டாக்கினாலும், நாளடைவில் அது தோல்வியையே கொடுக்கும். ஒரு குற்றத்தை மறைக்க ஒரு பொய் சொன்னால், அது இரண்டு குற்றமாகிறது. அப்படியே இரண்டு நாலாகவும், நான்கு எட்டாகவும் பெருகும். செய்த குற்றத்தை ஏற்றுக்கொண்டு ஒரு மெய் சொல்லிவிட்டால், குற்றம் குறைவதேயன்றி 'பொய் சொல்லான்' என்னும் புகழும் உண்டாகும்.

3. 'இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்' என்னும் நீதிவாக்கியம் யாவரும் உணர்ந்ததே. அரிச்சந்திரன் என்னும் அரசன், பொய் சொல்லக் கூடாது என்னும் உறுதியால், பெண்டு பிள்ளைகளை விற்றுவிட்டுத் தானும் புலையனுக்கு அடிமையானான். முடிவில் தன் மனைவியின் தலையையும் வெட்டத் துணிந்தான். அப்போது, சத்தியம் அவள் தலையைக் காத்தது. அதனால் அரிச்சந்திரன் என்றும் இறவாத புகழை அடைந்திருக்கின்றான்.

4. ஜார்ஜ் வாஷிங்டன் என்னும் துரைமகன் சரித்திரம் பலரும் கேட்டிருக்கலாமே. வாஷிங்டன் ஒருநாள் ஒரு மரத்தை விளையாட்டாய் வெட்டிவிட்டார். அவரது தந்தை அந்த மரத்தை வெகு அருமையாய் வளர்த்து வந்தார். அது வெட்டுண்டு கிடக்கவே அவருக்கு அளவு கடந்த கோபம் உண்டாயிற்று. உடனே, அங்கு நின்றிருந்த தம் குமாரனைக் கேட்டபோது, வாஷிங்டன் சற்றும் பின் வாங்காமல் உண்மையை யுரைத்தார். அது கேட்ட தந்தை மிகவும் மனமுவந்து, தன் மைந்தனைப் புகழ்ந்தார்.

5. சாதாரணமாய்ச் சிறுவர்கள் பெற்றோர் முதலிய பெரியோர்களிடமிருந்தே பொய்பேசுதல் முதலிய துர்க்குணங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். ஒருவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தால், அவனுக்குச் சிறிய பிள்ளையின்மேல் பக்ஷம் அதிகம் இருப்பது வழக்கம். அதனால், சிறியபிள்ளைக்கு ஒரு பொருளைக் கொடுத்து, அதைப் பெரியவனுக்குச் சொல்ல வேண்டாம் என்று கற்பிக்கிறான். அதனால், பொய் சொல்லும் துர்க்குணம் குழந்தைப் பருவத்திலேயே படிகின்றது.

6. பொய் சொன்னால் தண்டனை ஏற்படும் என்றும், மெய்சொன்னால் மன்னிப்புக் கிடைக்கும் என்றும் சிறுவர்கள் மனத்தில் செவ்வையாய்ப் பதிய வேண்டும். குற்றம் செய்தாலும், மெய்சொல்வானானால் அவனை மன்னித்து மெச்சுவதனால், பிள்ளைகளுக்கு மெய் சொல்லும் குணம் விருத்தியாகும். பொய் சொல்பவனைக் கண்டிதமாய்த் தண்டித்தே தீரவேண்டும்.

## 46. கிறிஸ்துமஸ் பண்டிகை

கிறிஸ்துமஸ் என்பது கிறிஸ்து நாதர் பிறந்த நாளைக் கொண்டாடும் ஒரு பண்டிகை. கிறிஸ்து இன்ன தினத்திற் பிறந்தார் என்பது திட்டமாகத் தெரியாவிட்டாலும், அவர் டிஸெம்பர்மீ 24௳ இரவு 12 மணிக்குப் பிறந்ததாக நிச்சயித்திருக்கிறார்கள். ஆதலால், வருஷந்தோறும் டிஸெம்பர்மீ 25௳யைக் கிறிஸ்துமஸ் பண்டிகை நாளாகக் கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள்.

2. இந்துக்களுக்குப் பொங்கல் பண்டிகை சிறந்திருப்பதுபோலக் கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்துமஸ் பண்டிகை சிறந்திருக்கிறது. இந்தப் பண்டிகை வருஷாந்தத்தில் வருவதனால், கிறிஸ்தவர்கள் அவ்வருஷம் இன்பகரமாய் முடிந்ததையும், அடுத்த வருஷமும் அவ்வாறே இருக்கவேண்டும் என்பதையும் எண்ணிச் சந்தோஷமாய் இருப்பார்கள். பண்டிகை தினத்திற்கு முன்பே கிறிஸ்தவர்கள் தம் வீட்டை வெள்ளையடித்து, சுத்தஞ் செய்து, விநோதப் பொருள்களால் அலங்கரிப்பார்கள். தமக்கும் கோடி வஸ்திரம் சித்தம் செய்துகொள்வார்கள்.

3. டிஸெம்பர்மீ 24௳ இரவு கிறிஸ்தவர்கள் பலரும் தேவாலயத்திற்குச் சென்று, கிறிஸ்துநாதர் பிறந்ததைக் கொண்டாடி, வீட்டுக்குத் திரும்புவார்கள். மறுநாள் ஆலயத்தில் நடத்தும் பூசைக்காகப் பாலர் முதல் விருத்தர் வரையிலுள்ள அனைவரும் சிறப்பாக உடுத்து, ஜபபுஸ்தகங்களைக் கையிற்கொண்டு போவார்கள். பூசை முடிந்ததும் அனைவரும் தெய்வ பக்தியோடு வீட்டுக்கு வருவார்கள்.

4. கிறிஸ்துமஸ் பண்டிகையன்றும் அனைவரும் சந்தோஷங் கொண்டாடுவார்கள். பந்துக்களும், சிநேகிதரும் வாழ்த்துக் கூறி ஒருவர்க்கொருவர் கிறிஸ்துமஸ் கார்ட்டு அனுப்பிக்கொள்வார்கள். பெரியோர் சிறியோருக்கு விளையாட்டுப் பொருள்கள் வாங்கிக் கொடுத்து சந்தோஷமூட்டுவார்கள். சிலர் ஒரு பெட்டியில் தின் பண்டங்களையும், விளையாட்டுப் பொருள்களையும் வைத்துச் சிறுவர்களுக்குக் கொடுப்பதுண்டு. இதற்கு 'கிறிஸ்துமஸ் பெட்டி' என்று பெயர். கிறிஸ்துமஸ் மரம் என்று ஒன்று செய்வதும் உண்டு. அன்று ஒரு செடிபோல் சிங்காரித்து, அதன் கிளைகளில் தின்பண்டங்களையும், விளையாட்டுப் பொருள்களையும் கட்டிவைத்து, சிறுவர்களுக்கு சந்தோஷமுண்டாகக் கொடுப்பார்கள்.

5. மதாபிமானமுள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் அன்று வெகு பக்தியாய் இருப்பார்கள். கிறிஸ்து நாதர் கிறிஸ்து மதத்திற்குத் தலைவர். அவரைத் தேவகுமாரர் என்று நம்பி வழிபடுகிறார்கள். அதனால் அவர் பிறந்த தினம் உலகத்திற்கு நன்மை பிறந்தநாள் என்று கொண்டாடுகிறார்கள். கிறிஸ்துமஸ் பண்டிகையையடுத்து ஜனுவரிப் பண்டிகையும், அதை யடுத்துப் பொங்கல் பண்டிகையும் வருவதால் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் தொடர்ந்து சந்தோஷங் கொண்டாடுவதும், ஒரேவிதமாய் இருதிறத்தார் வீடு வீதிகளும் சுத்தமாய் இருப்பதும் சிறப்பல்லவா?

## 47. வர்த்தமான பத்திரிகை

அந்தந்த விடங்களில் நடக்கும் விஷயங்களை வெளிக்குக் கொண்டுவரும் பத்திரிகைக்கு 'வர்த்தமான பத்திரிகை' என்று பெயர். வர்த்தமான பத்திரிகைகளில் தினப் பத்திரிகை, வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை எனப் பலவகை உண்டு.

2. பத்திரிகைகளில் ஆங்காங்கு நடக்கும் விஷயங்களும், ஒரு விஷயத்தைப்பற்றிப் பலர் கொண்டுள்ள அபிப்பிராயங்களும் அவ்வப்போது வெளிவருகின்றன. உள்நாட்டு வர்த்தமானங்களேயன்றி வெளிநாட்டு வர்த்தமானங்களும் வெளியாகும். இவைகளேயன்றி துரைத்தனத்தார் ஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய விஷயங்களுக்கும், ஜனங்கள் துரைத்தனத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டிய விஷயங்களுக்கும் பத்திரிகைகள் ஆதாரவாயிருக்கின்றன.

3. முற்காலங்களில் வர்த்தமான பத்திரிகைகள் கிடையா. அச்சு யந்திரம் இல்லாத காலத்தே பத்திரிகைகள் வெளி வருவது எப்படி! அக்காலத்தில், அரசர்கள் தம் குடிகளுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களைப் பறையறைவித்துத் தெரிவித்து வந்தார்கள். இக்காலத்தும் கிராமங்களில் இந்த ஏற்பாடு நடை பெறுகின்றது. குடிகள் ஏதாவது விஷயத்தை அரசருக்குத் தெரிவிக்கவேண்டுமானால், ஆராய்ச்சி மணியை அடிப்பார்கள். அது கேட்டு அரசர் வந்து குடிகளை விசாரித்து விஷயங்களை உணர்ந்துகொள்ளுவது வழக்கம்.

4. இக்காலத்தே வர்த்தமான பத்திரிகைகள் நாகரிகம் பரவிய நாடெங்கும் உலவிவருகின்றன. நல்ல

பத்திரிகைகள் பரவாத நாடுகளில் நாகரிகம் பரவுதல் அருமை. வர்த்தமான பத்திரிகைகள் வர்த்தக விருத்திக்கும் அவசியமானவை. விஷயங்கள் உடனுக்குடன் தெரிவதனால், மனிதர்கள் ஏமாறுமல் தம் காரியங்களைச் சரிவர செய்துகொள்வதற்குச் சாதன முண்டாகின்றது.

5. சுதேசபாஷையில் பத்திரிகைகள் இருப்பது அவசியம். ராஜாங்கபாஷை அனைவரும் அறிந்திருப்பது அசாத்தியமல்லவா? பத்திரிகைகள் தெளிவான பாஷை நடையில் பிழையின்றி வெளி வரவேண்டும். அப்படிப்பட்ட பத்திரிகைகளை அனைவரும் படிப்பது நலம். விஷயங்கள் தெரிவதுமன்றி பாஷை நடையும் அமையும்.

6. விஷயங்கள் வெளிவருவதேயன்றி, புதிதாக செய்யப்படும் பொருள்களும் பத்திரிகைகளில் வெளி வருவதால் அவைகளைக் கொள்வோருக்கும் விற்போருக்கும் அனுகூலமுண்டாகின்றது. உத்தியோக விஷயமான விளம்பரங்கள் அடிக்கடி வெளிவருவதனுல், அலுவல் இல்லாமலிருப்பவர்கள் அவ்விளம்பரங்களைக் கண்டு உத்தியோகம் தேடிக்கொள்வதற்கு முகாந்தரமுண்டு.

7. லண்டன் நகரத்தில் மணிதோறும் வெளி வரும் பத்திரிகைகளும் உண்டாம். ஜபான் நகரத்தில் வண்டி யிழுப்பவர்களும் பத்திரிகை வாசிப்பது வழக்கமாம். நல்ல மாதிரியில் நடைபெறும் பத்திரிகைகளை வாசிப்பதனுல் உண்டாகும் பயனுக்கு அளவேயில்லை.

## 48. கைத்தொழில்

கைத்தொழில் என்பது கையினால் செய்யும் தொழில் என்று அர்த்தமாகும். எந்தத் தொழிலையும் நாம் கையினாலேயே செய்தாலும், சில வகையான தொழில்களுக்கு மட்டும் கைத்தொழில் என்று சொல்லுகிறோம். எழுதுவது, சித்திரம் வரைவது, சாப்பிடுவது முதலிய காரியங்களைக் கையினால் செய்தாலும் அவற்றிற் கெல்லாம் கைத்தொழில் என்னும் பெயர் வழங்குவதில்லை. சாதாரணமாய் யந்திரங்களின் உதவி கொண்டு செய்கிற வேலைக்கே கைத்தொழில் என்னும் பெயர் பொருந்தும்.

2. நாகரிகம் பரவிய நாடுகளில்தான் கைத் தொழில் நன்கு நடைபெறும். கைத்தொழிலுக்குப் பொருளும் உழைப்பும் ஆகிய இரண்டும் அவசியமே. பொருள் மாத்திரம் மிகுந்துள்ள நாடுகளில் கைத் தொழில் விருத்தியாகாது. ஏனெனில், உழைப்பில்லாமலே தனவான்களாக இருந்தால், அவர்களுக்கு உழைக்க மனம் வராது. மிகவும் தரித்திரமடைந்த தேசங்களிலும் கைத்தொழில் தலையெடாது. முதலில்லாவிட்டால் எந்தக் காரியமும் நடைபெறாதன்றோ.

3. கைத்தொழில்கள் முதலில் ஏற்படும்போது, யந்திரங்கள் அமைக்கத் திரவியம் வேண்டும். சாமான்கள் இன்றி வேலை நடக்கமாட்டாதாகையால், பற்பல தேசங்களிலிருந்து சாமான்களை வரவழைப்பதற்கும் முன்பின் சரிப்படுத்துவதற்கும் பணம் வேண்டும். இப்படிச் செய்வதற்காக இதர தேசங்களோடு வர்த்தகம் பண்ணிக்கொண்டு சினேகம் பாராட்டி வர வேண்டும். வர்த்தகம் விசேஷமாய் நடவாத தேசத்-

தில் கைத்தொழில்களும் நடவா. ஒரு தேசத்தில் கைத்தொழில்கள் ஊன்றித் திடப்பட்டு விருத்தியாகிச் சிறப்படைய நெடுநாள் பிடிக்கும்.

4. யந்திரங்கள் அமைப்பதற்கு சாஸ்திர ஞானம் அருமையான சாதகம். மனிதன் நெடுநாளில் செய்து முடிக்கும் வேலையை யந்திரம் அதிசீக்கிரத்தில் செய்து முடிக்கும். மனிதனுடைய ஆற்றலுக்கு எட்டாத காரியங்களும் யந்திரத்தால் நிறைவேறும். மணலும் சாம்பலும் கண்ணாடியாகிற தென்றும், கந்தை காகிதமாகிறதென்றும் சொன்னால், யாருக்குத்தான் முதலில் அதிசயமாய் இராது. காகிதத்தை வைத்தால், கண்மூடித் திறப்பதற்குள் அதை இழுத்துக்கொண்டு போய், மை தடவி அச்சிட்டு, மறுபடியும் ஓரிடத்தில் கொண்டு சேர்த்துவிட்டு, உடனே மற்றொரு காகிதத்தை அவ்விதமாகவே செய்ய இழுத்துக்கொண்டு போகிறதே, அப்படிப்பட்ட அச்சு யந்திரத்தைக் கண்டு யார்தான் வியப்படையாமல் இருப்பர். சணலை சரிகை யாக்கினால் ஒன்றுக்கு ஐயாயிரமடங்கு விலை உயர்ந்துபோகிறது. இரும்பை ஊசிகளாகவும் சங்கிலிகளாகவும் செய்வதனால் விலை எத்தனையோ பங்கு அதிகரிக்கிறது. இவை யெல்லாம் கைத்தொழில்களின் சிறப்பல்லவா?

5. ஆதலால், ஒவ்வொரு நாட்டிலும் கைத்தொழில் பரவும்படி ஜனங்கள் முயலவேண்டும். அதற்குப் பணக்காரரும் படிப்பாளிகளும் முன்னுக்கு வரவேண்டும். இவர்கள் முன்னுக்கு வந்தால் உழைப்பாளிகள் உடனே சேருவார்கள். இம்மூவரும் ஒன்று கூடினால் எந்தத் தொழிலும் எளிதில் நிறைவேறும்.

## 49. முஹரம் பண்டிகை

முஹரம் என்பது மகம்மதியருக்கான ஒரு சிறந்த பண்டிகை. இது வருஷந்தோறும் வருகின்றது. மகம்மதியர் பிறை தோன்றும் தினத்தையே அம்மாதத்தின் முதல்தேதியாகக் கொள்வதனால், முஹரம் பண்டிகை இன்ன மாதத்தில்தான் வரும் என்று நிச்சயிக்க முடியாது.

2. முஹரம் பண்டிகை இஸ்லாம் மதத்தின் மூல புருஷராகிய மகம்மது என்பவரது குடும்ப சம்பந்தமானது. மகம்மது என்பவருக்கு ஒரே குமாரத்தியுண்டு. அந்த அம்மாளை ஆலி என்பவர் விவாகம் செய்துகொண்டார். அவர்களுக்கு ஹஸேன், ஹுஸேன் என்று இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். மகம்மதுக்குபின் ஆலி என்பவர் அரசரானார். அவர் கி. பி. 660 ஆம் வருஷம் டமஸ்கஸ் என்னுமிடத்தில கொலையுண்டார். ஹஸேன் என்னும் புத்திரர் விஷமூட்டிக் கொல்லப்பட்டார். பிறகு இருபது வருஷம் சண்டை நடந்து, முடிவில் ஹுஸேன் என்பவரும் சிறையிலிருந்து பத்துநாள் பசியால் பரிதபித்து இறந்தார். இவரது மரணத்தைக் குறிப்பதற்கே முஹரம் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

3. முஹரம் பண்டிகை வளர் பிறையில் மூன்றும் நாள் தொடங்குகிறது. அன்று அதற்கென்று குறிப்பிட்ட இடங்களில் பந்தல்போட்டு மகம்மதியர் கூடி 'பாத்தியா' செய்கிறார்கள். இதற்கு முக்கியமாய் சர்க்கரையை வழங்குகிறார்கள். பிரார்த்தனை செலுத்துகிறவர்கள் நாடா என்னும் ஒருவகை நூலை அணிந்து கொள்ளுகிறார்கள். சில இந்துக்களும் இதைச் செய்கிறார்கள்.

4. இந்தப் பண்டிகை பத்துநாள் நடை பெறுகின்றது. இந்தப் பத்துநாளும் ஊர்கோலம் வரும் போது வாத்தியங்களின் கோஷமும், வேஷம் போட்டுக்கொள்வோர் இடும் இரைச்சலும் கேட்டுச் சகிக்க முடியாது. பத்தாம்நாள் கைபோன்ற ஒரு உருவத்தை அலங்கரித்து ஊர்கோலம் வருவார்கள். ஹுஸேன் தேகத்தைப் பத்தாம்நாள் இரவு ஒரு நீர் நிலைக்கு அருகிலிருந்த இடுகாட்டில் அடக்கம் செய்யப் போகையில், அல்லா (கடவுள்) வந்து அந்த தேகத்தைத் தாங்கிக்கொண்டதாகச் சொல்லுகிறார்கள். அநேகர் அப்போது உருக்கமான பாடல்கள் பாடுகின்றனர். பக்தியுள்ள மகம்மதியர் பத்துநாளும் இரவுதோறும் பிரார்த்தனை செய்து தோத்திரம் செய்வார்கள்.

5. தென் இந்தியாவில் சில இந்துக்களும் இந்தப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். நாகரிகமற்ற மனிதர்கள் புலி, கரடி, திருடன் முதலிய வேஷங்களைப் போட்டுக்கொண்டு தெருத்தெருவாய் உலவி ஆரவாரம் செய்வார்கள். மகம்மதிய அரசர் காலத்தில் அந்த அரசர்களுக்கு சந்தோஷமுண்டாக்க இந்துக்களும் இவ்வாறு செய்தார்கள். அந்த வழக்கம் இன்னும் தொடர்ந்து வருகிறது. இந்தப் பண்டிகையின்போது அனைவரும் 'ஆலி - ஜூலா, ஹுஸேன் - ஹுஸேன்' என்று இரைச்சலிட்டுக்கொண்டு சொல்கிறார்கள்.

## 50. நல்லொழுக்கம்

நல்லொழுக்கம் என்பது நல்ல நடக்கை. இதில் அடக்கம், பொறுமை, அன்பு, இரக்கம் முதலிய பற்பல நற் குணங்களும் அடங்கும். பொதுவில் யோக்கியன் என்று பெயரெடுத்தலே நல்லொழுக்க முடையவனாய் இருப்பதற்கு அடையாளமாம்.

2. ஒவ்வொருவனும் புத்திசாலியாகவும், சாமர்த்திய முடையனாகவும் இருப்பது அருமை. ஆனால், ஒவ்வொருவனும் நல்லொழுக்கமுடையவனாக இருத்தல்கூடும். ஒருவன் எவ்வளவு மந்தனாக இருந்தாலும், அடக்கம், பொறுமை முதலிய குணங்களை அனுசரித்து நல்லொழுக்கமுடையவனாக இருப்பதில் தடையென்ன.

3. நல்லொழுக்கமுடையவன் வீட்டிலும் வெளியிலும் தன்னிடத்தும் பிறரிடத்தும் அனுசரிக்க வேண்டிய விதிகள் சிலவுண்டு. அவையாவன —

4. வீட்டில் பெரியோரிடத்தில் அடங்கி, அவர்கள் சொற்படி நடத்தல் வேண்டும். சிறியோரிடத்தில் அன்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

5. வீதிகளிற் செல்லும்போது அமைந்து நடத்தல் வேண்டும். பெரியோரைக் கண்டால் பணிதல் வேண்டும். சபைகளிற் சென்றால், அடங்கி, அமர்ந்திருத்தல் வேண்டும். அங்குப் பேசும்படி நேரிட்டால், மரியாதையோடு பேசவேண்டும். பிறருக்கு எவ்வகையிலும் துன்பம் நேரிடாதபடி நடந்துகொள்ள வேண்டும்.

6. பிறர் நமக்கு எதைச் செய்தால் நமக்கு இஷ்டமாயிருக்குமோ அதையே நாமும் பிறருக்குச் செய்ய

வேண்டும். தன்னைப்போல் பிறரையும் நேசித்தலே தகுதியானது. பிறர் செல்வத்தைக் கண்டு பொறாமைப்படுதல் நல்லொழுக்கத்தை நாசமாக்கும்.

7. உயிர்போனாலும் ஒழுக்கத்தை விடலாகாது. ஒழுக்கம் தவறினால் உலகமழியுமட்டும் பழி நீங்காது. ஒழுக்கம் தவறாமல் உயிரைவிட்டால் பூமியுள்ளவரையில் புகழ் நிலைக்கும். இதனால் உயிரினும் ஒழுக்கமே சிறந்தது என்பது பெறுகின்றோம்.

The End.

# கட்டுரை எழுதும் முறை

கட்டுரை எழுதுவதில் முக்கியமான அமிசங்கள் இரண்டு; அவை — விஷயம், பாஷைநடை என்பனவாம். இவற்றுள், விஷய உணர்ச்சியை, பல நூல்களில் பயில்வதாலும், தான் காணும் விஷயங்களையும், பொருள்களையும் உற்றுக் கவனிப்பதாலும் அடைதலாகும். பாஷை நடையோ அப்படி அமைவதன்று. ஒவ்வொருவருக்கும் முகமும், குரலும், கையெழுத்து முதலியவும் வேறுபட்டிருத்தல் போலவே பாஷை நடையும் வேறுபட்டிருக்கும். ஒரு வகுப்பிலுள்ள மாணாக்கர் அனைவரையும் ஒரேவிதமான பாஷைநடை எழுதும்படி செய்வது சாத்தியமன்று. ஆயினும் மாணாக்கர் எத்தகைய நூல்களில் மிகுதியும் பழகுகின்றார்களோ அத்தகைய நூலின் நடையை ஒருவாறு அடைதல் கூடும்.

2. கட்டுரை நன்றாய் எழுத வேண்டுமாயின், சொற்களும் சொற்றொடர்களும் செவ்வையாய் அமையவேண்டும். உரைநடையில் வழங்கும் சொற்கள் யாவர்க்கும் விளங்கக் கூடியவையாயும், மயங்கவையாதனவாயும் இருத்தல் வேண்டும். அனாவசியமாய் அந்நிய பாஷைப் பதங்களை உபயோகித்தல் கூடாது. ஆனால், வழக்கத்தில் இருக்கும் சொற்களை விட்டு கடின பதங்களை உபயோகித்தலும் கூடாது. 'ஹைகோர்ட்டு' என்பதற்கு 'உயர் நீதித்தலம்' என்றும், 'பார்லிமெண்ட்டு' என்பதற்குப் 'பாராளும் மன்று' என்றும் கட்டியுரைத்தல் சரியன்று.

3. வாக்கியங்கள் தெளிவாய் ஆற்றொழுக்காய் நடைபெறவேண்டும். எழுதுவோர் எந்தக் கருத்-துக்கொண்டு எழுதுகிறார்களோ, அதே கருத்து படிப்-போர் மனத்தினும் பதியவேண்டும். அவ்வாறு எழுதுகையில் சந்தோஷம், கோபம், பயம், வீரம் முதலிய ரசங்கள் தோன்ற எழுதவேண்டும். மரபுச் சொற்கள், பழமொழிகள் முதலியவற்றை ஏற்றவிடத்-தில் அமைத்தெழுதினால் இனிமையாக இருக்கும். சுலபமாயும் இனிமையாயும் தனிவாக்கியங்களாயும் அமைய எழுதுவதே உத்தமமான உரைநடையாம்.

4. கட்டுரை எழுதுவதில் கடினசந்திகளை அமை-த்து எழுதல் கூடாது; வேண்டிய சந்திகளை விடுத-லும் கூடாது. 'முள் + தாள் + தாமரை' என்பதை 'முட்டாட்டாமரை' என்றும், 'கண் + திறந்தது' என்-பதை கண்டிறந்தது என்றும் எழுதுதல் சிறப்பன்று. அன்றி, 'வாழை + பழம்' என்பதை 'வாழைப்பழம்' என்றெழுதாது, 'வாழைபழம்' எனவும், 'தமிழ் + பாஷை' என்பதை 'தமிழ்ப்பாஷை' என்றெழுதாது 'தமிழ்பாஷை' எனவும் எழுதுவது தவறாகும்.

5. கட்டுரை எழுதுகையில் கொடுத்துள்ள விஷ-யத்தை கவனித்து எழுதவேண்டும். அப்படிச் செய்-யாமையால் பலர், கேட்ட விஷயத்திற்கு முற்றும் வேறான விஷயத்தை எழுதிவிடுகின்றனர். "தபாலின் பயன் என்ன?" என்று கேட்டிருப்பதை, "பாலின் பயன் என்ன?" என்று படித்துக்கொண்டு எழுதினால் என்னாகும். விட்டது ஓர் எழுத்தேயாயினும் கெட்-டது முற்றுமல்லவா ?

6. கட்டுரை எழுதத் தொடங்குமுன், தான் எழுதப்புகும் விஷயத்தைப்பற்றித் தனக்குத் தெரிந்த

விஷயங்களைத் தனியே குறித்துக்கொண்டு, பிறகு அவற்றை வகைப்படுத்தி வகுத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடில், விஷயத்தில் முறை ஏற்படாது. பிறகு சொன்னவற்றையே சொல்ல நேரிடும். எடுப்பது இன்னது முடிப்பது இன்னது என்று தெரியாமற் போய்விடும். (இந்த அமைப்புக்களை இப்புத்தகத்திலுள்ள கட்டுரைகளிற் காண்க.)

7. ஒவ்வொரு அமைப்பையும் ஒவ்வொரு பத்தியாக எழுத வேண்டும். எழுதும்போது நிறுத்துப் புள்ளிகள் அமைக்கவேண்டிய இடங்களைக் கவனித்து அவற்றை அமைப்பதும் அவசியமாம்.

8. எதை எழுதினாலும் கையெழுத்துத் தெளிவாய் இருக்கவேண்டும். எழுத்துக்களை தனித்தனி சரியான உருவத்துடன் எழுதவேண்டும். எழுத்துக்கள் நெருங்கியும் பதங்கள் விலகியும் இருக்கவேண்டும். வரிகளின் இடையில் போதுமான இடம் விடவேண்டும், வேண்டும்போது வரி பிளந்து எழுதும்படி இருக்கவேண்டும். வரிகளின் முடிவில் பதங்களை உடைக்க நேர்ந்தால், வேறு அர்த்தம் கொடாதபடி உடைத்தெழுதவேண்டும். 'அதுவே+சரி' என்னும் தொடரில் அது என்பதை ஒரு வரியின் முடிவில் எழுதி, வேசரி என்பதை அடுத்த வரியின் முதலில் எழுதினால் அர்த்தம் கெட்டுப் போகும். இதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.

9. மற்றும் கட்டுரை எழுதும் விஷயமாய் உபாத்தியாயர்கள் அவ்வப்போது போதிக்கும் விஷயங்களையும் கவனித்தெழுதல் நலம்.

3433